Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 04 | திருவள்ளுவர் ஆண்டு 2045 ஆடி 14 புதன்கிழமை (30.07.2014) | பக்கங்கள் 20 | ஓசை – 302

# உள்நாட்டு விசாரணை பொறிமுறைக்கு ஒத்துழைப்பு வழங்காத மேற்குலகம்

## ஆணைக்குழு தலைவர் விசனம்



(கொழும்பு)

இலங்கையில் போரின்போது இடம்பெற்றதாகக் கூறப்படும் சம்பவங்கள் தொடர்பாக நம்பகமான விசாரணைகளை நடாத்தவேண்டுமென வலியுறுத்திய மேற்கு நாடுகள் அவ்வாறு உள்நாட்டு விசாரணைகளை மேற்கொள்வதற்கு தமது ஒத்துழைப்பை வழங்கவில்லையென காணாமற்போனோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டுவரும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பரணகம விசனம் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

போரின்போது, தமது நாடுகளில் குடியேறிய தமிழர்கள் தொடர்பான தகவல்களை வழங்கும்படி, பல மேற்குலக நாடுகளிடம் வேண்டுகோள் விடுத்திருந்தோம்.

ஏனென்றால், காணாமற் போனவர்கள் தொடர்பான விசாரணைகளுக்கு இந்தத் தகவல்கள் முக்கியமானவை.

ஆனால், அவர்களிடம் இருந்து எந்த சாதகமான பதிலும் கிடைக்கவில்லை.

வடக்கு, கிழக்கில் முன்னர் காணா

(19) ஆம் பக்கம் பார்க்க

## முன்கூட்டிய நிகழ்ச்சி நிரலின்படி தயாரிக்கப்பட்டதா அறிக்கை?

### குற்றச்சாட்டை மறுக்கும் நவிப்பிள்ளை

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை முன்கூட்டியே தயாரிக்கப்பட்ட நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்பவே தயார் செய்யப்பட்டதென்ற குற்றச்சாட்டை நிராகரித்துள்ளார். ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை.

அல் ஜெசீரா தொலைக்காட்சியில் இடம்பெற்ற ரோக்குஅல் ஜெசீரா என்ற நிகழ்ச்சியின் போதே, நவநீதம்பிள்ளை தம் மீதான இந்தக் குற்றச்சாட்டை நிராகரித்தார். ஐக்கிய நாடுகள் சபையில் நவநீதம்பிள்ளையின்

(19) ஆம் பக்கம் பார்க்க

## பொதுபலசேனா அமைப்புடன் அரசுக்கு நெருங்கிய தொடர்பு

### மதசுதந்திர அறிக்கையில் அமெரிக்கா

சிறுபான்மை மதத்தினருக்கு எதிரான வன்முறைகளில் ஈடுபடும் பொதுபலசேனாவுக்கும், இலங்கை அரசாங்கத்திற்கும் இடையில், பலமான தொடர்புகள் இருப்பதாக உள்ளூர் ஊடகங்களும், அரச சார்பற்ற நிறுவனங்களும் நம்புவதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன் கெரி நேற்று முன்தினம் வெளியிட்ட மத சுதந்திரம் தொடர்பான 2013ஆம் ஆண்டுக்கான உலகளாவிய அறிக்கையிலேயே, இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

பிற மதத்தினர் மீதான வன்முறைகளில் பொதுபலசேனா உள்ளிட்ட பௌத்த அடிப்படைவாத அமைப்புகள் ஈடுபட்டுள்ளதாகவும், இதற்கு இலங்கை அரசாங்கம் பாதுகாப்பு அளிப்பதாகவும், இந்த அறிக்கையில் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

அத்துடன், பௌத்தர்கள் வசிக்காத வடக்கில் படையினரால், அதிகளவு பௌத்த ஆலயங்கள் நிறுவப்பட்டு வருவது குறித்தும் இந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பெரும்பான்மையின பௌத்தர்களின் அரசாங்கத்திற்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடந்த 27 ஆண்டுகால

(19) ஆம் பக்கம் பார்க்க

## இறுதிப்போரில் நடந்தது என்ன? சரியான தகவலை வழங்குங்கள்

### அரசுக்கு கூறுகிறது ஜப்பான்

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரில் என்ன நடந்தது என இலங்கை அதிகாரிகளுக்குத் தெரியும் எனவே அதன் உண்மைத்தன்மையை ஐ.நா.வின் விசாரணைக்குழுவிற்கு வழங்க வேண்டுமென ஜப்பான் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர்நொபுஹிடோ ஹோபோ இவ்வாறு தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளுடன் நடத்திய போர் தொடர்பான முறையான தகவல்களை ராஜபக்ஷ அரசாங்கம் கொண்டிருந்தது.

போரின் இறுதிக்கட்டத்தில் என்ன நடந்தது என்று இலங்கை அதிகாரிகளுக்குத் தெரியும்.

அதுபற்றிய சரியான தகவல்களை அவர்கள் ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் பணியகத்தின் விசாரணைக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

ஐ.நா. விசாரணைகளை

(19) ஆம் பக்கம் பார்க்க

## பாப்பாண்டவரின் விஜயம் உத்தியோகபூர்வ அறிவிப்பு

பாப்பாண்டவர் பிரான்சிஸ்ஸின் இலங்கை மற்றும் பிலிப்பைன்ஸிற்கான விஜயம் எதிர்வரும் ஜனவரி மாதம் 12 முதல் 19ஆம் திகதி வரையில் இடம்பெறும் என வத்திக்கான் அறிவித்துள்ளது.

பாப்பாண்டவரின் இலங்கை மற்றும் பிலிப்பைன்ஸிற்கான விஜயம் ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது. இதன்போது அவர், பிலிப்பைன்ஸில் சூறாவளியால் பாதிக்கப்பட்ட மக்களை சந்திக்க

(19) ஆம் பக்கம் பார்க்க

## யாழ். ஊடகவியலாளர்களிடம் மூன்று மணிநேர விசாரணை

### சாட்சியப்பதிவு என்கிறது பொலிஸ்

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஊடகவியலாளர்கள் ஏழு பேரை. யும் ஓமந்தைப் பொலிஸார் நேற்றையதினம் முற்பகல் 11மணியிலிருந்து 2 மணிவரை 3 மணி நேரமாக விசாரணைக்கு உட்படுத்தினர்.

கடந்த வெள்ளிக்கிழமை ஓமந்தை சோதனைச்சாவடியில் இடை மறிக்கப்பட்ட ஊடகவியலாளர்கள் பொலிஸாரால் விசாரணைக் குட்படுத்தப்பட்ட பின். னர் விடுவிக்கப்பட்டனர். அவர்கள் பயணித்த வாகனத்தில் போதைப் பொருள் இருந்ததாகக் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

இது தொடர்பில் அன்றைய தினம் ஊடகவியலாளர்களால் ஓமந்தை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பில் விசாரிக்கவே நேற்று ஊடகவியலா

(19) ஆம் பக்கம் பார்க்க

## பருத்தித்துறை கடலில் கைதான 51 இந்திய மீனவருக்கு விளக்கமறியல்



(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட வேளை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 51 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 12ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதாக யாழ். கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள உதவிப்பணிப்பாளர் கணேசமூர்த்தி தெரிவித்துள்ளார்.

நேற்றுக்காலை 6 மணியளவில் பருத்தித்துறை கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்ட இந்த

(19) ஆம் பக்கம் பார்க்க

## வலி.வடக்கு பிரதேச சபையில் முறைகேடான நியமனங்கள்.

### தவிசாளர் மீது உறுப்பினர்கள் குற்றச்சாட்டு .

(யாழ்ப்பாணம்)

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட வலிகாமம் வடக்கு பிரதேச சபையில் அண்மையில் தவிசாளரால் வழங்கப்பட்ட நியமனங்கள் முறைகேடானவையென ஆளும், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

வலிகாமம் வடக்கு பிரதேச சபையில் அட்டவணைப் படுத்தப்படாத பதவி வெற்றிடம் நிரப்புவதற்கான விண்ணப்பங்கள் கடந்த ஜனவரி மாதம் கோரப்பட்டது. அதன் அடிப்படையில் விணண்ப்பித்தவர்களுக்கான நேர்முகப்பரீட்சை கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்றது.

நேர்முகப்பரீட்சையில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு இம்மாதம் ( ஜூலை) 10ஆம் திகதி நியமனங்கள் வழங்கப்பட்டன எனினும் நேர்முகப்பரீட்சை நடைபெற்று நியமனங்கள் வழங்கப்படுவதற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் பணியாளர்களை தெரிவுசெய்வதில் முறைகேடுகள் நடைபெற்றுள்ளதாகவும் த்குதி இல்லாதவர்களை தவிசாளர் தெரிவு செய்ததாகவும் ஆளும்கட்சி கூட்டமைப்பு உறுப்பினர்கள் சிலரும், எதிர்க்கட்சியான ஈ.பி.டி.பியின்

(19) ஆம் பக்கம் பார்க்க

# உழவு இயந்திர சில்லுக்குள் நசியுண்ட குடும்பஸ்தர் மரணம்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி உதயநகர்ப் பகுதியில் நேற்றுக்காலை இடம் பெற்ற விபத்தில் உழவு இயந்திரச் சில்லுக்குள் நசியுண்டு குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார்.

இந்த விபத்துச் சம்பவத்தில் ஆனந்தபுரம் பகுதியைச் சேர்ந்த முத்தையா இராஜரட்ணம் (வயது-48) என்ற குடும்பஸ்தரே உயிரிழந்தவராவார்.

மேற்படி சம்பவம் தொடர்பாகத் தெரியவருவதாவது, இவர் வீட்டில் இருந்து வெளியே செல்வதற்காக உழவு இயந்திரத்தை எடுத்துக் கொண்டு வீதி வழியாக வந்து கொண்டிருக்கும் போது, அது பள்ளத்துக்குள் விழுந்த போது, உழவு இயந்திரத்திலிருந்து தூக்கி வீசப்பட்டார்.

அவர் ஓடி வந்த உழவு இயந்திரம் இவரின் மீது ஏறி வீழ்ந்ததில் சில்லுக்குள் நசியுண்டு சம்பவ இடத்திலேயே பலியாகியுள்ளார். இவரின் சடலம் கிளிநொச்சி வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (25)

# புகையிரதக் கடவைகளில் காத்திருக்கும் ஆபத்து

(யாழ்ப்பாணம்)

யாழ்.புகையிரத நிலையப் பகுதியில் இருந்து கல் ஏற்றிச் செல்லும் ரயிலுடன் புகையிரதக் கடவைப் பகுதிகளின் ஊடாக பயணிக்கும் வாகனங்கள் மோதி விபத்துக்குள்ளாகும் சாத்தியங்கள் ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு கல் ஏற்றுவதற்காக யாழ்.கச்சேரிக்குச் சமீபமாக ஏ-9 வீதியில் உள்ள புகையிரதக் கடவை ஊடாக ரயில் பயணித்த வேளை கொடிகாமத்தில் இருந்து பயணிகளை ஏற்றி வந்த பஸ் வண்டி ஒன்று புகையிரதக் கடவையைக் கடப்பதற்காக வாகனங்கள், பயணிகள், தரித்திருந்த வேளை அதனைப் பொருட்படுத்தாது புகையிரதக் கடவையைத் தாண்டியுள்ளது.

அதேசமயம் ரயிலும் அருகே வந்திருந்தும் விபத்து நடைபெறாது மயிரிழையில் தப்பியது இதன்போது அந்த பஸ் வண்டியில் பயணித்த பயணிகள் மிகுந்த பயப்பீதிக்குள்ளாகியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே பொதுமக்களை ஏற்றிச்செல்லும் பேருந்துகள் புகையிரதப் பாதை புனரமைப்புப் பணிகள் முடிவடைந்து வருவதனால் புகையிரதக் கடவைகளூடாகப் பயணிக்கும் போது மிகுந்த அவதானத்துடன் பயணிக்கும் படி அறிவுறுத்தப்படுகின்றனர். அவ்வாறு இல்லையெனில் தேவையற்ற உயிர்ச்சேதம் ஏற்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பா)

# முன்பள்ளியின் விளையாட்டு விழா

(ஆனைக்கோட்டை)

மானிப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தால் நடத்தப்பட்டு வரும் ஆனைக்கோட்டை உதயதாரகை முன்பள்ளிச் சிறார்களின் விளையாட்டு விழா நாளை நடைபெறவுள்ளது.

மேற்படி முன்பள்ளியின் மைதானத்தில் மாலை 2.00 மணியளவில் இந்த விளையாட்டு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. (104)

# புனரமைக்கப்பட்ட சனசமூக நிலையம் குட்டியப்புலத்தில் திறந்து வைப்பு



(வயாவிளான்)

வயாவிளான் குட்டியப்புலத்தில் புனரமைக்கப்பட்ட அம்பாள் சனசமூக நிலையத்தை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வைபவ ரீதியாக கடந்த ஞாயிற்றுக்கிழமை திறந்து வைத்து மக்களிடம் கையளித்தார்.

குட்டியப்புலம் பகுதிக்கு விஜயம் மேற்கொண்ட அமைச்சர் மேற்படி சனசமூக நிலையத்தை திறந்து வைத்தார்.

நிகழ்வுக்கு முன்னராக மக்கள் பேரணியாகத் திரண்டு மாணவர்களின் இசை அணி வகுப்புடன் அமைச்சரை வீதி வழியே நிகழ்விடத்திற்கு அழைத்து வந்தனர்.

ஆரம்ப நிகழ்வுகளை அடுத்து அமைச்சர் சனசமூக நிலையத்தின் சார்பில் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

தொடர்ந்து அமைச்சரின் நிதியுதவியைக் கொண்டு புனரமைக்கப்பட்ட அம்பாள் சனசமூக நிலைய திறப்பு விழா நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட அமைச்சர் வைபவ ரீதியாக பொதுமக்கள் பாவனைக்கென இந்த நிலையத்தைக் கையளித்தார்.

அரங்கில் அம்பாள் சனசமூக நிலையத் தலைவர் சீத்தாராமன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கல்வி, கலை, கலாசார, சமூகசேவை மற்றும் கல்விப் புலம் சார்ந்து குட்டியப்புலம் கிராமத்தின் மேம்பாட்டுக்காகவும் அபிவிருத்திக்காகவும் உழைத்தவர்களுக்கு இதன் போது அமைச்சர் பொன்னாடை போர்த்தி சான்றிதழ் வழங்கிக் கௌரவித்தார்.

இந்நிகழ்வில், கலைஞர்கள் இருவருக்கு அமைச்சர் தலா 10 ஆயிரம் ரூபா வீதம் பணப் பரிசில்களை வழங்கி வைத்த அதேவேளை, மூத்த கலைஞர் ஒருவருக்கு மேடையிலிருந்து கீழிறங்கி வந்து பொன்னாடை போர்த்திக் கௌரவித்திருந்தமை அங்கு கூடியிருந்த மக்களின் கவனத்தை பெரிதும் கவர்ந்திருந்தது.

இதேபோன்று, இந்த நிகழ்வில் இசை அணிவகுப்புக்காக வருகை தந்திருந்த குட்டியபுலம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மாணவியொருவர் வாகன விபத்தில் காயமடைந்திருந்த நிலையில் அவரது மருத்துவ நிதியையும் அமைச்சர் நேரில் வழங்கியிருந்தமையும் விசேட அம்சமாகும்.

நிகழ்வில், அமைச்சர் உரையாற்றும் போது இங்கு முன் வைக்கப்பட்ட கோரிக்கைகள் மற்றும் தேவைகள் தொடர்பில் ஆராய்ந்து அவற்றை முன்னுரிமையடிப்படையில் கட்டம் கட்டமாகத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமெனத் தெரிவித்தார்.

இதனிடையே, அப்பகுதியிலுள்ள அபிராமி அம்மன் ஆலயத்தின் புனரமைப்புப் பணிகளையும் அமைச்சர் பார்வையிட்டார்.

இதன்போது ஈ.பி.டி.பி.யின் வலிகாமம் இணைப்பாளர் ஜீவன், ஈ.பி.டி.பி.யின் தெல்லிப்பளை இணைப்பாளர் ஜெயபாலசிங்கம், ஈ.பி.டி.பி.யின் சுன்னாகம் இணைப்பாளர் வலண்டயன் உள்ளிட்ட துறை சார்ந்த பலரும் கலந்து கொண்டனர்.

# போக்குவரத்துக்கு இடையூறு

(சுன்னாகம்)

யாழ்.நகரின் மத்தியில் கஸ்தூரியார் வீதியில் இரு பக்கமும் சைக்கிள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் நிறுத்தப்படுவதனால் நகரின் மத்தியில் இருந்து வெளியேறும் வாகனங்கள், பயணிகள் சேவை பஸ்கள் மற்றும் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

ஒரு வழிப்பாதையாக உள்ள கஸ்தூரியார் வீதிக் கடைகளுக்கு முன்னர் இருபக்கமும் வாகனங்கள் நிறுத்துவதாலேயே இவ்வாறான சிக்கல் நிலை தோன்றியுள்ளது.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுப்பதன் மூலம் இவ்வாறான போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க முடியும் என பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். (60)


# ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 1078

திகதி 28.07.2014

வெற்றி எண்கள் — ஆங்கில எழுத்து

27 32 34 41 A

ஜக்பொட் பரிசு ரூ. 3,47,48,800/= வெல்லப்படவில்லை

| பரிசு அமைப்பு | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 0 | 3,47,48,800/= | ரூ. - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 1 | 10,00,000/= | ரூ. 10,00,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 7 | 50,000/= | ரூ. 3,50,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 259 | 1,000/= | ரூ. 2,59,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 449 | 1,000/= | ரூ. 4,49,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 11847 | 60/= | ரூ. 7,10,820/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 6170 | 40/= | ரூ. 2,46,800/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 154954 | 20/= | ரூ. 30,99,080/= |
| ஆங்கில எழுத்து | 22507 | 20/= | ரூ. 4,50,140/= |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 65,64,840/=

எதிர்வரும் வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா. 35,052,180/=

செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2014.07.31 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை

(C/3733)


# சிறுமி மீது துஷ்பிரயோக முயற்சி குடும்பஸ்தர் கைது

(வடமராட்சி)

வடமராட்சி, அல்வாய் வடக்குப் பகுதியினைச் சேர்ந்த 13 வயதுச் சிறுமியொருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்ய முற்பட்ட குற்றச்சாட்டில் அதே இடத்தினைச் சேர்ந்த 40 வயதுடைய 5 பிள்ளைகளின் தந்தையினை சந்தேகத்தின் பேரில் கடந்த திங்கட்கிழமை கைது செய்ததாக பருத்தித் துறைப் பொலிஸார் நேற்று தெரிவித்தனர்.

இது பற்றி மேலும் தெரியவருவதாவது,

சிறுமியின் வீட்டிற்கு அருகில் வசித்து வரும் மேற்படி சந்தேகநபர் சிறுமியின் குடும்பத்துடன் சிநேகமாகப் பழகி வந்துள்ளார்.

இந்நிலையில், மேற்படி சிறுமியினைக் கடந்த திங்கட்கிழமை பாடசாலைக்கு துவிச்சக்கர வண்டியில் அழைத்துச் செல்வதாகக் கூறி, சந்தேகநபர் வியாபாரிமூலைப் பகுதியிலுள்ள பற்றைக்குள் சிறுமியை அழைத்துச் சென்றுள்ளார்.

இதனை அவதானித்த அப்பகுதியில் நின்றிருந்த இளைஞர்கள் பொலிஸாருக்கு தகவல் கொடுத்துள்ளனர். இதனையடுத்து அவ்விடத்திற்குச் சென்ற பொலிஸார், சந்தேகநபரை கைது செய்துள்ளனர்.

தொடர்ந்து, சிறுமியை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் மருத்துவ பரிசோதனைக்காக அனுமதித்து அவர் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு ஆளாகவில்லை என மருத்துவ அறிக்கை கிடைக்கப்பெற்றதும் சிறுமியை பெற்றோரிடம் ஒப்படைத்தனர்.

இதனைத் தொடர்ந்து, மேற்படி சந்தேகநபரை யாழ். சிறுவர் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (18)


## சிறு விளம்பரம்

**டயானா பிளாஸ்ரிக் றீசைக்கிள் (மீள்சுழற்சி)**

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.06 கனகசபை லேன்.
சிவலிங்கப்புளியடி.
வண்ணார்பண்ணை.
யாழ்ப்பாணம்.
021 222 8680,
077 592 5088.
(C/3395)

**தவறிவிட்டது**

கடற்கரை வீதி, நீர்கொழும்பைச் சேர்ந்த தியாகராஜா தவராஜா என்பவருடைய தே.அ. அட்டை (673240577V) பளைக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் வவுனியா பஸ்ஸில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து தொடர்பு கொள்ளவும். தொடர்பு : 077 3973164 (C/3752)

# நல்லூர் திருவிழாவுக்கான வீதித்தடைகள் பகலில் 2 மணிநேரம் அகற்றப்படும்

## யாழ்.மாநகர முதல்வர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தினைச் சூழவுள்ள வீதிகளில் போடப்பட்டுள்ள வீதித்தடைகள் பகல் நேரத்தில் மட்டும் 12 மணி தொடக்கம் 2 மணி வரை அகற்றப்பட்டிருக்கும் என யாழ்.மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசா நேற்று முன்தினம் தெரிவித்தார்.



நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை மறுதினம் ஆரம்பமாவதையடுத்து, அதற்கான ஏற்பாடுகள் குறித்த விசேட ஊடகவியலாளர் கலந்துரையாடல் யாழ்.மாநகர சபையில் இடம்பெற்றது.

இதன்போது கருத்துத் தெரிவிக்கையிலே மாநகர முதல்வர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில்,

கடந்த நல்லூர் திருவிழாக் காலங்களில் பகல் வேளைகளில் சில மணி நேரங்களும், இரவில் 9 மணிக்கு பின்னரும் நல்லூரை சுற்றியுள்ள வீதித்தடைகள் அகற்றப்பட்டுவந்தன.

ஆனால் இம்முறை இதில் மாற்றம் கொண்டு வரப்பட்டு, நல்லூர் ஆலயச் சூழலிலுள்ள கடைகளுக்கு பொருட்களைக் கொண்டு வருவதிற்காகவும், ஆலயச் சூழலிலுள்ள வீடுகளில் வசிப்பவர்கள் பொருட்களைக் கொண்டு சென்று வருவதற்காகவும் பகலில் இரண்டு மணி நேரம் மட்டும் வீதித்தடை அகற்றப்பட்டிருக்கும்.

இதனைத் தவிர்த்து ஏனைய நேரங்களில் வீதித் தடைகள் போடப்பட்டிருக்கும் என முதல்வர் மேலும் தெரிவித்தார். (48)

# பரீட்சை வழிகாட்டி கருத்தரங்கு



(சண்டிலிப்பாய்)

சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனமும் காரைநகர் பிரதேச இளைஞர் கழகசம்மேளனமும் இணைந்து தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு இலவச புலமைப்பரிசில் பரீட்சை வழிகாட்டி கருத்தரங்கை நடாத்தியது.

இக் கருத்தரங்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி முதல் காரைநகர் கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது. இக் கருத்தரங்கில் வளவாளராக பிரபல ஆசிரியர் கு.கலாமோகன் கலந்து கொண்டார்.

ஆரம்ப நிகழ்வில் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான அனந்தி சசிதரன், பா.கஜதீபன், காரைநகர் பிரதேசசபைத் தவிசாளர் ஆனைமுகன், சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் க.உஷாந்தன், சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர்கழக சம்மேளனத் தலைவர் ச.செந்தில்குமரன், காரைநகர் பிரதேச இளைஞர்கழக சம்மேளன உறுப்பினர்கள் எனப்பலர் கலந்து கொண்டனர். (48)

# "கூவாதே கூடுகட்டு" கவிதை நூல் வெளியீடு



கவிஞர் மாணிக்கம் ஜெகனின் 'கூவாதே கூடுகட்டு' கவிதை நூல் வெளியீட்டு விழா வவுனியா சுத்தானந்தா இந்து இளைஞர் மண்டபத்தில் தமிழ்மணி அகளங்கன் தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்றது.

கவிஞர் மாணிக்கம் ஜெகன் தனது உள்ளக்கிடக்கைகளை சமகாலத்திற்கு ஏற்ற வகையில் சமூகத்துடன் இணைந்ததாக இக் கவிதைத் தொகுப்பில் வெளிப்படுத்தியுள்ளார். இந் நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், செல்வம் அடைக்கலநாதன், வடமாகாண சுகாதார அமைச்சர் வைத்தியகலாநிதி ப.சத்தியலிங்கம், வடமாகாண கல்வி அமைச்சர் குருகுலராஜா, வடமாகாணசபை உறுப்பினர் ம.தியாகராஜா, வடமாகாண மீன்பிடி போக்குவரத்து அமைச்சின் மாவட்ட இணைப்பாளர் செந்தில்நாதன் மயூரன், புளொட் அமைப்பின் மத்தியகுழு உறுப்பினரும் வன்னி மாவட்ட அமைப்பாளருமாகிய பவன், வவுனியா முன்னாள் நகரசபைத் தலைவரும் புளொட் முக்கியஸ்தருமான சந்திரகுலசிங்கம், உள் ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.




### ஆமிக்குக் காணி - 06

# எரிந்து கந்தறுந்த பின்னும் நெருப்பெடுத்து நிற்பவர்கள்...

என்னதான் நியாயங்கள் இருந்தாலும் பொதுசனங்களின்ரை காணியை ஆமி அபகரிக்கிறதை ஆராலையும் ஏற்றுக்கொள்ள ஏலாது.

அதிலையும் மயிலிட்டி, வளலாய், பலாலி போன்ற மக்கள் வளமாக வாழ்ந்த இடங்களை அப்பிடியே கொள்ளையடிக்கிறதென்டால்....?

'எங்கட காணியைப் படையினர் பிடிச்சு வைச்சிருந்தால், அரசாங்கக் காணியை நாங்களும் அத்துமீறிப் பிடிப்பம்' என்டு சொல்லியிருக்கிற வலி வடக்குச் சனங்களை நான் பாராட்டுறன்.

போர் முடிஞ்சாப்பிறகு எல்லாரும் நினைச்சது....

'மீண்டும் எங்கட எங்கட ஊர்களுக்குப் போகலாம். எங்கட வீட்டுக்குப்போய்... எங்கட கிணத்தில தண்ணியள்ளிக் குடிக்கலாம். எங்கட கோயிலுக்குப்போய் கும்பிடலாம். எங்கட விளையாட்டு மைதானத்தில விளையாடலாம். நான் படிச்ச பள்ளிக்கூடத்தில என்ரை பிள்ளையையோ பேரப்பிள்ளையையோ படிக்க வைக்கலாம்....' இப்பிடித்தான் ஒவ்வொருத்தரும் நினைச்சுக் கொண்டிருந்தம்.

ஆனால், வாயில மண் விழுந்ததைப்போல, நாசமறுப்பாற்றை அரசியல் சூத்துகளால இப்ப ஊருக்கும் போகேலாது. உள்ளூரிலயும் இருக்கேலாது என்டாகீட்டுது.

ஊரில இருக்கிற காணியை இதுவரையும் சும்மா வைச்சிருந்த படைகள் இப்ப அதைச் சட்டபூர்வமாக வைச்சிருக்கிற அளவுக்கு வந்திருக்கு.

இந்தப் பிழைக்கெல்லாம் தமிழ் அரசியல் தலைமைகள் ஒரு காரணம் என்டால், அதை ஒரு சாட்டாக வைச்சுக்கொண்டு, ஊரவையின்ரை உறுதிக்காணிகளை அடாத்துப்பண்ணிப் பிடிக்கிற அரசாங்கத்தின்ரை நடவடிக்கைகளிலயும் ஞாயமில்லை.

இப்பிடிச் செய்யிறது நாட்டுக்கோ மக்களுக்கோ நல்லதுமில்லை.

இது ஒரு பச்சைப் பிழை. நம்பிக்கைத் துரோகம் என்டுதான் சொல்லுவன்.

'ஆரோ செய்து கொண்டிருக்கிற பிழை என்டு தெரிஞ்சு கொண்டே எங்களைப் பழிவாங்கிற காரியம் இது' என்டு பாதிக்கப்பட்டிருக்கிற சனங்கள் சொல்லிறதை ஆரும் மறுக்கேலாது.

இப்பிடித்தான் முந்தி முந்தியும் நடந்தது.

சிலவேளை அரசாங்கமும் படைகளும் நினைக்கலாம், 'நடந்த தேர்தல்களில எல்லாம் கூட்டமைப்புக்கு ஆதரவாக வாக்குப்போட்டவை, கூட்டமைப்போட சேர்ந்து கொண்டு, அரசியல் சவால்களை அரசாங்கத்துக்கு எதிராக விடுகிறவைக்கு ஒரு நல்ல பாடம் படிப்பிக்க வேணும். அதுக்கு இப்பிடிக் காணியை எடுக்கிறது ஒரு நல்ல பாடமாக இருக்கும்' என்டு.

ஆனால், இது ஒரு சரியான வழிமுறையில்லை. இப்பிடிச் செய்தால் இன்னும் இன்னும் சனங்கள் அரசாங்கத்தை விட்டு அந்நியப்படுமே தவிர, அரசாங்கத்துக்குக் கிட்ட வராது.

இப்பிடிப் போனால் சும்மா இருக்கிற கூட்டமைப்புத்தான் இதின்ரை பலனைப் பெறும்.

சந்தேகமேயில்லை, இது கூட்டமைப்புக்குப் பலம் சேர்க்கிற ஒரு காரியம்தான்.

இதைத்தான் நான் முதல்லயே சொன்னன், **'நீ அடிக்கிற மாதிரி அடி. நான் அழுகிற மாதிரி அழுகிறன்'** என்டு.

வடக்கில கூட்டமைப்புப் பலமாக இருந்தால்தான் தெற்கில தங்களுக்குச் சிங்களச் சனத்தின்ரை வாக்குகள் விழும் என்ட இனவாதச் சிந்தனை இது.

சரி போகட்டும். இனவாத அரசியல்ல இதெல்லாம் சகஜம்தான்.

இப்ப நாங்கள் ஆமிக்குக் காணி என்ட விசயத்தைப்பற்றிப் பார்ப்பம்.

ஆமிக்கு காணியை நிரந்தரமாக எடுக்க நினைக்கிறது சுத்த முட்டாள்தனமான விசயம் என்டதிலை மாற்றுக்கருத்தில்லை.

'ஆமிக்கு அச்சுறுத்தல், நாட்டுக்கு அச்சுறுத்தல்' என்ட மாதிரிப் பிரச்சினைகள் வாறது என்டதுக்காக சனங்களின்ரை காணியைப் பறிக்கிறதும் அடாத்துப்பண்ணிறதும் ஞாயமில்லை.

அதுவும் பரம்பரை பரம்பரையாக இருந்த காணிகளை எல்லாம் பிடிக்கிறதும் அளக்கிறதும் சனங்களுக்குச் செய்யிற பச்சைத் துரோகமே.

சமாதானம் பற்றிய கனவோட இருந்த சனங்களைக் கொண்டுபோய் முள்ளுப்பத்தையிக்கை தள்ளுகிற காரியம் இது.

இந்தத் துரோகத்தை அரசாங்கம் தன்ரை சொந்த மக்களுக்குச் செய்யக் கூடாது. தமிழ்த்தேசியவாதிகளும் இந்தத் தவறை ஒரு முடிவுக்குக் கொண்டு வரவேணும்.

மக்களுக்குப் பாதுகாப்பு, நாட்டுக்குப் பாதுகாப்பு என்டதெல்லாம் தேவைதான். ஆனால், அதுக்கொரு நியாயமும் வழிமுறையும் இருக்கு.

படைகளை நிரந்தரமாக சனங்களின்ரை பகுதிகளுக்குள்ள வைச்சிருக்கிறதுக்கு இதொண்டும் கம்போடியாவோ, ஆபிரிக்க நாடுகளோ அல்ல.

அங்க கூட அப்பிடி இருந்தால் பிழைதான்.

நாங்கள் மிகப் பெரிய இழப்புகளையெல்லாம் சந்திச்சே இந்த நிலைமைக்கு வந்திருக்கிறம்.

சரி, இனியாவது அமைதியோ, சமாதானமோ, நிம்மதியோ, சொந்த ஊரில வாழ்க்கையோ கிடைக்கும் என்டிருந்தால், அதில மண்ணள்ளிப்போடுறது சரியே இல்லை.

இப்பிடி மண்ணள்ளிப் போட்டதாலதான் தமிழ் – சிங்களம் – முஸ்லிம் என்ட பேதமில்லாமலே எல்லாத் தரப்பிலயும் அழிவுகளும் இழப்புகளும் நடந்தது.

இந்த நாடே தீப்பற்றி எரிஞ்சதே.

இதில இருந்து இன்னுமா ஆரும் பாடம் படிக்கேல்ல?

சந்தேகம், நம்பிக்கைக்கு எதிரானது அல்ல.
அதன் ஒரு பாகமே. - உளநோக்கு.

தினமுரசு
THINAMURASU
தினப்பதிப்பு
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## என்செய்வார்கள் எம் தலைவர்கள்?

இந்த நாட்டில் இனப்பிரச்சினைக்குத் தீர்வொன்றைக் காண்பதற்கான நமது இத்தனை ஆண்டுகாலப் போராட்ட முயற்சிகளும் நமது மக்களின் வாழ்வை கௌரவமானதாக்கிவிட வேண்டுமென்ற பல்லாயிரம் இளைஞர்களின் மக்களின் தியாகங்களும் கடைசியில் ஒரு போர்க்குற்ற விசாரணையில் தொங்கிக் கொண்டிருப்பதாக மாறிவிட்டது.

எதுவோ அழுகி விழப் போகிறது ஏந்தலாம் என்று ஆட்டுக்குப் பின்னால் போகும் பிராணியைப் போல தமிழ்மக்களை ஜெனீவாவையோ அமெரிக்காவையோ வாய்பார்த்துக் காத்திருக்க வைத்திருக்கின்றனர் இந்தத் தலைவர்களும் தமிழ் ஊடகங்களும்.

இவர்கள் தமிழ்மக்களுக்கு போட்டுக் காட்டும் 'பிலிம் காட்சிகள்' எதுவும் உண்மையில் நடக்காமல் போய்விடுகின்றன. அரசாங்கத்திற்கும் என்னென்னமோ நடக்கப்போகிறதென இவர்கள் தமிழ் மக்களுக்கு விவரித்துக் காட்டிய வில்லங்கங்களும் ஒன்றுமில்லாமல் முடிந்துவிடுகின்றன.

கடந்த ஜெனீவாத் திருவிழா முடிந்த கையோடு, "தென்னாபிரிக்கா இலங்கைக்குப் பிரம்பெடுத்து வருவதாகச் சொல்லிவிட்டது. மக்களே, உங்களுக்கு விருப்பமான தீர்வுத் திட்டங்களை எல்லாம் ஈ–மெயிலில் எங்களுக்கு அனுப்பி வையுங்கள். உங்கள் அபிப்பிராயங்களோடு தீர்வுத் திட்டத்தைத் தயாரிக்க நாங்கள் தயாராகி விட்டோம்" என்றார்கள்.

தென்னாபிரிக்க ரமபோஷ யாழ்ப்பாணமும் வந்து இவர்களுடனும் கதைத்துவிட்டு வாடிய முகத்தோடு திரும்பிப் போனார். மக்களின் அபிப்பிராயங்களோடு தயாரித்த தீர்வுத் திட்டத்தை தென்னாபிரிக்க தூதரிடம் கூட்டமைப்பினர் வழங்கியதாக செய்தி இல்லை. பேச்சுவார்த்தை, தீர்வு என்று போர்க்குற்ற விசாரணையைக் குழப்பிவிட வேண்டாம் என்றுதான் அவரிடம் சொல்லியிருக்கிறார்கள்.

தென்னாபிரிக்காவின் பேச்சுவார்த்தை முயற்சியை இலங்கை அரசாங்கமும், பேரினவாத சக்திகளும் ஏற்றுக்கொள்ளாமல் குழப்பித் திருப்பியனுப்பி விட்டார்கள் என்று தமிழ் ஊடகங்களும் ஒத்தபடி மக்களுக்கு உணர்ச்சியோடு அடித்துச் சொல்ல தலைவர்களும் நிம்மதிப் பெருமூச்சு விட்டார்கள்.

"இலங்கை அரசாங்கம் தீர்வைத் தர விரும்புதில்லை; பேச்சுவார்த்தைக்கு விரும்புதில்லை; சர்வதேசத்தையும் விரும்புதில்லை" என்றால் தலைவர்கள் பாவம் என்ன செய்வார்கள்? அவர்கள் விரும்பினால்தானே இவர்கள் ஏதாவது செய்ய முடியும்? அதாவது இவர்கள் ஏதாவது செய்வதற்கு அவர்கள் (அரசாங்கம்) "விரும்ப" வேண்டியது அவசியமல்லவா?

"வெகு உன்னிப்பாக" இதையெல்லாம் அவதானித்துக் கொண்டிருக்கும் சர்வதேசத்திற்கு, அடுத்த தேர்தலிலும் தமிழர்கள் ஒற்றுமையைக் காட்டினால்... அதன்பிறகு இலங்கை அரசாங்கமும் சர்வதேசம் இங்கு வந்திறங்குவதை விரும்பினால்... அத்தோடு சர்வதேசமும் "13வதிலிருந்து பேசுங்கள்" என்று மொக்குத்தனமாக எதையாவது சொல்லாமலிருந்தால்... அப்போதுதான் தலைவர்களும் தமிழ்மக்களுக்கு எதையாவது செய்ய முடியும்.

அரச வெறுப்பும் சிங்கள வெறுப்பும் நன்றாக ஏற்றிவிடப்பட்டிருக்கும் நமது மக்களுக்கும் இந்த "தர்ம ஞாயம்" வலுந் திறமாக விளங்கும். "நம் தலைவர்கள் ஒண்டையுஞ் செய்ய இந்த அரசாங்கமும் பேரினவாத சக்திகளும் விடுகினமில்லை" என்பதைத் தெளிவுற விளங்கியிருக்கும் நம் கல்தோன்றி மண்தோன்றாக் காலத்து மக்கள், ஒவ்வொரு தேர்தலிலும் சர்வதேசத்துக்கு ஒற்றுமையைக் காட்டிவிடுவதே நம் கடன் என்று நன்குணர்ந்தவர்கள்.

சிங்களவரும் சரியில்லை, சிங்கள அரசும் சரியில்லை, தமிழருடன் ஒற்றுமைக்கு வரத் தெரியாத முஸ்லிம்களும் சரியில்லை, மோடி அரசும் சரியில்லை, தென்னாபிரிக்காவும் அவ்வளவு வாய்ப்பில்லை, பான் கீ முனுக்கும் இலங்கையரசின் ஏமாத்துக்களைப் புரிந்துகொள்ளும் பக்குவமில்லை... என்றால் நம் தமிழ்த் தலைவர்கள்தான் என்செய்வார்கள்?

- ஆசிரியர்.

# வடக்கு முதல்வர் சாட்சியமளிப்பது தேசத்துரோக செயலாகும்

### - தேசப்பற்றுள்ள தேசியஇயக்கம் குற்றச்சாட்டு -

ஐ.நா. விசாரணை ஆணைக் குழுவில் முதலமைச்சர் விக்னேஸ்வரன் சாட்சியமளிப்பது தேசத்துரோக செயலாகும் என தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் பொதுச் செயலாளர் டாக்டர் வசந்த பண்டார தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கைக்கு எதிராக விசாரணைகளை நடத்துவதற்காக ஐ.நா.மனித உரிமை ஆணையாளர் நாயகம் நவநீதம்பிள்ளை நியமித்த சர்வதேச விசாரணைக் குழுவை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை. அத்தோடு அக்குழுவை நிராகரித்ததோடு நாடாளுமன்றத்திலும் அதற்கெதிராக ஏகமனதாக பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ளது .இவ்வாறானதொரு சூழ்நிலையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து வடமாகாண சபையின் முதலமைச்சராக பதவியேற்றுள்ள விக்னேஸ்ரன் எவ்வாறு சர்வதேச விசாரணைக் குழுவின் முன்னிலையில் சாட்சியமளிக்க முடியும். அவ்வாறு சாட்சியமளிப்பது என்பது தேசத்துரோக செயலாகும்.இதற்கெதிராக எவ்வாறான சட்ட நடவடிக்கைகளை எடுக்க முடியும் என்பது தொடர்பில் தெளிவில்லை. ஆனால் சர்வதேச விசாரணைக் குழுவில் முதலமைச்சர் சாட்சியமளிப்பதற்கு எதிராக அரசாங்கம் கடும் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றார்.

# வியாபார கற்கைகள் பீடத்தின் மாணவர்களுக்கு வகுப்புத்தடை

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாகத்தில் இடம்பெற்ற இரு குழுக்களுக்கிடையிலான மோதலையடுத்து வியாபார கற்கைகள் பீடத்தின் மூன்றாம் வருட மாணவர்களுக்கு வகுப்புத்தடை விதிக்கப்பட்டுள்ளதாக வியாபார கற்கைகள் பீட பீடாதிபதி அ. புஸ்பநாதன் தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகத்தில் நேற்றுமுன்தினம் வியாபார கற்கைகள் பீடத்தின் இரண்டாம் மற்றும் மூன்றாம் வருட மாணவர்களுக்கிடையில் இடம்பெற்ற மோதல் சம்பவம் காரணமாக மூவர் வவுனியா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் எவரும் கைது செய்யப்படவில்லை. எனினும் மாணவர்களை சுமூக நிலைக்கு கொண்டு வருவதற்காக மூன்றாம் வருட மாணவர்களுக்கு தற்காலிகமாக வகுப்பு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மாணவர்கள் சமரசம் செய்யும் பட்சத்தில் ஏனைய வருட மாணவர்களைப் போல மூன்றாம் வருட மாணவர்களுக்கும் வகுப்புகள் இடம்பெறும் என அவர் மேலும் கூறினார்.

# விசாரணைக் குழுக்களை ஏற்றுக்கொள்ளமாட்டோம்

### ஜே.வி.பி. பொதுச்செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் இறுதிக்கட்ட யுத்தம் தொடர்பாகவும் மனித உரிமைகள் தொடர்பாகவும் விசாரிப்பதற்காக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நாயகம் நவநீதம்பிள்ளை நியமித்த சர்வதேச விசாரணைக் குழுவையும்,ஜனாதிபதி ஆணைக் குழுவையும் ஏற்றுக்கொள்ள மாட்டோம்என ஜே.வி.பி.யின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

இது எமது நாட்டுப் பிரச்சினைக்குள் பலாத்காரமாக தலையிடும் சர்வதேச முயற்சியாகும். இதனை கடுமையாக எதிர்க்கிறோம்.

அதேவேளை, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நியமித்த மக்ஸ்வல் பரணகம தலைமையிலான ஆணைக்குழு தொடர்பில் எமக்கு உடன்பாடு கிடையாது.

இவ்விரண்டு விசாரணைக் குழுக்களினாலும் நாட்டுக்கோ மக்களுக்கோ நன்மைகள் கிடைக்கப் போவதும் இல்லை.

நீதியான நியாயமான விசாரணைகள் இடம்பெறபோவதுமில்லை.

மாறாக எமது நாட்டுக்குள் சர்வதேச தலையீடுகளே அதிகரிக்கும். எனவே, இவ் விசாரணைக் குழுக்கள் தொடர்பில் எமக்கு அக்கறையில்லை. ஆனால நாட்டுக்கு ஏற்படும் அநீதிக்கு இடமளிக்கமாட்டோம்.

அதனை தடுக்க மக்களை ஓரணியில் திரட்டுவோம். இவ்வாணைக் குழுக்கள் அல்ல உண்மையில் மனித உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டுமானால் ஓய்வு பெற்ற நீதிபதிகள் புத்திஜீவிகள் விசேட நிபுணர்கள் அடங்கிய உள்ளூர் குழுவே நியமிக்கப்பட வேண்டும். இதன் மூலமே சர்வதேச தலையீடுகளை தடுக்க முடியும்: மனித உரிமைகளை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும். நியாயமான விசாரணைகளை நடத்த முடியும் என்றார்.

# பழங்கள் நஞ்சாகாத வகையில் விற்பனை செய்ய அறிவுறுத்து

(யாழ்ப்பாணம்)

வலி. தெற்கு (உடுவில்) பிரதேச சபைக்குட்பட்ட சந்தைகளில் விற்பனை செய்யப்படும் பழங்கள் நஞ்சாகும் வகையில் இரசாயன மருந்து பாவிக்காமல் விற்பனை செய்வதற்கு பழ வியாபாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக பிரதேச சபைத் தவிசாளர் தியாகராசா பிரகாஸ் தெரிவித்தார்.

இது தொடர்பிலான கலந்துரையாடல் பிரதேச சபை மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற போது, அதில் 75 இற்கும மேற்பட்ட பழ வியாபாரிகள் கலந்துகொண்டிருந்தனர். அவர்களிடம், பழங்கள் நஞ்சாகும் வகையில் இரசாயனப் பதார்த்தங்களை பழங்களில் உபயோகிக்க வேண்டாம் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதன்போது, சிலர் தாங்கள் வாழைக் குலைகளுக்கு புகையூட்டுவதாக ஒப்புக்கொண்டனர். இருந்தும், நஞ்சு மருந்துகள பாவித்து பழங்களைப் பழுக்க வைப்பதில்லையெனத் தெரிவித்தனர். இதன்போது கருத்துரை வழங்கிய உடுவில் பிரதேச சுகாதார வைத்தியதிகாரி அ.ஜெயக்குமரன், பழங்களை எவ்வாறு கையாள வேண்டும் என்பது தொடர்பிலும் நுகர்வோரிற்குப் பாதிப்பு ஏற்படாத பழங்களை விற்பனை செய்ய வேண்டும் எனவும் அறிவுரைகள் வழங்கினார்.

# கொள்ளைகளுடன் தொடர்பு 3 சந்தேகநபர்கள் கைது

யாழ்ப்பாணம், மானிப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் நவாலிப் பகுதியைச் சேர்ந்த மூன்று சந்தேகநபர்கள் நேற்றுமுன்தினம் இரவு கைது செய்யப்பட்டதாக மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

நவாலிப் பகுதியினைச் சேர்ந்த 25, 26 மற்றும் 35 வயதுடைய சந்தேக நபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர். நவாலிப் பகுதியில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவம் தொடர்பான புலன் விசாரணைகளை மேற்கொண்டு வந்த போது, மேற்படி மூன்று நபர்கள் மீதும் சந்தேகம் ஏற்பட்டது.

இதனைத் தொடர்ந்து, மூன்று நபர்களும் கண்காணிக்கப்பட்ட வந்தவேளை, அந்நபர்கள் திருட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள் என்பது உறுதியாக வெளிப்பட்டது.

இதனையடுத்து, 3 சந்தேகநபர்களும் நேற்று முன்தினம் மாலை அவர்களது வீடுகளில் வைத்துக கைது செய்யப்பட்டனர். சந்தேக நபரகளை இன்று மல்லாகம் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவுள்ளதாக மானிப்பாய் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# அம்புலி மாமாவும் செம்புலி மாமாவும்

ராமன் ராஜா




**வேர்ஜின்** கலக்டிக் நிறுவனத்தை ஆரம்பித்தவர் ஒரு பிரித்தானிய பில்லியனாதிபதி - ரிச்சர்ட் ப்ரொன்ஸன். அவருடைய அடுத்த மெகா திட்டம்: செவ்வாய் கிரகத்துக்கு மனிதர்களை உயிரோடு அனுப்புவது!

இதெல்லாம் சாத்தியமா என்று யாரும் சந்தேகக் கேள்வி எழுப்புவதற்குள், போட்டி போட்டுக் கொண்டு நான்கு கம்பெனிகள் தத்தமது செவ்வாய்க்கிரக திட்டத்தை ஆரம்பித்துவிட்டன. சுறுசுறுப்பாக காசு வசூல் நடக்கிறது. நூற்றுக் கணக்கானவர்கள் செவ்வாய்ப் பயணத்துக்குப் பதிவு செய்துகொண்டு இருக்கிறார்கள்.

இந்த வரலாற்றுப் புகழ் மிக்க பயணத்துக்கு எந்த மாதிரி ஆட்களைத் தேர்வு செய்வார்கள்? அவர்களுக்கு விண்வெளி விஞ்ஞானம் எல்லாம் தெரிந்திருக்க வேண்டுமா?

“அதெல்லாம் நாங்கள் கற்றுக் கொடுக்கிறோம். விவரமான ஆளாக இருந்தால் போதும்” என்கிறார்கள். “பதினெட்டு வயது நிரம்பி இருக்க வேண்டும். வாழ்க்கையில் ஒரு முனைப்பு, இலட்சியம் இருக்க வேண்டும். நாலு பேரோடு அனுசரித்துப் போவது மிக அவசியம். நம்பிக்கை வேண்டும், வளைந்து கொடுக்க வேண்டும். எது வந்தாலும் துவண்டு போகக் கூடாது. ஆர்வம், படைப்பூக்கம், சமயோசிதம் எல்லாம் வேண்டும். இருந்தால் வாருங்கள்” என்கிறார்கள்.

செவ்வாயில் போய் இறங்குவது சுலபம். இப்போதே நம்மிடம் அதற்கான தொழில்நுட்பம் இருக்கிறது. திரும்ப வருவதற்குத்தான் அதிகம் செலவாகும். செவ்வாயில் ஒரு முழு விண்கல ஏவு தளம் அமைக்க வேண்டும். அதை அக்கக் காகக் கழற்றிய வடிவில் இங்கிருந்துதான் கொண்டு போக வேண்டும். அதை இயக்குவதற்கு பொறியியலாளர்கள் முதல் கட்டுப்பாட்டு அறை, உணவு, குடிநீர் என்று வரிசையாகத் தேவைகள் நீளும்.

இதற்கு ஒரு மாற்று யோசனை தெரிவித்தார்கள்: முதல் பயணத்திலேயே நிரந்தரமாகப் போய் அங்கேயே குடியேறிவிடுவது! நாலு நாலு பேராக அனுப்பி ஒரு சிறிய குடியிருப்பை அமைத்தால் போதும். அவர்கள் முயல் மாதிரி பெற்றுத் தள்ளி விரைவிலேயே பத்து நூறு ஆயிரம் என்று சனத்தொகை பெருகிவிடும்.

அவர்கள் அங்கேயே கிடைப்பதை வைத்து வீடு கட்டிக்கொண்டு, ஹைட்ரோ.·.போனிக்ஸ் முறையில் செடி கொடி வளர்த்துச் சாப்பிட்டு எப்படியோ காலம் தள்ளுவார்கள். அத்தியாவசியத் தேவைக்கான மருந்துகள், நுட்பமான கருவிகள் மட்டும் பூமியில் இருந்து அனுப்பி வைக்கப்படும். இந்த திட்டத்துக்கு Mars One என்று பெயர்.

முதல் குழுவில் போகிறவர்களுக்கு நிறைய வேலை இருக்கிறது. முதலில் மூச்சு விட ஒட்சிசன் தயாரிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். பிறகு தண்ணீர் சேகரிக்க வேண்டும். அடுத்து பயிர்த் தொழில், நீர்ப்பாசனம் என்று பெரிய பட்டியலே இருக்கிறது.

இதெல்லாம் செய்யக் கருவிகள் தயாரிக்க வேண்டும். உணவு-உடை-உறையுள் மூன்றும் அங்கே கிடைப்பதை வைத்தே சமாளிக்க வேண்டுமென்றால், ஏற்பாடுகள் செய்வதற்கு பத்து வருஷமாவது ஆகும். அதன் பிறகு குடியிருப்புகள் அமைக்கத் தொடங்கலாம்.

மனிதர்கள் போய் இறங்குவதற்கு ஐந்தாறு வருஷம் முன்னாலேயே ரோபோக்கள் போய் அடிப்படை வசதிகள் பலவற்றை ஏற்படுத்தி வைத்திருக்கும். ஆளில்லாத தானியங்கி வண்டிகள் பல முறை செவ்வாய்க்குப் போயிருக்கின்றன. இப்போது கூட “க்யூரியாசிற்றி” என்ற அமெரிக்க ரோபோட் அங்கேதான் போய் சின்னக் கையால் கல்லையும் மண்ணையும் கிளறிக்கொண்டு இருக்கிறது.

சரி. இத்தனை செலவுக்கும் பணம் எங்கிருந்து வரும்?

“டி.வி.யில் விளம்பர அனுசரணையாளர்கள்தான்!” என்கிறார்கள் Mars One காரர்கள். “பயணத்துக்குப் பயிற்சி எடுப்பது முதல், ஏழு மாதப் பயணம், அங்கே போய் வசிப்பது எல்லாவற்றையும் டெலிவிஷன் கமெராக்களை வைத்துப் படம் பிடிக்கப் போகிறோம். நேரடி ஒளிபரப்பாக இருபத்து நாலு மணி நேரமும் ஓடிக்கொண்டு இருக்கும். நடு நடுவே விளம்பரங்கள். அதுதான் வருமானம். இந்த மாதிரி ஒரு மகா மெகா ரியாலிட்டி ஷோ மனித வரலாற்றிலேயே நடந்தது கிடையாது!”

செவ்வாய்க் கிரகம் ஒரு பரந்த பொட்டல் காடு. கண்ணுக்கு எட்டின வரை செம்மண் பாலை வனம். செடியோ மரமோ கிடையாது. புழுதிப் புயல் வீச ஆரம்பித்தால் மாதக் கணக்கில் நீடிக்கும். வானமே செம்மஞ்சளாகத் தெரியும்!

செவ்வாயில் ஒரு காலத்தில் நீரோடைகள் சலசலத்து ஓடிய அறிகுறிகள் மண்ணில் தெரிகின்றன. அதன் துருவங்களில் ஐஸ் பாறை வடிவத்தில் இன்னும் நிறையத் தண்ணீர் இருக்கிறது. குடியேறிகள் அமைதியாகப் பகிர்ந்து கொண்டால், பல்லாயிரம் மக்கள் வாழப் போதுமான தண்ணீர் உண்டு.

**“பதினெட்டு வயது நிரம்பி இருக்க வேண்டும். வாழ்க்கையில் ஒரு முனைப்பு, இலட்சியம் இருக்க வேண்டும். நாலு பேரோடு அனுசரித்துப் போவது மிக அவசியம். நம்பிக்கை வேண்டும், வளைந்து கொடுக்க வேண்டும். எது வந்தாலும் துவண்டு போகக் கூடாது. ஆர்வம், படைப்பூக்கம், சமயோசிதம் எல்லாம் வேண்டும். இருந்தால் வாருங்கள், ஒரு நடை செவ்வாய்க் கிரகத்திற்குப் போய்வரலாம்”**

செவ்வாயின் காற்று மண்டலம் கிசுகிசுப்பு போல சன்னமானது. பெரும்பாலும் காபனீரொட்சைட். கொஞ்சம் நைதரசன், மிகக்குறைய மெதேன். ஆனால் அதை மனிதன் சுவாசிக்க முடியாது! அப்படியானால், மூச்சுக் காற்று?

இரண்டு மூன்று யோசனைகள் இருக்கின்றன. செவ்வாயில் சிலிக்கன், இரும்பு, நிக்கல் போன்றவற்றுடன் கலந்து ஒட்சைட் வடிவத்தில் ஒட்சிசன் சிறைப்பட்டு இருக்கிறது. அவைகளிடம் இருந்து அணு சக்தியை உபயோகித்து எடுத்துக் கொள்ளலாம். இதற்கு ஏராளமாக சக்தி தேவைப்படும். அதற்குத்தான் அணு உலைகள்.

இன்னொரு யோசனை, நாம் பூமியில் செய்யத் தவறியதை செவ்வாயில் போய்ச் செய்யலாம்: நிறையச் செடி கொடி மரம் வளர்த்து செவ்வாய்க் கிரகத்தைப் பசுமைக் காடாக ஆக்கலாம். தாவரங்கள் காபனீரொட்சைட்டை உறிஞ்சி உள் வாங்கிக் கொண்டு ஒட்சிசனைத் தரும்.

ஆனால் இதில் வேறொரு விதமான சிக்கல். செவ்வாயில் வருடம் முழுவதும் கடும் குளிர். மைனஸ் 60 பாகையெல்லாம் சர்வ சாதாரணம். எனவே முதலில் மொத்த கிரகத்தையும் சூடாக்க வேண்டும். எப்படி?

அதுதான் நமக்குக் கை வந்த கலை ஆயிற்றே! எங்கள் தொழிற்சாலைகளால் பூமியே சூடாகிக்கொண்டு இருக்கிறது. இந்தத் தொழிற்சாலைகளையெல்லாம் அங்கே அனுப்பிவிட்டால் போதும்.. சில வகை பற்றீரியா கிருமிகளை ஏவிவிட்டால், அவை தண்ணீரையும் நைதரசனையும் சாப்பிட்டு மெதேன் போன்ற வாயுக்களை வெளியிடும்.

ஆனால், அவசரப்படக் கூடாது. செவ்வாயில் நாம் சுதந்திரமாக வெளியே உலாவப் போக வேண்டுமென்றால், 120 மில்லி பார் அளவுக்குக் காற்று அழுத்தம் தேவைப்படும். கிரகம் முழுவதும் காடு வளர்த்துத் தள்ளினாலும் இந்த அளவுக்கு ஒட்சிசன் தயாரிக்க, குறைந்தது ஆயிரம் வருடம் ஆகும். அது வரையில் நீல் ஆம்ஸ்ட்ரோங் மாதிரி எல்லோரும் பூதம் பூதமாக விண்வெளி உடையில்தான் நடமாட வேண்டும்.

ஆனால், அங்கே போய் வசிப்பது என்று ஆரம்பித்துவிட்டால், விரைவிலேயே மனிதன் மூளையை உபயோகித்துத் தொழில் நுட்பத்தைக் கூர் தீட்டி இதற்கு ஒரு வழி கண்டுபிடித்து விடுவான் என்று நம்பலாம். தேவைதான் கண்டுபிடிப்புகளின் தாய்.

செவ்வாய்க் கிரகத்தில் உயிரினங்கள் உண்டா? இது வரை இல்லை. ஆனால் அந்தக் கிரகத்தில் தண்ணீரும் இருக்கிறது, மெதேனும் இருக்கிறது என்பதில் கவர்ச்சிகரமான சாத்தியக் கூறுகள் உள்ளன. இவைதான் உயிரை அமைக்கும் செங்கற்கள். ஈ, எறும்பு மாதிரி இல்லாவிட்டாலும் பற்றீரியா வடிவத்திலாவது ஏதேனும் உயிர் தென்பட்டால், அன்று விஞ்ஞானிகள் ஆனந்தக் கூத்தாடுவார்கள்.

நம் பூமியைக் காற்று மண்டலம்தான் போர்வை போலக் காப்பாற்றிக்கொண்டு இருக்கிறது. இல்லாவிட்டால் விண்வெளியில் இருந்து சொரியும் உக்கிரமான கதிரியக்கத்தால் எப்போதோ கான்சர் வந்திருக்கும்.

செவ்வாயில் தொடர்ந்து கதிரியக்கத்தில் நனைவதால் மனிதனின் வாழ்நாள் குறைவுதான். அங்கே புவியீர்ப்பும் மிகக் குறைவு. அதனால் தசைகளும் எலும்புகளும் ஆபத்தான அளவுக்கு வற்றிச் சுருங்கிப் போய்விடும்.

இவ்வளவு கஷ்டப்பட்டு அங்கே யார் போவார்கள்? வித்தியாசமாக ஏதாவது செய்து பார்க்கும் ஆர்வலர்கள் எல்லா ஊரிலும் நிரந்தரமாகச் சில பேர் இருப்பார்கள். “புதியதோர் உலகம் சமைப்போம்” என்று கிளம்பும் வீரர்களுக்கும் குறைவிருக்காது என்று எதிர்பார்க்கலாம்.

செவ்வாய் யாத்திரைக்குச் செல்பவர்கள், பற்பல அபாயங்களைச் சமாளித்து உயிரோடு இருந்தால் மட்டும் போதாது; சிந்து வெளி மாதிரி, மொசபத்தோமியா மாதிரி, ஒரு புதிய மனித நாகரீகத்தையே நிர்மாணிக்க வேண்டிய பொறுப்பு அவர்களுக்கு இருக்கிறது.

இத்தனை தொல்லையும் ஏன் என்ற கேள்வி அடிக்கடி கேட்கப்படுகிறது. முக்கியம் என்னவென்றால், விண்வெளியில் பூமிக்கு ஒரு மாற்றிடம் தேவை. இன்று, பிரபஞ்சம் முழுவதிலும் நாம் வசிக்கத் தக்கதாக இருக்கும் ஒரே கிரகம், பூமி. அதை வசிக்கத் தகாததாக மாற்றுவதற்கு என்ன என்ன அக்கிரமம் உண்டோ, அத்தனையும் செய்துகொண்டு இருக்கிறோம்.

நம் தண்ணீரையும் காற்றையும் நாசம் செய்து, இனி இந்த மண் உருண்டையின் மேல் வாழ முடியாது என்ற நிலை ஒரு நாள் வரலாம். சந்திரனில் போய் வசிக்கலாம் என்றால், அங்கே சொட்டுத் தண்ணீர் கிடையாது. எனவே, செவ்வாய் கிரகம்தான் நமது ஒரே நம்பிக்கை!

# 24 மணி நேரத்தில் 2 இலட்சம் முறைப்பாடுகள்

(கொழும்பு)

பொதுபல சேனாவின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் மற்றும் அமைச்சர் சம்பிக்க ரணவக்க ஆகியோருக்கு எதிராக 24 மணித்தியாலங்களுக்குள் 2 இலட்சம் முறைப்பாடுகள் முகநூல் நிர்வாகத்துக்கு கிடைத்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இவற்றுள் ஆசிய நாடுகளில் இருந்தே அதிக முறைப்பாடுகள் கிடைத்தன.

இந்தநிலையில் பொதுபல சேனாவின் வாசகர் பக்கத்துக்கு எதிராக மொத்தமாக 50 இலட்சம் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

பங்களாதேஷ் மற்றும் பாகிஸ்தானில் இருந்து அதிகளவான முறைப்பாடுகள் கிடைத்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் எந்த மதத்துக்கு எதிராகவும் தாம் முகநூலை பயன்படுத்தவில்லை என்று ஞானசார தேரர் முகநூல் நிர்வாகத்துக்கு அறிவித்துள்ளார்.

# புதிய இராணுவ முகாம் களுத்துறையில் அமைக்க தீர்மானம்

களுத்துறையில் புதிய இராணுவ முகாம் ஒன்றை அமைப்பதற்கு பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு தீர்மானித்துள்ளது.

களுத்துறை மாவட்ட மத்துகம பிரதேச செயலக பிரிவில் இந்த இராணுவ முகாம் உருவாக்கப்படவுள்ளது.

களுத்துறை அபிவிருத்திக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. முகாமை அமைப்பதற்கு 15 ஏக்கர் காணியை வழங்குமாறு இராணுவத் தளபதி களுத்துறை மாவட்டச் செயலாளர் டி.சீ.ஜயலாலிடம் கோரியுள்ளார்.

# சந்தை வாய்ப்பை அதிகரிக்க கைவினைக் கண்காட்சி

மேல்மாகாண கைத்தொழில் அமைச்சர் உதய கம்மன்பிலவின் வழிகாட்டுதலின் கீழ் கைவினைப் பொருட்களுக்கான கண்காட்சியொன்று வரும் முதலாம் திகதியிலிருந்து 03 ஆம் திகதி வரை கொழும்பு தேசிய கலைக்கூடத்தில் நடைபெறவுள்ளது.

இக்கண்காட்சி ஏற்பாட்டின் பிரதான நோக்கம் கைவினைஞர்களின் படைப்பு வடிவங்களை, திறமைகளை வெளிக்கொணர்வதாகும். அத்துடன் அவர்களின் சந்தை வாய்ப்புக்களையும் இக்கண்காட்சியினூடாக எளிதாக்க முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நாட்டின் எதிர்கால முன்னேற்றத்திற்காக நல்லுறவுகள் தொடர்வது அவசியம்

## நோன்பு பெருநாள் செய்தியில் ஜனாதிபதி



ஐக்கியம் மற்றும் புரிந்துணர்வுக் கலாசாரத்தில் நாட்டின் முன்னேற்றத்திற்காக இலங்கை முஸ்லிம் சமூகம் செய்துள்ள பெறுமதியான பங்களிப்புக்களை நாம் இச்சந்தர்ப்பத்தில் நினைவு கூருவதுடன் இலங்கையின் எதிர்கால முன்னேற்றத்துக்காக இத்தகைய நல்லுறவுகள் தொடர வேண்டுமென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விடுத்துள்ள நோன்புப் பெருநாள் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

இது புனித அல்குர்ஆனினதும் இறைத்தூதர் முஹம்மத் நபி (ஸல்) அவர்களினதும் போதனைகளுக்கேற்ப நோன்பு, ஆன்மீகப் பெறுமானங்கள் மீதான ஆழ்ந்த ஈடுபாடு. தொடர்ச்சியான வணக்க வழிபாடுகள். தியாகங்கள் போன்ற சமயக் கடமைகளில் ஈடுபட்டதைத் தொடர்ந்து புத்துணர்ச்சியுடன் மகிழ்வுறும் சந்தர்ப்பமாகும்.

இலங்கை வாழ் முஸ்லிம்கள் பல நூற்றாண்டுகளாக எமது நாட்டின் ஏனைய இனங்கள் மற்றும் சமயங்களைச் சேர்ந்த மக்களுடன் மிகவும் ஐக்கியமாக வாழ்ந்து கடந்த காலங்களிலும் இந்த வணக்க வழிபாடுகளில் ஈடுபட்டு வந்துள்ளனர்.

நாட்டில் இன்று நிலவும் அமைதியான சூழ்நிலை அவர்களது சமய நடவடிக்கைகளுக்கு சாதகமாக அமைந்துள்ளதுடன் சமூகத்தின் முன்னேற்றத்திற்கும் நாட்டின் அபிவிருத்திக்கும் உதவும் வகையில் இந்த நிலைமை மேலும் பலப்படுத்தப்படவேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

# இலங்கையர் உள்ளிட்ட சட்டவிரோத குடியேறிகள் கைது

(கொழும்பு)

இலங்கையர்கள் உட்பட சட்டவிரோத குடியேறிகள் குழு ஒன்று மெக்சிக்கோவில் இருந்து டெக்ஸாஸ் செல்லும் வழியில் வைதது கைது செய்யப்பட்டுள்ளது.

சர்வதேச செய்தி ஒன்று இதனைத் தெரிவித்துள்ளது.

கடந்த வார இறுதியில் இந்தக் குழு அமெரிக்காவின் மாநிலமான டெக்ஸாஸிக்குள் பிரவேசிக்கும் நோக்கில் சென்று கொண்டிருந்தபோது கடந்த 26 ஆம் திகதி கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரியோ கிரான்டே ஊடாகவே இந்தக்குழு டெக்ஸாஸிக்கும் பிரவேசிக்க முற்பட்டுள்ளது.

இலங்கை, பங்களாதேஸ் மறறும் நேபாளத்தை சேர்ந்தவரகள் இந்தக்குழுவில் அடங்கியுள்ளனர். இவர்கள் அனைவருமே ஆண்களாவர்.

மெக்ஸிக்கோவின் ஊடாக டெக்ஸாஸிக்கு சட்டவிரோதமாக பிரவேசிப்போரில் ஆசிய நாட்டவரே அதிகமாக உள்ளதா[illegible] தகவல்கள் வெளியாகியுள்ளன.

# போர்க்குற்ற உள்ளக விசாரணை இராஜதந்திர ரீதியில் நடாத்தப்படவேண்டும்

## ஐ.தே.க. வலியுறுத்து

(கொழும்பு)

போர்க்குற்றச் செயல்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் அரசாங்கம் உள்ளக விசாரணை நடாத்தினால், அது ராஜதந்திர ரீதியில் முன்னெடுக்கப்பட வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் கயந்த கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.

போர் வெற்றிக் களிப்பில் திளைத்த அரசாங்கம் நாட்டை உரிய வகையில் வழி நடாத்தவில்லை.

இதன் காரணமாகவே சர்வதேச ரீதியிலும் உள்நாட்டு ரீதியிலும் அரசாங்கம் நெருக்கடிகளை எதிர்நோக்க நேரிட்டுள்ளது.



மக்களின் நலன் கருதி இந்த அரசாங்கம் செயற்படுவதில்லை. இதனால் மக்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்க நேரிட்டுள்ளது.

இவை குறித்து கவனம் செலுத்தாது அரசாங்கம் மீண்டும் தேர்தல் தொடர்பிலான பரபரப்பை ஏற்படுத்தி மக்களைத் திசை திருப்பி வருவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# சர்வதேச திரைப்பட விழா கொழும்பில்




சர்வதேச திரைப்பட விழா எதிர்வரும் 2 ஆம் திகதி கொழும்பில் ஆரம்பமாகவுள்ளது.

திரைப்பட இயக்குநர் சங்கத்தின் ஏற்பாட்டில் இச்சர்வதேச திரைப்படவிழா 2 ஆம் திகதி தொடக்கம் 7 ஆம் திகதி வ்ரை நடைபெறவுள்ளது.

இலங்கை வாழ் சினிமா இரசிகர்களுக்கு சிறந்த விருந்தாக அமையவுள்ள சர்வதேச திரைப்படவிழா இலங்கையில் முதற்தடவையாக நடைபெறவுள்ளது.

பிரான்ஸ், இந்தியா, பிரித்தானியா, அமெரிக்கா, சீனா, ஜேர்மனி, நேபாளம், இஸ்ரேல் மற்றும் சுவீஸ் ஆகிய நாடுகளின் 70 இற்கும் மேற்பட்ட திரைப்படங்கள் இச்சர்வதேச திரைப்படவிழாவில் திரையிடப்படவுள்ளன.

ஆபிரிக்கா, கரீபியன் மற்றும் இலத்தீன் அமெரிக்க கலாசாரங்களை இலங்கை சினிமா ரசிகர்கள் கண்டு இரசிக்கும் வகையில் இத்திரைப்பட விழாவில் திரைப்படங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. ரீகல்-மெஜஸ்டிக் சினிமாஸ்- எம்பயர் மற்றும் தரங்கணி ஆகிய திரையரங்குகளில் இத்திரைப்படங்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

2012 ஆம் ஆண்டு டோக்கியோ திரைப்படவிழாவில் சந்தித்த இயக்குநர் சங்கத்தினர் இலங்கையில் சர்வதேச திரைப்பட விழாவை நடாத்த 10 மில்லியன் ஜென்களை வழங்க இணக்கம் தெரிவித்துள்ளனர்.

அப்பேச்சு வார்த்தைக்கமைய இவ்வருடம் திரைப்பட விழா இலங்கையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

# முத்திரைகள் வெளியிட முன்மொழிவுகள் கோரல்

(கொழும்பு)

2015 ஆம் ஆண்டுக்கான ஞாபகார்த்த முத்திரைகளை வெளியிடுவ்தற்கான முன்மொழிவுகள் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளை தபால் திணைக்களம் முன்னெடுத்துள்ளது.

அதற்கமைய தேசிய மற்றும் சர்வதேச ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த சம்பவங்கள்- ஆண்டுநிறைவு மதிப்பிற்குரிய நபர்கள்- இயற்கைக்காட்சிகள்- விளையாட்டு தேசிய அபிமானத்தை வெளிக்கொண்டு வரும் விடயங்கள் மற்றும் கலாசாரம் ஆகிய தொனிப் பொருள்களில் முன்மொழிவுகள் கோரப்பட்டுள்ளன.

குறித்த முன்மொழிவுகளுடன் சுருக்கமான விபரங்களும் அனுப்பப்படவேண்டும். மேலும் ஆண்டு நிறைவு தொடர்பான முன்மொழிவுகளுடன் வருடத்தை உறுதிப்படுத்தும் தகவல்கள்- எழுத்துமூலமான சாட்சிகள் என்பவற்றுடன் அனுப்புபவரின் பெயர், முகவரி, தொலைப்பேசி இலக்கம், மின்னஞ்சல் முகவரி என்பவற்றை கையொப்பத்துடன் அனுப்பி வைத்தல் வேண்டும்.

குறித்த முன்மொழிவுகளை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்குமாறு பணிப்பாளர்- முத்திரை காரியாலயம், தபால் தலைமையகம், இலக்கம் 310- டி.ஆர். விஜேவர்தன மாவத்த, கொழும்பு 10 என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# போதைப்பொருள் வர்த்தகத்துடன் அரசியல்வாதிகளுக்கு தொடர்பில்லை

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தகவல்

(கொழும்பு)

ஹெரோயின் போதைப் பொருள் வர்த்தகத்துடன் அரசியல்வாதிகளுக்கு தொடர்பில்லை என பொலிஸ் ஊட்கப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

போதைப்பொருள் வர்த்தகத்துடன் அரசியல்வாதிகளுக்கு தொடர்பு இருப்பது குறித்து எவவித தகவல்களோ ஆதாரங்களோ இதுவரையில் கிடைக்கவில்லை.

போதைப்பொருள் வர்த்தகத்துடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் எந்தவொரு அரசியல்வாதியும் கைது செய்யப்பட்டதில்லை.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் மேல் மாகாண சபை உறுப்பினர் ஹிருனிகா பிரேமசந்திர மற்றும் கூட்டணி கட்சியான ஜாதிக ஹெல உறுமய ஆகிய கட்சிகள் ஆளும் கட்சி அரசியல்வாதிகள் போதைப் பொருள் கடத்தலுடன் தொடர்பு கொண்டிருப்பதாக குற்றம் சுமத்தியுள்ளன.

குற்றச் செயல்களுடன் தொடரபுடையதாக வெறுமனே குற்றச் சாட்டுக்களை சுமத்தாது ஆதாரங்களை சமர்ப்பித்தால் அவ்வாறான நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடியும்.

எவ்வாறெனினும் குற்றம் சுமத்தியவர்கள் தாமாக முன் வந்து பொலிசாரைத் தொடர்பு கொள்ள வேண்டும்.

ஹிருனிகா அல்லது ஜாதிக ஹெல உறுமய உறுப்பினர்களைத் தொடர்பு கொள்ளப் போவதில்லை.

அவர்களைத் தொடர்பு கொண்டு போதைப்பொருள் கடத்தல் குறித்து தகவல்களை வழங்குமாறு கோரினால் ஊடங்களுக்கு தாம் அளித்த தகவல் திரிபுபடுத்தப்பட்டுள்ளதாக குறிப்பிடுவார்கள் என அஜித் ரோஹண குறிப்பிட்டுள்ளார்.

இதுவரையில் கைது செய்யபபட்ட எந்தவொரு சந்தேக நபரும் தமக்கு பின்னணியில் அரசியல்வாதிகள் இருப்பதாக வாக்கு மூலம் அளிக்கவில்லை.

எனவே, அரசியல்வாதிகளைக் கைது செய்யவோ அல்லது விசாரணை செய்யவோ முடியாது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# முன்பள்ளி ஆசிரியர் கொடுப்பனவை அதிகரிக்க

## வடமாகாண சபை முன்வரவேண்டும்

### வலி.கிழக்கு பிரதேச சபை எதிர்க்கட்சித்தலைவர்



(புத்தூர்)

முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகளை அதிகரிக்க வடமாகாண சபை முன்வர வேண்டு என வலி.கிழக்கு பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவரும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வலி.கிழக்கு பிரதேச இணைப்பாளருமான இராமநாதன் ஐங்கரன் தெரிவித்துள்ளார்.

புத்தூர் மேற்கு, நவக்கிரி சரஸ்வதி முன்பள்ளி மழலைகளின் வருடாந்த விளையாட்டு விழா நேற்றுமுன்தினம் சனசமூக நிலை யத் தலைவர் ஆறுமுகம் செல்வராசா தலைமையில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட அவர் மேலும் தெரிவிக்கையில்,

முன்பள்ளி ஆசிரியர்கள் பல சிரமங்களுக்கு மத்தியில் எமது எதிர்கால சந்ததியினருக்கு அடிப்படைக் கல்வி அறிவை வளர்ப்பதற்கு தங்களால் இயன்ற பங்களிப்புகளை செய்து கொண்டிருக்கின்றார்கள். ஒரு கட்டடத்திற்கு அத்திவாரம் எவ்வளவு முக்கியமோ அதேபோல மாணவர்களுக்கு அடிப்படைக் கல்வி என்பது மிகவும் அவசிய தேவையாகும். ஆகவே அடிப்படைக் கல்வியை மழலைகளுக்கு முதன் முதலாக வழங்கும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு கொடுப்பனவுகளை அதிகரிப்பதுடன், அவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கும் வடமாகாண சபை முன்வர வேண்டும்.

வடமாகாண சபையை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினராகிய நாங்கள் ஆட்சி செய்வோமாக இருந்தால் நிச்சயமாக முன்பள்ளி ஆசிரியர்களுக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தீர்வினைப் பெற்றுக் கொடுத்திருப்பார்.

ஆகவே அன்பார்ந்த பெற்றோர்களே, ஆசிரியர்களே பிரதேச வாழ் மக்களே நீங்கள் அனைவரும் இனிவருங்காலங்களிலாவது சிந்தித்து செயற்படுவதற்கு முன்வரவேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

இந் நிகழ்வில் முன்பள்ளிகளின் மேற்பார்வையாளர் என். சாந்தரூபி, நவக்கிரி குடும்பநல உத்தியோகத்தர் அ.கவிதா நவக்கிரி சமுர்த்தி உத்தியோகத்தர் ரி.கேசவன் நவக்கிரி பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆர்.ஞானமாலா நவக்கிரி அ.மி.த.க.பாடசாலை அதிபர் க.ராதாகிருஸ்ணமூர்த்தி வலி கிழக்கு பிரதேச சபையின் எதிர்க்கட்சி உறுப்பினர் அருளானந்தம் றஜீவன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



கைதடி மேற்கைச் சேர்ந்த வெளிநாட்டு உறவான தி.ரஜனி என்பவர் அரச சிறுவர் இல்லத்திற்கு உடுபுடவைகள், உணவுப்பொருட்கள் வழங்குவதைக் காணலாம். (51)

# யாழ்ப்பாண நினைவுகள் பாகம் - 01

## "நூல் அறிமுக விழா" அல்வாயில்

(யாழ்ப்பாணம்)

வேதநாயகம் தபேந்திரன் எழுதிய 'யாழ்ப்பாண நினைவுகள்' பாகம் 01 நூல் அறிமுகவிழா வரும் 03 ஆம் திகதி ஞாயிற்றுகிழமை பிற்பகல் 3 மணிக்கு அல்வாய் சிறிலங்கா வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அல்வாய் வடக்கு இளங்கோ சனசமூக நிலைய முத்தமிழ் மன்றத்தின் அனுசரணையில் நடைபெறவுள்ள நிகழ்விற்கு குப்பிளான் ஐ.சண்முகன் தலைமை தாங்கவுள்ளார்.

நிகழ்வில் வரவேற்புரையை இளங்கோ சனசமூக நிலைய தலைவர் மா.மெய்யழகனும், வாழ்த்துரையை யாழ்.கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் மு.இராசநாயகமும் வழங்கவுள்ளனர்.

வெளியீட்டுரையை தொண்டமானாறு வீரகத்தி மகாவித்தியாலய ஆசிரியர் சு.குணேஸ்வரன் நிகழ்த்தவுள்ளதோடு முதற்பிரதியை வே.பாலசண்முகம் பெறவுள்ளார். (90)

ஜனரஞ்சகத் தன்மையை முதன்மைப் படுத்தி பக்கம் சாராமல் துணிச்சலுடன் தரமான அம்சங்களை அள்ளிவரும் வாரமலர்.

வாரமலர்
தினமுரசு

நாளைய தினமுரசு வாரமலரில்...

31.07.2014

- தவறாக மொழிபெயர்க்கப்பட்டது இந்தியாவின் மௌனம்
- தமிழர்களின் தேசியத்தலைவர் சுடப்பட்டு 25 ஆண்டுகள்!
- சேருவிலவில் புனித பூமி
- கறுப்பு ஜூலை நெஞ்சம் மறப்பதில்லை








தொடர்கிறது கொண்டாட்டம்

உங்கள் முகவர்களிடம் கேட்டு வாங்கிப் படியுங்கள்!

சூடு - சுவை - சுவாரசியம் - இதுதான் தினமுரசு

## கொமன்வெல்த் விளையாட்டு விழா

# 13 வயதில் நீச்சல் வீராங்கனை



கொமன் வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் 13 வயது சிறுமி ஒருவர் நீச்சல் போட்டியில் பதக்கம் வென்று புதிய வரலாறு படைத்துள்ளார்.

ஸ்கொட்லாந்தைச் சேர்ந்த எராய்ட் டேவிஸ் என்ற சிறுமி, மாற்றுத் திறனாளிகளுக்கான 100 மீற்றர் ப்ரிஸ்ட்ரொக் நீச்சல் போட்டிகளில் வெண்கலப் பதக்கத்தை வென்றுள்ளார்.

கொமன் வெல்த் போட்டிகளில் 13 வயது சிறுமி பதக்கம் வெல்வது இதுவே முதல் முறையாகும்.

போட்டி தூரத்தை ஒரு நிமிடம் 21.68 செக்கன்களில் கடந்து வெண்கலத்தைத் தட்டிச் சென்றுள்ளார் எராய்ட். எராய்ட் டேவிஸ் தனது ஆறாவது வயதில் ஒரு மைல் தூரம் வரை நீந்தி சாதனை படைத்துள்ளார். இதற்கு முன்னர் 1974ஆம் ஆண்டு நியூசிலாந்தில் இடம்பெற்ற கொமன் வெல்த் போட்டிகளில் அவுஸ்ரேலியாவின் ஜென்னி டைரல் என்பவர்தான் மிகவும் இளம் வயதில் பதக்கம் வென்றவர் என்ற சாதனையை படைத்திருந்தார்.

# பதக்கப் பட்டியல் அவுஸ்ரேலியா முதலிடம்

ஸ்கொட்லாந்தின் கிளாஸ்கோ நகரில் நடை பெறும் 20 ஆவது கொமன் வெல்த் விளையாட்டு விழாவின் பதக்கப் பட்டியலில் அவுஸ்ரேலிய தொடர்ந்தும் ஆதிக்கம் செலுத்தியுள்ளது.

30 தங்கம், 25 வெள்ளி, 32 வெண்கலப் பதக்கங்கள் அடங்கலாக 87 பதக்கங்களைப் பெற்றுள்ள அவுஸ்ரேலியா பதக்கப் பட்டியலில் தொடர்ந்தும் முதலிடத்தில் நீடிக்கின்றது.

27 தங்கம், 24 வெள்ளி மற்றும் 23 வெண்கலப் பதக்கங்களைப் பெற்றுள்ள இங்கிலாந்து இரண்டாவது இடத்தையும் 13 தங்கம், 8 வெள்ளி, 12 வெண்கலப் பதக்கங்களைப் பெற்றுள்ள ஸ்கொட்லாந்து மூன்றாவது இடத்தையும் பெற்றுள்ளது.

தலா 9 தங்கப் பதக்கங்களைப் பெற்றுள்ள தென்னாபிரிக்கா மற்றும் கனடா ஆகியன முறையே நான்காவது மற்றும் ஐந்தாவது இடங்களைப் பெற்றுள்ளன.8 தங்கப் பதக்கங்களைப் பெற்றுள்ள நியூசிலாந்து ஆறாம் இடத்தையும் 7 தங்கப் பதக்கங்களைப் பெற்றுள்ள இந்தியா ஏழாம் இடத்தையும் பிடித்துள்ளன.




# 5000 மீற்றர் ஓட்டம் கென்யா வீரர் தங்கம்

கொமன்வெல்த் விளையாட்டு விழாவின் ஆண்களுக்கான 5000 மீற்றர் ஓட்டப் போட்டியை 13 நிமிடங்கள் 12.07 செக்கன்களில் ஓடி முடித்த கென்யாவின் காலெப் முவாங்கிங்கி தங்கப் பதக்கத்தை சுவீகரித்தார். அவரது நாட்டைச் சேர்ந்த ஐசாயா கிப்ளங்கட் கோச் வெள்ளிப் பதக்கத்தையும் நியூஸிலாந்தின் ஸேன் ரொபர்ட்சன் வெண்கலப் பதக்கத்தையும் வென்றுள்ளனர்.

## ஆண், பெண்களுக்கான 100 மீற்றர் ஓட்டம்





# ஜமேக்கா, நைஜீரியாவுக்கு தங்கம்

கொமன் வெல்த் விளையாட்டு விழாவின் 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் ஜமேக்க வீரர் கெமர் பெய்லி மற்றும் நைஜீரியா வீராங்கனை ஒக்பரே ஆகியோர் தங்கம் வென்று அசத்தியுள்ளனர்.

கொமன்வெல்த் விளையாட்டு போட்டியில் அனைவராலும் எதிர்பார்க்கப்பட்ட 100 மீற்றர் அதிவேக ஓட்டப்பந்தய இறுதிப்போட்டி நேற்று முன்தினம் இரவு நடைபெற்றது.

இதில் உலகின் அதிவேக வீரர் உசேன் போல்ட் (ஜமேக்கா) பங்கேற்கவில்லை. ஆனால் இறுதிப் போட்டியில் 3 ஜமேக்கா வீரர்கள் தகுதி பெற்றிருந்தனர். மொத்தம் 8 பேர் தகுதி பெற்ற இறுதிப் போட்டியை காண இரசிகர்கள் ஆவலுடன் இருந்தனர்.

ஓட்டத்தை ஆரம்பித்ததும் 8 பேரும் மின்னல் வேகத்தில் ஓடினர். இதில் ஜமேக்கா வீரர் கெமர் பெய்லி தங்கம் வென்றார். அவர் 100 மீற்றர் இலக்கை 10 வினாடியில் கடந்தார்.

வெள்ளிப்பதக்கத்தை இங்கிலாந்தின் ஜெமிலி (10.10 வினாடி) கைப்பற்றினார். மற்றொரு ஜமேக்கா வீரர் அஸ்மேக்டே (10.12 வினாடி) வெண்கலப் பதக்கத்தை வென்றார். தங்கம் வென்ற கெமர் பெய்லி கோல் 2012 லண்டன் ஒலிம்பிக் போட்டியில் 4X400 ஓட்டப் பந்தயத்தில் தங்கப் பதக்கம் வென்றவர்.

பெண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப்பந்தயமும் நேற்று முன்தினம் இரவு நடைபெற்றது. இதில் நைஜீரியா வீராங்கனை ஒக்பரே தங்கம் வென்றார். அவர் 10.85 வினாடியில் இலக்கைக் கடந்தார். வெள்ளிப் பதக்கத்தை ஜமேக்காவின் கேம்பல் பிரஷன் (11.03 வினாடி) கைப்பற்றினார்.

மற்றொரு ஜமேக்கா வீராங்கனையான ஸ்டுவர்ப் வெண்கலப் பதக்கத்தை வென்றார். அவர் 11.07 வினாடியில் இலக்கை கடந்தார்.

# சிக்குவாரா அலி



(லண்டன்)

இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் வீரர் மொய்ன் அலிக்கு எதிராக சர்வதேச கிரிக்கெட் பேரவை ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளது.

இந்திய அணிக்கெதிரான மூன்றாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் போது அவர் கையில் அணிந்திருந்த பட்டி தொடர்பிலேயே இந்த விசாரணை இடம்பெறவுள்ளது.

அலி அணிந்திருந்த பட்டியில் Save Gaza மற்றும் Free Palestine ஆகிய வாசகங்கள் பொறிக்கப்பட்டிருந்தமை சர்ச்சையை தோற்றுவித்துள்ளது.

இது தொடர்பில் சர்வதேச கிரிக்கெட் சபையின் அதிகாரி ஒருவர் குறிப்பிடுகையில், இது தொடர்பான தீர்மானம் விரைவில் அறிவிக்கப்படும் என்றார்.

எனினும் இங்கிலாந்து கிரிக்கெட் சபை இது தொடர்பில் தெரிவிக்கையில் அதில் தவறேதும் இருப்பதாக தெரியவில்லை எனக் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, முதல் இனிங்ஸிற்காக ஆடிய இங்கிலாந்து அணி ஏழு விக்கெட்டுக்களை இழந்து 569 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது. இதில் பெல், பெல்னர் ஆகியோர் சதம் விளாசினர். பதிலுக்கு முல் இனிற்ஸிங்காக ஆடிவரும் இந்திய அணி இரண்டாம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை ஒரு விக்கெட்டை இழந்து 25 ஓட்டங்களைப் பெற்றது.

# கூட்டு முயற்சியே தொடரை வெல்லக் காரணம்

### அம்லா பெருமிதம்

(கொழும்பு)

21 வருடங்களின் பின்னர் இலங்கை மண்ணில் டெஸ்ட் தொடரை வென்றது மகிழ்ச்சி அளிக்கின்றது. இதற்கு அணியின் கூட்டு முயற்சி முக்கிய காரணம் என தென்னாபிரிக்க அணிக் கப்டன் அம்லா தெரிவித்துள்ளார்.

இலங்கை, தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடர் நேற்று முன்தினம் கொழும்பு எஸ்.எஸ்.சி. விளையாட்டு அரங்கில் நிறைவடைந்தது. இப்போட்டி குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே அம்லா மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், முதல் டெஸ்டில் நாங்கள் வெற்றிபெற்று முன்னிலை பெற்றிருந்தோம். இதன் காரணமாகவே தொடரை வெல்ல முடிந்தது. இரண்டாவது டெஸ்ட் போட்டியில் நாங்கள் களத்தில் நிலைத்து நின்று ஆடவில்லை.

துடுப்பாட்டத்தில் அனைத்து வீரர்களும் சொதப்பிவிட்டோம். ஆனாலும், பின் வரிசை வீரர்களின் பொறுப்பான ஆட்டத்தின் மூலம் இரண்டாவது போட்டியை சமன் செய்ய முடிந்தது. குறிப்பாக, பிலாண்டர், ஸ்ரெய்ன் போன்றோர் பொறுப்புடன் செயற்பட்டு அணியைக் கைப்பாற்றிக் கொண்டனர். இந்த வகையில் இலங்கை மண்ணில் 21 வருடங்களின் பின்னர் நாங்கள் டெஸ்ட் தொடரை வென்றிருக்கிறோம். இந்த வெற்றி அணியின் கூட்டு முயற்சிக்கு கிடைத்த பரிசு. இப்போட்டித் தொடரை சமன் செய்ய இலங்கை அணி வீரர்கள் போராடிய விதம் பாராட்டிற்குரியது. இலங்கை அணி பொதுவாக போராடும் குணத்தை இயல்பாகவே கொண்டிருக்கின்றது. அதற்கு நாங்கள் தலை சாய்க்கின்றோம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## விளையாட்டுச் செய்திகள்

# டெஸ்ட் தரப்படுத்தல் தென்னாபிரிக்கா முதலிடம்

(டுபாய்)

சர்வதேச டெஸ்ட் தரப்படுத்தலில் தென்னாபிரிக்க அணி மீண்டும் முதலிடத்தைப் பிடித்துள்ளது.

இலங்கை அணிக்கெதிரான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரை 1-0 என்ற கணக்கில் கைப்பற்றிக் கொண்டதன் மூலமே தென்னாபிரிக்க அணி தரப்படுத்தலில் முதலிடத்தைப் பிடித்துக் கொண்டது. இதன் படி 124 புள்ளிகளைப் பெற்று தென்னாபிரிக்க அணி முதலிடத்தையும், 123 புள்ளிகளைப் பெற்றுள்ள அவுஸ்ரேலிய அணி இரண்டாமிடத்தையும் பிடித்துள்ளதாக சர்வதேச கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



யாழ். படைகளின் கட்டளைத் தலைமையகத்தின் கால்பந்து பயிற்சி

# கஜபாகு அணியிடம் வீழ்ந்தது வதிரி டையமன்ஸ்







(கரவெட்டி)

யாழ். மாவட்ட படைகளின் கட்டளைத் தலைமையகமும் ஐக்கிய அமெரிக்க நாட்டின் கால்பந்தாட்ட வெளிவாரி சேவை நிறுவனமும் இணைந்து நடாத்திய கால்பந்தாட்ட பயிற்சி முகாமினைத் தொடர்ந்ததான சிநேகபூர்வ கால் பந்தாட்டப் போட்டியில் இலங்கை இராணுவப் படையணியின் கஜபாகு பிரிவு அணி வெற்றிபெற்றது.

3 நாட்கள் கொண்ட பயிற்சி முகாம், கடந்த 25 ஆம் திகதி முதல் வடமராட்சி கரவெட்டி மைக்கல் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

இதில் கால்பந்தாட்ட வீரர்களுக்கான விசேட பயிற்சிகள் அளிக்கப்பட்டன. தொடர்ந்து, இறுதி நாள் நிறைவில் வடமராட்சி வதிரி டையமன்ஸ் அணியும் இராணுவத்தின் கஜபாகு பிரிவு அணியும் மோதின.

ஆட்டத்தின் முதல் பாதியாட்டத்தில் கஜபாகு அணி அடுத்தடுத்து, 3 கோல்களைப் போட்டு முன்னிலையில் வகித்தது. இரண்டாவது பாதியாட்டத்தில் இரு அணிகளுமே ஒன்றுக் கொன்று சளைத்தவை அல்ல என்பதை வெளிப்படுத்தும் வகையில் முட்டி மோதிக் கொண்டன. இதன் காரணமாக இரு அணிகளாலும் கோல் எதனையும் பெற்றுக்கொள்ள முடியவில்லை. இறுதியில், கஜபாகு அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

இந்தப் பயிற்சி முகாமில் சுமார் 250 இற்கும் மேற்பட்ட வீரர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இப் பயிற்சி முகாமை அமெரிக்க நாட்டைச் சோந்த பயிற்றுவிப்பாளர்களான கிறேச் டேவில், மத்தியு வில்மன், சாளிஸ் சாள்ஸ் ஜோன்சன், றொட்னி பீற்றர்சன் அவன்டேவிஸ் ஆகியோர் நடாத்தியிருந்தனர்.

இந்நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, பருத்தித்துறை பிரதேச செயலர் என்.ஜெயசீலன், பிரிகேடியர் திருநாவுக்கரசு, மேஜர் ஜெனரல் பிரியந்த ஜெயசுந்தரா ஆகியோர் கலந்துகொண்டனர்.

பயிற்சி முகாமில் கலந்துகொண்ட வீரர்களுக்கு சான்றிதழ்களும், வீரர்களின் கழகங்களுக்கு கால்பந்தாட்ட பந்துகளும் வழங்கப்பட்டன.

இதேவேளை, இதன் முதற் கட்டப் பயிற்சி முகாம் யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் அண்மையில் நடைபெற்றமை குறிப்பிடத் தக்கது. (48)



## விளையாட்டு செய்திகள்

## 4 கட்டங்களாக தேசிய விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

கல்வித் திணைக்களத்தின் விளையாட்டுப் பிரிவு நடாத்தும் பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட விளையாட்டுப் போட்டிகள் எதிர்வரும் 5ஆம் திகதி முதல் நான்கு கட்டங்களாக நடைபெற ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதில் முதல் கட்டப் போட்டிகள் எதிர்வரும் 5ஆம் திகதி முதல் 7ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன. இதில் நீச்சல், கபடி, கராத்தே, சதுரங்கரம், எல்லே, பளு தூக்கல் போன்ற போட்டிகள் கொழும்பு, அம்பாறை, கண்டி, அநுராதரபுரம் ஆகிய இடங்களில் நடைபெறவுள்ளன.

இரண்டாம் கட்டப் போட்டிகள் செப்ரெம்பர் மாதம் 14, 15,16ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன. இதில் ஹொக்கி, கரம், மென்பந்து கிரிக்கெட், ரென்னிஸ், வலைப்பந்து போன்ற போட்டிகள் யாழ்ப்பாணம், கொழும்பு ஆகிய இடங்களில் நடைபெறவுள்ளன.

மூன்றாம் கட்டப் போட்டிகள் செப்ரெம்பர் மாதம் 19,20,21ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன. இதில் கால்பந்து, குத்துச் சண்டை, எறிபந்து, மேசைப்பந்து, பட்மின்ரன், கூடைப்பந்து, கரப்பந்து போன்ற போட்டிகள் நடைபெறவுள்ளன. இப்போட்டிகள் கொழும்பு, பணாந்துறை, நுகேகொட ஆகிய இடங்களில் நடைபெறவுள்ளன.

நான்காம் கட்டப் போட்டிகள் செப்ரெம்பர் மாதம் 30ஆம் திகதி முதல் ஒக்ரோபர் மாதம் 4ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன. இதில் தடகளப் போட்டிகள் நடைபெறவுள்ளன. இப்போட்டிகள் கொழும்பு சுகததாஸ விளையாட்டு அரங்கில் நடைபெறவுள்ளன.

வடக்கு மாகாண தடகளப் போட்டிகளில் 51 சாதனைகள் முறியடிக்கப்பட்டிருப்பதால் அதிக பதக்கங்களை வடக்கு மாகாண வீர,வீராங்கனைகள் கைப்பற்றிக்கொள்ளக்கூடியதாக இருக்கும் எனவும், கடந்த ஆண்டு தேசிய மட்டப் போட்டிகளில் ஆறாமிடத்தைப் பிடித்துக் கொண்ட வடக்கு மாகாணம் இம்முறை ஐந்தாவதோ அல்லது நான்காவதோ இடத்தைப் பிடிக்க முயற்சிக்கும் என விளையாட்டு ஆர்வலர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். (12,93)

## தேசிய கால்பந்து; வாகைசூடியது ஹென்றியரசர்

கொழும்பு ஆனந்தாக் கல்லூரியினால் தேசிய ரீதியில் நடாத்தப்பட்ட சாம்சமரசிங்க நினைவு கிண்ணக் கால்பந்தாட்டத் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை இளவாலை ஹென்றியரசர் கல்லூரி அணி கைப்பற்றிக் கொண்டது. அழைக்கப்பட்ட பாடசாலை அணிகளின் 17 வயதுப் பிரிவினருக்கிடையில் நடாத்தப்பட்ட இப்போட்டித் தொடரில் ஏராளமான அணிகள் பங்குகொண்டன. அணிக்கு ஏழு பேர் கொண்ட இச்சுற்றுப் போட்டி விலகல் முறையில் நடைபெற்றது. இப்போட்டித் தொடர் ஆனந்தாக் கல்லூரி மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

முதலாவது போட்டியில் இளவாலை ஹென்றியரசர் கல்லூரி அணியும், கொழும்பு சென். பெனடிக்ற் கல்லூரி அணியும் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் ஹென்றியரசர் கல்லூரி அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியது.

இரண்டாவது சுற்று ஆட்டத்தில் ஹென்றியரசர் கல்லூரி அணியும் கொழும்பு ஆனந்தாக் கல்லூரி அணியும் மோதின. ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய ஹென்றியரசர் கல்லூரி அணி 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று மூன்றாவது சுற்றுக்கு முன்னேறியது.

மூன்றாவது சுற்றில் ஹென்றியரசர் கல்லூரி அணியும் மன்னார் சென். சேவியர் ஆண்கள் கல்லூரி அணியும் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் ஹென்றியரசர் கல்லூரி அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று காலிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

காலிறுதிப் போட்டியில் பிலியந்தல மத்திய கல்லூரி அணியும் ஹென்றியரசர் கல்லூரி அணியும் மோதியன. இதில் இரு அணிகளுமே சம பலம் கொண்டமையால் இறுதி வரை போட்டி விறுவிறுப்பாக நடைபெற்றன. இறுதியில் ஹென்றியரசர் கல்லூரி அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில் கொழும்பு சென். பீற்றர்ஸ் கல்லூரி அணியும் இளவாலை ஹென்றியரசர் கல்லூரி அணியும் மோதின. இரு அணிகளுமே ஒன்றுக்கொன்று சளைத்தவை அல்ல என்பதை வெளிப்படுத்தும் வகையில் முட்டி மோதிக் கொண்டன. இதன் காரணமாக இரு அணிகளாலும் இறுதி வரை கோல் எதனையும் பெற்றுக்கொள்ளமுடியவில்லை. நிறைவில் தண்ட உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் ஹென்றியரசர் கல்லூரி அணி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

இறுதிப் போட்டியில் பொலநறுவை றோயல் மத்திய கல்லூரி அணியும் இளவாலை ஹென்றியரசர் கல்லூரி அணியும் மோதிக் கொண்டன. முற்பாதி ஆட்டத்தில் இரு அணிகளாலும் கோல் எதனையும் பெற்றுக்கொள்ள முடியவில்லை. இரண்டாவது பாதி ஆட்டத்தில் எழுச்சி பெற்ற இளவாலை ஹென்றியரசர் கல்லூரி அணி எதிரணி வீரர்களின் வியூகங்களை தகர்த்தெறிந்து அற்புதமானதொரு கோலைப் போட்டுக் கொண்டது. இதற்குப்பதிலடி கொடுக்கும் வகையில் பொலநறுவை றோயல் மத்திய கல்லூரி அணி செயற்பட்டபோதும் கோல் அடிக்கும் வாய்ப்புக்கள் கைநழுவிப் போயின. இறுதியில் இளவாலை ஹென்றியரசர் கல்லூரி அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது. இச்சுற்றுப் போட்டி ஆரம்பிக்கப்பட்டு 12 வருடங்கள் கடந்த நிலையில் வடமாகாண பாடசாலை அணி ஒன்று கிண்ணத்தை வெல்வது இதுவே முதன் முறையாகும்.

கிண்ணம் வென்று கல்லூரிக்கும், மாவட்டத்திற்கும், மாகாணத்திற்கும் பெருமை சேர்ந்த இளவாலை ஹென்றியரசர் கல்லூரி அணிக்கு விளையாட்டு அதிகாரிகள், கல்வி மான்கள், விளையாட்டு நலன் விரும்பிகள், ஆர்வலர்கள் எனப் பலர் வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (48)



# எமது இளைஞர், சிறுவர்களை மதுசாரம், சிகரட் பாவனைக்கு ஏமாற்றும் சதிகளை முறியடிப்போம்

ரி.பிரேமராஜா
ஹெல்திலங்கா,
யாழ்ப்பாணம்.

பெற்றோர்கள் பிள்ளைகளின் செழிப்பான வாழ்வுக்காகப் பாடுபடுகின்றார்கள். பிள்ளைகளுக்கு போஷாக்கு, சிறந்த கல்வி, ஆரோக்கியமான வாழ்வு போன்றவற்றைப் பெற்றுக்கொடுக்க முயற்சிக்கின்றார்கள். எமது பிள்ளைகளை ஆபத்தான நிலைக்குக் கொண்டு செல்லும் நடவடிக்கைகள் பற்றிப் பெற்றோர்களும்




சமூகத்தவர்களும் அறிந்திருப்பது மிகவும் முக்கியமாகும்.

வியாபார உலகம் மேற்கொள்ளும் விளம்பரங்கள் எமது பிள்ளைகளின் வாழ்வில் பெரும் தாக்கத்தைச் செலுத்துகின்றன. விற்பனையை அதிகரிப்பதற்காகவும் பெரும் இலாபம் ஈட்டும் நோக்குடனும் கம்பனிகள் விளம்பரங்களை பல்வேறு முறைகளில் மேற்கொண்டு வருகின்றன.

பல திரைப்படங்களில் சாராயம், சிகரட் பாவனை காட்சிகள் காணப்படுகின்றன. இவற்றைத் தயாரித்தவர்களும் நடிகர்களும் பல்வேறு சந்தர்ப்பங்களில் அந்தக் கம்பனிகளில் பணம் பெற்றுக்கொண்டே மேற்கொண்டுள்ளனர். Rambo படத்தில் நடித்த Sylvester Stallone போன்றவர்கள் அதனை உலகிற்கு வெளிப்படையாகக் கூறியுமிருக்கின்றார்கள்.

விசேடமாக ஆங்கில, சிங்கள மொழித் திரைப்படங்களிலும் பார்க்க தமிழ் மொழித் திரைப்படங்களில் சாராயம், சிகரட் பாவனைக் காட்சிகள் அதிகம். தென்னிந்திய நடிகர்களில் விஜய், அஜித், ரஜனிகாந்த், தனுஷ், விக்ரம் போன்ற பிரபலம் வாய்ந்த நடிகர்கள் உட்பட ஏனைய நடிகர்களும் இந்தக் காட்சிகளில் அதிகமாகப் பங்கெடுக்கின்றனர். இவர்கள் சாராயம் சிகரட் கம்பனிகளின் பணத்தைப் பெற்றுக்கொண்டே நடித்தோம் என்று வெளிப்படையாகக் கூறாவிட்டாலும் அறிவுபடைத்தவர்களுக்கு இவர்கள் மேற்கொள்ளும் கைங்கரியம் தெளிவாகப் புரியும்.

ஊடகங்கள் வாயிலாக விளம்பரப்படுத்தும் எந்தவொரு விடயத்தையும் மிகவும் விரைவாக உறிஞ்சிக் கொள்வது சிறுபராயத்தினரே என்பதை உளவியலாளர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர். விஞ்ஞான ரீதியாக நிரூபிக்கப்பட்ட இந்த உண்மையை சாராயம், சிகரட் கம்பனிகள் நன்கு அறிவர். அதனாலேயே சிறுவர்களை மையப்படுத்திய பிரசாரங்களை மேற்கொள்வதில் கவனம் செலுத்துகின்றனர்.

அதனால் எமது பிள்ளைகள் ஆபத்தான நிலைக்குத் தள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். எமது பிள்ளைகள் திரைப்படங்கள் பார்க்காவிட்டாலும் சாராயம் சிகரட் பாவனைக்கு விருப்பத்தை உண்டாக்கி அவற்றுக்கு ஏமாறச் செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சிறுவர்களையும் இளைஞர்களையும் சிகரட் பாவனைக்கு ஏமாறச் செய்யும் ஒரு நடவடிக்கையாக தனுஷ் நடித்து வெளிவந்த "வேலையில்லாப் பட்டதாரி" திரைப்படத்தில் தனுஷ் சிகரட் குடிக்கும் காட்சியுடன் கூடிய சுவரொட்டிகள் எமது பிரதேசங்களில் அதிகமாக ஒட்டப்பட்டிருக்கின்றன.

எமது பிள்ளைகள் திரைப்படம் பார்க்காவிட்டாலும் வீதியில் செல்லும் போதும் பாடசாலைக்குச் செல்லும் போதும் கடைக்குச் செல்லும் போதும் கூட அந்தச் சுவரொட்டிகள் சிகரட் பாவனைக்கு விருப்பம் ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளது. இது ஆபத்தானதாகும்.

இலங்கையில் மாத்திரமல்லாமல் உலகின் பல்வேறு நாடுகளில் மதுசாரம் சிகரட் உற்பத்திப் பொருட்களின் விளம்பரங்களுக்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது. இதற்குக் காரணம் மனித சமுதாயத்திற்குப் பெரும் இழப்புக்களைத் தரும் சாராயம், சிகரட் பாவனையை சிறு பராயத்திலேயே அவர்களை ஏமாற்றி விருப்பத்தை உண்டாக்குவதாலேயேயாகும்.

இலங்கையில் 27 ஆம் இலக்க மதுசாரம் புகையிலை மீதான அதிகார சபைச் சட்டத்தின் மூலம் 21 வயதிற்குக் குறைந்தவர்களுக்கு மதுசாரம் சிகரட் விற்பனை செய்வது தடை செய்யப்பட்டுள்ளது. அது போலவே அவற்றை விளம்பரப்படுத்துவதும் தடை செய்யப்பட்டுள்ளது.

இலங்கையில் இந்தச் சட்டம் கொண்டுவருவதற்கு முன்னர் சிறுவர்களின் ஆடைகளில் சிகரட் சாராயம் பியர் போன்றவற்றின் படங்கள் பொறிக்கப்பட்டும் விளையாட்டுப் பொருட்கள் வடிவிலான தாயாரிப்புக்கள் மூலமாகவும் விளையாட்டுப் போட்டிகளுக்கு அனுசரணை வழங்குவதன் மூலமும் மில்லியன் கணக்கிலான ரூபாய்களைச் செலவிட்டு தங்களுடைய பிரசாரங்களை மேற்கொண்டனர். இந்தக் கம்பனிகள் இந்தளவு பாரிய் தொகையைச் செலவிட்டு விளம்பரங்களை மேற்கொள்வது தங்களுடைய இலாபத்தைப் பெருக்கிக் கொள்வதற்காகவேயாகும்.

தற்போது எமது வீட்டுவாசலுக்கே வந்திருக்கும் "வேலையில்லாப் பட்டதாரி" திரைப்பட சுவரொட்டிகளில் தனுஷ் சிகரட் பிடிப்பது போன்ற காட்சிகள் திட்டமிட்டு எமது பிள்ளைகளையும் இளைஞர்களையும் இவற்றுக்கு ஏமாறச் செய்யும் நடவடிக்கைகளில் ஒன்றாகும்.

எமது பிள்ளைகளின் வாழ்வியல் உரிமைகளைப் பறித்துக் கொண்டும், உயிர்களைக் காவு கொண்டும், பல கோடி ரூபாய்களைச் சூறையாடிக் கொண்டும் செல்லும் மதுசாரம், சிகரட் கம்பனிகளின் தந்திரங்களையும் அதற்குத் துணை போகும் அனைவரையும் முறியடிக்க அணிதிரள்வோம்.

## ஆகஸ்ட் மாதத்தில்...

ரோமானிய மன்னர் இரண்டாம் அகஸ்டஸ் நினைவாக ஆகஸ்ட் மாதம் வந்தது.









**பிரபலங்களின் பிறந்த தினங்கள்**

4, 1792 ஷெல்லி - ஆங்கிலக் கவிஞர்.

4, 1961 பராக் ஒபாமா - அமெரிக்க ஜனாதிபதி.

5, 1930 நீல் ஆம்ஸ்ட்ரோங் - நிலவில் முதன்முதலாக காலடி வைத்தவர்.

6, 1881 அலெக்சாண்டர் பிளெமிங் - பென்சிலின் கண்டறிந்த விஞ்ஞானி.

11, 1833 இங்கர்சால் - அமெரிக்க புரட்சிகர சிந்தனையாளர்.

13, 1899 அல்.ஃபிரட் ஹிட்ச்கொக் - ஆங்கிலத் திரைப்பட இயக்குநர்.

15, 1769 நெப்போலியன் போனபார்ட் - பிரெஞ்ச் மன்னர்.

18, 1933 ரோமன் போலன்ஸ்கி - ஒஸ்கார் விருது பெற்ற ஹொலிவுட் இயக்குநர்.

20, 1944 ராஜீவ் காந்தி - இந்தியாவின் முன்னாள் பிரதமர்.

26, 1910 - அன்னை தெரஸா - சமாதானத்துக்கு நோபல் பரிசு பெற்றவர்.

29, 1958 - மைக்கல் ஜாக்ஸன் - பிரபல பொப் இசைப்பாடகர்.

**நினைவு தினங்கள்**

5, 1962 மர்லின் மன்றோ - அமெரிக்க திரைப்பட நடிகை.

13, 1910 ஃப்ளோரன்ஸ் நைட்டிங்கேல் - "உலகத் தாதியர் தினம்" அமையக் காரணமான சமூக சேவகி.

16, 1886 ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர் - இந்து மதத் துறவி.

16, 2003 இடிஅமீன் - உகாண்டா நாட்டின் முன்னாள் சர்வாதிகாரி.

20, 1915 போல் எர்லிச் - மருந்து கொண்டு கிருமிகளை அழிக்கும் முறை கண்ட மருத்துவர்.

25, 2012 ஆம்ஸ்ட்ரோங் - நிலவில் முதலில் கால் பதித்த விண்வெளி வீரர்.

30, 1957 என்.எஸ். கிருஷ்ணன் - தமிழ் நகைச்சுவை நடிகர், கலைவாணர்.

31, 1997 டயானா - பிரித்தானிய இளவரசி.

**முக்கிய நிகழ்வுகள்**

1, 1774 இங்கிலாந்தைச் சேர்ந்த ஜோசப் பீரீஸ்ட்லி ஒட்சிசனைக் கண்டுபிடித்தார்.

2, 1922 அலெக்சாண்டர் கிரஹாம்பெல் தொலை பேசியை உருவாக்கினார்.

4, 1914 முதலாம் உலகப்போர் ஆரம்பம் ஆனது. நவம்பர் 11-இல் 1918 இல் பலத்த மக்கள் சேதத்துடனும், பொருள்சேதத்துடனும் முடிவுற்றது.

4, 2005 தென்கொரியா குளோனிங் முறையில் நாய்க்குட்டியை உருவாக்கியது.

5, 1926 முதன்முதலாக உலகில் பேசும்படம் அமெரிக்காவில் நியூயோர்க் நகரில் லார்னர் பிரதர்ஸ் தயாரிப்பில் வந்தது.

5, 1962 தென் ஆபிரிக்க அரசைக் கவிழ்க்க சதி செய்ததாக நெல்சன் மண்டேலாவுக்கு ஆயுள் தண்டனை வழங்கப்பட்டது.

6, 1945 அமெரிக்கா, ஜப்பானிலுள்ள "ஹிரோஷிமா" நகரின் மீது 5 தொன் எடையுள்ள "ஸ்மோல்போய்" என்ற அணுகுண்டை வீசியது. இதனால் 70,000 பேர் மாண்டனர்.

9, 1945 அமெரிக்கா, ஜப்பான் நகரான "நாகசாகி" மீது அணுகுண்டு வீசி பெருத்த சேதத்தை ஏற்படுத்தியது.

12, 1851 ஜோன்சிங்கர் - தையல் இயந்திரத்துக்குக் காப்புரிமை பெற்றார்.

12, 1877 தோமஸ் அல்வா எடிசன் தனது போனோகிராப் கருவியைக் கண்டுபிடித்து முதல் ஒலிபரப்பு செய்தார்.

13, 1913 இரும்புடன் 23வீத கார்பன் மற்றும் 12.8வீத குரோமியம் சேர்த்து உலகின் முதல் "ஸ்டையின்லெஸ் ஸ்டீல்" உருவானது.

14, 1945 இரண்டாம் உலகப் போர் முடிவுக்கு வந்தது.

21, 1610 கலிலீயோ "டெலஸ்கோப்" சாதனத்தை உருவாக்கினார்.

22, 1864 செஞ்சிலுவைச் சங்கம் தோன்றியது.

**ஆகஸ்டில் சுதந்திரம் கொண்டாடும் நாடுகள்**

1 சுவிட்சர்லாந்து
7 ஜவரி கோஸ்ட்
9 சிங்கப்பூர்
13 மத்திய ஆபிரிக்கா
14 பாகிஸ்தான்
15 இந்தியா
15 பஹ்ரைன்
15 கொரியா
16 சைப்ரஸ்
18 ஆப்கானிஸ்தான்
31 மலேசியா

**முக்கிய தினங்கள்**

1-7 தாய்ப்பால் வாரம்
5 நண்பர்கள் தினம்
6 ஹிரோஷிமா தினம்
9 நாகசாகி தினம்
12 உலக இளைஞர்கள் தினம்
13 சர்வதேச இடதுகை பழக்கமுள்ளவர்கள் தினம்
19 சர்வதேச புகைப்பட தினம்

# வலையில் கிடைத்தவை...

## ஆளுநரைப் பார்த்து வயிறெரியும் விக்கி ஐயா!

ஆளுநர் எவ்வளவு வசதியாக இருக்கிறார். அவரது அலுவலகத்திற்குப் போய்ப் பார்த்தால் அது புரிந்திருக்கும். ஆனால் நாங்கள் எவ்வளவு வசதி இல்லாமல் இருக்கிறோம் என்பதைப் பாருங்கள். விடுதிக்கு அழைத்து வந்து உங்களுடன் கதைத்க்க வேண்டி யுள்ளது என விக்கினேஸ்வரன் தென்னாபிரிக்காவின் உப ஜனாதிபதி சிறில் ரமபோஷவுக்குத் தெரிவித்துப் புலம்பியுள்ளார்.




சிறில் ரமபோஷ அவர்களை யாழ்ப்பாணம் ரில்கோ விடுதியில் சந்தித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அதன் பின்னர் ஊடகவியலாளர்களைச் சந்தித்தும் இப்படித் தெரிவித்துள்ளார் விக்கி ஐயா.

வடக்கு மாகாணசபையைக் கைப்பற்றி வைத்திருக்கும் முதலமைச்சர், வாக்களித்த மக்களுக்கு ஒருவித பயனுள்ள செயல்களும் செய்யாமலே பல இலட்சம் சம்பளம், வாகனம், இதர வசதிகள், கொழும்பு சென்று வர விமான ரிக்கற், தனது மனைவியின் தம்பி மன்மதனுக்கும் வேலை வாய்ப்பு என எல்லாவற்றையும் ஓசியா-கப் பெற்றுக் கொண்டு இப்படி வாய் கூசாமல் வெளிநாட்டுக்காரர்களிடம் புலம்புகிறாரே என விக்கி ஐயாவின் கதையைக் கேட்ட ஒரு ஊடகவியலாளர் சொன்னார்.

வடக்கு மாகாண மக்களுக்கு வசதி வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்காமல் உங்கட அலுவலகத்திற்கோ வசதி தேவைப்படுது விக்கி ஐயா என பொதுமக்களும் இனிக் கேட்பார்கள் கவனம்!

## தலிபான்களும் தமிழ் தேசியமும்!

கடந்த ஆண்டு ரொறன்ரோவில் பெட்னா தமிழ் விழா நடந்தது. அதனைச் செரித்துக் கொள்ள முடியாத கனடா தேசிய மக்கள் அவை பார் பார் கரும்புலி நாளில் தமிழ் விழா வைக்கிறார்கள் - இவர்கள் பாவிகள் - துரோகிகள் - மக்களே அந்த விழாவைப் புறக்கணியுங்கள் எனக் கொடி தூக்கினார்கள். இதில் பகிடி என்னவென்றால் கடந்த 25 ஆண்டுகளாக பெட்னா தமிழ்விழா அமெரிக்காவில் யூலை முதல் வாரத்தில்தான் நடைபெற்றது. காரணம் யூலை 4 அமெரிக்க சுதந்திர நாள். நீண்ட வாரவிடுமுறை.

இந்தப் போலி புலி ஆதரவாளர்கள் "நாங்களே எல்லாவற்றையும் தீர்மானிப்போம். நாங்களே தமிழ்த் தேசியத்தை குத்தகைக்கு எடுத்துள்ளோம், நாங்களே வன்னியின் வாரிசுகள் மற்றவர்கள் நாங்கள் சொல்வதை ஏற்றுக் கொள்ள வேண்டும்" எனக் கட்டளை பிறப்பிக்கிறார்கள். ஏற்றுக் கொள்ளத் தவறினால் உடனே இருப்பில் இருக்கவே இருக்கிறது "தமிழ்த் துரோகி" கள் பட்டம்.

இப்படித்தான் தலிபான்கள் பெண்பிள்ளைகள் பள்ளிக்கூடம் போகக் கூடாது, பெண்கள் வேலை செய்யக் கூடாது, சிறு பிள்ளைகளுக்குத் தடுப்பூசி போடக் கூடாது, திரைப்படம் பார்க்கக் கூடாது எனத் தடை செய்கிறார்கள். பெண் மாணவிகள் படிக்கும் பள்ளிக் கூடங்களைக் குண்டு வைத்துத் தகர்க்கிறார்கள். தங்கள் கட்டளைகளை மீறுவோர் அல்லாவுக்கு எதிரானவர்கள் என்று சொல்லி சுட்டுக் கொல்லுகின்றார்கள். கொன்று வருகிறார்கள்.

கரும்புலி நாளில் விளையாட்டுப் போட்டி நடத்தக் கூடாது, தமிழ்விழா கொண்டாடக் கூடாது என்று புலிகளின் பெயரைச் சொல்லி தடை செய்பவர்களைப் பார்க்கும் போது இவர்களையும் தலிபான்கள் - தமிழ்த் தலிபான்கள் - என்று அழைக்க வேண்டியுள்ளது!"

வேலிக்கு ஓணான் சாட்சி என்பது போல த.தே.கூ வைச் சேர்ந்த அனந்தி சசிதரன், பா.அரியனேந்திரன், சிவாஜிலிங்கம், கஜேந்திரன் பொன்னம்பலம் ஆகியோரையும் சாட்சிக்கு இழுத்துள்ளார்கள்.

## எழிலன் பிடித்த எங்கள் பிள்ளைகள் எங்கே?

முல்லைத்தீவில் வடக்கு மாகாணசபை உறுப்பினர் அனந்திக்கு எதிராக பெருமளவு மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். விடுதலைப்புலிகளால் பலாத்கார ஆட்சேர்ப்பில் பிடிக்கப்பட்டு காணாமல் போன இளைஞர் யுவதிகளின் உறவுகளே இவ்வாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். "உமது கணவரை நீ தேடுகிறாய். உமது கணவனால் காணாமல் போன எங்கள் பிள்ளைகளை யார் தேடுவது" என பல பதாகைகளை ஏந்திய வண்ணம் இவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அனந்தி சசிதரனால் தாக்கல் செய்யப்பட்டு தொடரப்பட்டு வரும் வழக்கு விசாரணைகளுக்காக கடந்த 21 ஆம் திகதி அவர் முல்லைத்தீவு நீதிமன்றத்திற்குச் சமுகமளித்திருந்தார். அவர் சற்றும் எதிர்பாராத வகையில் அங்கு குழுமியிருந்த நூற்றுக்கணக்கான பொதுமக்கள் திடீரென அனந்தியின் கணவரான எழிலனால் கடத்தப்பட்ட தங்களது உறவினர்களுக்கு என்ன நடந்தது, அவர்கள் எங்கே என்று மிகவும் ஆவேசத்துடன் அவரை நோக்கிக் கேள்வியெழுப்பினர். இதனால் அனந்திக்கு பாதுகாப்பு படையினரின் உதவியை நாட வேண்டிய நிலைமை ஏற்பட்டது. அங்கு நின்ற பொலிஸாரும், இராணுவத்தினரும் இணைந்து அனந்தியை பொதுமக்களிடமிருந்து மீட்டு அவரது வாகனத்தில் ஏற்றிப் பாதுகாப்பாக அனுப்பிவைத்தனர்.

புலிகளின் காலத்தில் எழிலனினால் கடத்தப்பட்ட இந்த மக்கள் குறித்து ஐ.நா.வின் மனித உரிமைகள் அமைப்பு இவர்களுக்கு உதவி செய்ய முன்வரவில்லை. எந்த ஒரு அரச சார்பற்ற நிறுவனமும் இவர்களது துன்பத்தை கேட்கவில்லை. எந்த ஒரு வெளிநாட்டு தூதுவரும் காணாமற் போன இவர்களது உறவினர்கள் தொடர்பில் கவனம் செலுத்தவில்லை என்றும் அவர்களது உறவினர்கள் குற்றம் சாட்டினர்.

காணாமல் போனவர்களின் உறவினர்கள் தங்களது துக்கத்தை வெளிக் காட்டுவதற்காக வேண்டி வெறுங் காலுடன் நடந்து வந்து அனந்தி சசிதரனிடம் பதில் கேட்டு 350 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் நின்றிருந்தனர்.

## ரீ.என்.ஏ இரண்டாகப் பிளவுபடுகிறது!

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினுள்ளே பெரும் பிளவு ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சி வேட்பாளர் ஒருவருக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கப்பட்ட வேண்டும் என தமிழ் தேசியக் கூட்டமைப்பினரில் ஒருபகுதியினர் கூற, அடுத்தவர்கள் தமிழ் தேசியக் கூட்டமைப்பு தனித்து நின்று ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட வேண்டும் எனக் கூறியுள்ளனர். இதனால் கூட்டமைப்பு இரு பிரிவாக பிளவுபட்டு வாதங்கள் நடைபெற்று வருகின்றதென தகவல்கள் தெரிவிக்கின்றன.

பிரதான இரு கட்சிகளுக்கும் ஆதரவு வழங்குவதினூடாக தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட மாட்டாது என்பதால் வேறான ஒருவரை நியமித்து தமிழ் மக்களின் பலத்தை வெளிக்காட்ட வேண்டும் என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களில் பலர் பலமாக குரல் எழுப்பியுள்ளனர். ஆயினும், அடுத்த சாரார் எதிர்கட்சி வேட்பாளருக்கு ஒப்பந்த அடிப்படையில் சில விடயங்களை முன்வைத்து அவர்களுக்கு ஆதரவு வழங்க வேண்டும் எனக் கூறியுள்ளனர்.

இதனடிப்படையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பினுள் பாரிய பிளவு ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

# Daisy Diamond (Denmark)

# ஒரு மழலையை மௌனமாக்குதல்

– சுரேஷ் கண்ணன்

அன்னா ஒரு சிறந்த நடிகையாகி விடும் பேராவலில் இருப்பவள். அதற்கான உண்மையான தேடலும் உழைப்பும் கொண்டவள். நண்பனால் வல்லுறவுக்குபட்டு குழந்தையொன்று பிறக்க குடும்பத்தாராலும் நிராகரிக்கப்பட்டு ஒரு வறுமைத்தாய் படும் அத்தனை அவஸ்தைகளையும் படுகிறாள்.

அவளது குழந்தையான டெய்சி சில சொற்பமான அற்புத கணங்களைத் தவிர மற்ற நேரம் முழுக்க அழுது கொண்டு வீறிட்டுக் கொண்டும் இருக்கிறது. இதனால் அவள் நடிக்க வாய்ப்பு தேடும் இடங்களிலெல்லாம் நிராகரிக்கப்பட்டுக் கொண்டேயிருக்கிறாள்.

"நான் நடிப்பிற்கு தேர்வு செய்யப்பட்டால்தான் பணம் கிடைக்கும். அப்போதுதான் உனக்கு பால் வாங்க முடியும்" என்று குழந்தையிடம் அன்பாகவும் நயமாகவும் சொல்லிப் பார்க்கிறாள். ஆனால் அதுவோ நெருக்கடியான நேரங்களில் அழுது உயிரை வாங்கி அவளை அவஸ்தைக்குள்ளாக்கி சாவகாசமான நேரங்களில் "ஙே" என்று அபூர்வமாக சிரிக்கிறது.

தொடரும் குழந்தையின் அழுகையும் சப்தமும் அவளை மனநெருக்கடியின் உச்சத்திற்கே கொண்டு செல்கிறது. அவளால் இரண்டு நிமிடங்கள் கூட நிம்மதியாக தூங்க முடிவதில்லை. நடிக்கும் வாய்ப்பிற்காக தன்னை தயார்ப்படுத்திக் கொள்ள முடிவதில்லை. இந்த நெருக்கடி மனநிலை தரும் உச்சத்தில் தான் அவள் அந்த முடிவை எடுக்கிறாள்.

அதன் பிறகும் அவளால் திரை வாய்ப்பை பெற முடிவதில்லை. அதிலுள்ள பலரும் அவளை தங்களின் பாலியல் விழைவுகளுக்காக பயன்படுத்திக் கொள்கிறார்கள். கடைசியாக அவள் எதிர்பார்க்கும் திரை வாய்ப்பு கிடைக்கிறது. முதல் நாள் படப்பிடிப்பில் அவள் என்ன செய்கிறாள் என்பதை டிவிடி பார்த்து அறிந்து கொள்ளுங்கள்.

2007இல் வெளியாகியிருக்கும் இந்த டென்மார்க் திரைப்படத்தை Simon Staho என்பவர் அற்புதமாக, இயக்கியிருக்கிறார். அன்னாவின் மனநெருக்கடிகளை அகச்சிக்கல்களை பார்வையாளனும் மிக நெருக்கமாக உணர முடிகிறது. படத்தின் ஒரேயொரு பிரதான பாத்திரமான அன்னாவாக சுழழஅை சுயியஉந என்பவர் சிறப்பாக நடித்திருக்கிறார்.

ஏறத்தாழ படத்தின் முதல் 40 நிமிடங்களை குழந்தையின் தொடர்ச்சியான அழுகையே ஆக்கிரமிக்கிறது. அதைக் கட்டுப்படுத்த அன்னா எடுக்கும் முயற்சிகள் தோற்றுப் போகும் போது அவள் எதிர்கொள்ளும் உளவியல் ரீதியான சிக்கலை பார்வையாளனும் அடைகிறான்.

மழலை, புன்னகை, தாய்மை போன்றவை புனிதப்படுத்தப்பட்ட விழுமியங்களாக பெண்களின் தலையில் சுமத்தப்பட்டிருக்கும் நிலையில்




நடைமுறையில் ஒரு பிடிவாதமான குழந்தையை வளர்க்க நேரும் அனைத்து தாய்களும் அன்னா எதிர்கொள்ளும் அதே சிக்கல்களை எதிர்கொள்வார்கள் என்று தோன்றுகிறது. வெளியில் சொல்ல முடியாவிட்டாலும் உள்ளூர அந்தக் குழந்தையை வெறுக்கும் கணங்களும் நேரக்கூடும்.

அன்னா அந்த அதிர்ச்சியான முடிவை எடுக்கும் போது ஏறத்தாழ பார்வையாளர்களும் அந்த மனநிலைக்கு இணங்க நெருங்கி வருவது அற்புதமான திரையாக்கத்திற்கு உதாரணம்.

பொதுச் சமூகத்தில் நாகரிக கனவான்களாக உலவும் நபர்கள் அந்தரங்கமான தருணங்களில் எத்துணை விகார எண்ணங்களை ஒளித்து வைத்திருக்கிறார்கள் என்பதையும் படம் காட்டுகிறது.

தன்னுடைய பாவச்செயலுக்காக குற்றவுணர்வு கொள்ளும் அன்னா, அக உலகில் குழந்தையுடன் அவள் சிறுமியாகும் வரையும் கூட தொடர்ந்து உரையாடிக் கொண்டேயிருக்கிறாள். அதுவும் அவளை குற்றஞ்சாட்டிக் கொண்டேயிருக்கிறது. இந்த உரையாடலின் மூலம்தான் தன்னுடைய துயரங்களை அவளால் கடக்க முடிகிறது.

பாலியல் தொழிலாளியாகும் போது தனக்கொரு முகமூடிப் பெயர் தேவைப்படும் போது "Daisy Diamond" என்கிற பெயரை தேர்வு செய்வதின் மூலம் மகளின் மீது அவளுக்குள்ள நேசத்தைப் புரிந்து கொள்ள முடிகிறது.

குழந்தையின் அழுகை அல்ல, கலைத்துறையில் அவள் எதிர்கொள்ளும் தொடர் நிராகரிப்பும் கசப்பும் கூட அவளுடைய விபரீதமான முடிவிற்கு காரணமாக இருக்கக்கூடும்.

பாலியல் தொடர்பான நம்முடைய விகார எண்ணங்களுக்கு வடிகாலாக அமையும் திரை நடிகைகளுக்குப் பின்னால் எத்தனை கசப்புகளும் துயரங்களும் ஒளிந்திருக்கின்றன என்கிற நிர்வாண உண்மையை அறிய வேதனையாய்த்தான் இருக்கிறது.




கோப்பாய் லயன்ஸ் கழக புதிய நிர்வாக உறுப்பினர்கள் பதவியேற்பு நிகழ்வு நீர்வேலி பொன் செல்வமஹால் மண்டபத்தில் நடைபெற்ற போது... (08)

# அறிவாற்றலை வளர்க்க புத்தகங்களை பரிசளிக்கலாம்

## உடுவை தில்லை நடராஜா தெரிவிப்பு

(யாழ்.நிருபர்)

பாடசாலைகளில் நடைபெறும் போட்டிகளில் வெற்றிபெறும் மாணவர்களுக்கு புத்தகங்களைப் பரிசாக வழங்கும் பண்பாட்டை வளர்க்க வேண்டும். புத்தகங்களை வாங்கப் பயன்படுத்தும் பணம் செலவல்ல அது கல்விக்கான முதலீடாகும்.

இவ்வாறு வேதநாயகம் தபேந்திரனின் யாழ்ப்பாண நினைவுகள் நூல் வெளியீட்டு விழாவில் தலைமையுரை நிகழ்த்திய அரசாங்க பொதுச் சேவை ஆணைக்குழு உறுப்பினர் உடுவை. எஸ்.தில்லைநடராஜா தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் நீராவியடி இலங்கைவேந்தன் கலைக்கல்லூரி மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெற்ற இந்நிகழ்வில் உடுவை எஸ்.தில்லைநடராஜா தொடர்ந்து பேசுகையில்,

கடந்த இரண்டு மூன்று தசாபதங்களாக யாழ்ப்பாண மக்களின் வாழ்வியலை சிறந்த முறையில் பத்திரிகைகளில் பதிவு செய்த வேதநாயகம் தபேந்திரனின் பணி பாராட்டுக்குரியது.

நான் அரசசேவையில் இணைந்த காலப்பகுதியில் பிறந்த தபேந்திரன் 1985 இல் ஈழநாடு பத்திரிகையில் இந்திரா காந்தி பற்றி எழுதிய கவிதை இவரது கன்னி முயற்சிகளில் ஒன்றாக விளங்கியதோடு பலரது பாராட்டினையும் பெற்றிருந்தது. ஏனைய எழுத்தாளர்களிடம் இல்லாதசிறப்பு தபேந்திரனுக்கு இருக்கிறது. இவர் ஆரம்பத்தில் மாணவர்களுக்காக பொது அறிவு நூல்கள் பலவற்றை எழுதி வெளியிட்டுள்ளார்.

கடந்த ஆண்டு "பூத்திடும் பனந்தோப்பு" என்ற அருமையான நூலொன்றை எழுதி வெளியிட்டிருந்தார். அந்த நூலுக்கு மக்கள் மத்தியில் அமோக வரவேற்பு இருந்ததால் இரண்டாவது பதிப்பும் வெளிவந்தது.

இன்று வெளியிடப்படும் யாழ்ப்பாண நினைவுகள் என்ற நூல் போர்க்கால சூழலில் யாழ்ப்பாண மக்களின் வாழ்வியல் சோகங்களை நாளைய சந்ததிக்கு எடுத்துச் சொல்லும் ஆவணப் பதிவாக அமைகிறது.

யாழ்ப்பாண மக்களின் வாழ்வியலில் கடந்த காலங்களில் இடம்பெற்ற மங்கல, அமங்கல நிகழ்வுகள், சந்தைகள், தட்டிவான் போக்குவரத்து, கொம்படி ஊரியான் பாதை கிளாலிப் பயணம் மற்றும் பணச்சடங்கு போன்ற பல்வேறு அம்சங்களையும் இந் நூல் படம் பிடித்துக் காட்டுகிறது.

பாடசாலைகள் அதிகளவில் உள்ள மாவட்டம் யாழ்ப்பாணம். இங்குள்ள பாடசாலைகள் பரிசளிப்பு வைபவங்களில் பெறுமதி மிக்க நூல்களைப் பரிசாக வழங்க முன்வர வேண்டும் நான் மாணவனாக இருந்த காலத்தில் எனது பாடசாலையில் நடைபெற்ற போட்டி ஒன்றில் வெற்றியீட்டியபோது "பொன்னியின் செல்வன்" என்ற நாவலைப் பரிசாகத் தந்தார்கள். அந்த நூலை நான் மட்டுமன்றி எனது வீட்டில் உள்ளவர்கள். ஏனைய உறவினர்கள், அயலவர்கள், நண்பர்கள் என்று அதிகமானோர் படித்துப் பயனடைந்தார்கள் என்றார்.

மேலும் யாழ்ப்பாண நினைவுகள் நூலை உடுவை எஸ். தில்லைநடராஜா வெளியீட்டு வைக்க முதற்பிரதியை சுவிட்ஸலாந்தைச் சேர்ந்த கோ.வேல்நாதன் பெற்றுக்கொண்டார்.(10)

# வறிய மாணவர்களுக்கு சைக்கிள்கள் அன்பளிப்பு

ஆனையிறவு தட்டுவான் கொட்டி கண்ணகை அம்பாள் வித்தியாலயத்தில் கல்வி பயிலும் வறுமைக்கோட்டின் கீழ் தெரிவு செய்யப்பட்ட பத்து மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டன.

மீசாலையைச் சேர்ந்த குடும்பம் ஒன்று தங்களது மகளின் முதலாவது பிறந்த தினத்தையொட்டி இத் துவிச்சக்கரவண்டிகளை வழங்கியுள்ளது. பாடசாலை அதிபர் கே.கணேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கண்டாவளை கோட்டக்கல்விப் அதிகாரி இராசேந்திரன் ஆசிரியர்கள், பெற்றோர்கள், ஆசிரிய சங்கத்தினர் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (08)

# ஏழாலை கிணறுகளில் நீரின்றி தெரியும் கற்பாறைகள்

தற்போது நிலவும் கடும் வறட்சியினால் நீர் நிலைகள் வற்றிவரும் சூழ்நிலையில் வடபகுதியில் தண்ணீருக்கு பெயர்போன இடமான வலிகாமத்தின் ஏழாலைப் பகுதியிலும் சில கிணறுகள் வற்றி நீர் இல்லாது வெறும் கற்பாறைகள் மட்டும் காணப்படும் நிலை தோன்றியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்.குடாநாட்டில் கிணற்று நீருக்கு சிறப்புப்பெற்ற ஏழாலைக் கிராமத்தில் நீர் நிலைகள் வற்றிக் காணப்படுவதைக் கண்டு அப்பகுதி வயோதிபர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு நீர் வற்றிய கிணறுகளில் கற்பாறைகள் தெரிவது தற்போது தான் முதற்தடவையாக உள்ளது என அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (66)

# சரஸ்வதி சிலை திறப்பு விழா

அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாலயத்தில் மூன்று இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட சரஸ்வதி சிலை திறப்புவிழா இன்று காலை 9 மணிக்கு வித்தியாலய அதிபர் வி.இந்திரலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராசாவும் சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண உறுப்பினர் வே.சிவயோகன் வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் பிரதிக் கல்விப்பணிப்பாளர் யோ.ரவீந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

இச் சிலை வித்தியாலய முன்னாள் ஆசிரியரான அமரர் செ.கணேசன் ஞாபகார்த்தமாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது. (08)

# கலைத்திறன் போட்டிமுடிவுகள்

கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ச் சங்கம் நடாத்திய கலைத்திறன் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. இப்போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற பாடசாலைகளின் விபரம் வருமாறு,

**குறள் இசை,**
பளை மத்திய கல்லூரி, உருத்திரபுரம் உ.நி.ப., தருமபுரம் உ.நி.ப.

**தமிழ்த்தாய் வணக்கப் பாடல்,**
உருத்திரபுரம் உ.நி.ப., பளை மத்திய கல்லூரி.

**தமிழ் இசைப் பாடல்கள்,**
பளை மத்திய கல்லூரி, கனகபுரம் உ.நி.ப., தருமபுரம் உ.நி.ப.

மேலும் நாட்டார் நிகழ்விற்கு உருத்திரபுரம் உ.நி. பள்ளியும், தனி ஆடல், வரவேற்பு ஆடல் நிகழ்வுக்கு பளை மத்திய கல்லூரியும், சிறுவர் ஆடல் நிகழ்வுக்கு இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பள்ளியும், நிகழ்வுகளை சிறப்பாக அரங்கேற்றியமையால் போட்டியின்றி முதலாம் இடத்திற்கு தெரிவு செய்யப்பட்டனர். (112)

# முரசின் இன்றைய பலன்



(30.07.2014 புதன்கிழமை)

ஜய வருஷம் ஆடிமாதம் 14 ஆம் திகதி.
ஆடிப்பூரம். திருதியை / அமிர்தம்.
பூர நட்சத்திரம் பி.இ. 02.15 வரை. பின் உத்தரம்.
இராகு காலம 12.03 - 01.33 வரை. சுபநேரம 04.33 - 06.03 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | பிறந்த இடத்தைவிட்டு வேற்றிடம் சென்றுவந்த வேளை நோயினால் பீடிக்கப்பட்டு தேக நலம் பாதிக்கப்படல், சக ஊழியர்களுடன் நீங்கள் கொண்டிருந்த கருத்து வேற்றுமை நீங்கும். |
| ரிஷபம் | உரியவேளைக்கு சமூகம் கொடுத்தமையினால் சம்பந்தப்பட்ட நபரைச்சந்தித்துப் பயன்பெறுதல், உணவுக் கட்டுப்பாட்டினை தவறாது கடைப்பிடித்ததால் நோய் குணமாதல். |
| மிதுனம் | வெளிநாட்டுக்கு அனுப்பிய பார்சல் கிடைக்காத செய்தி அறிந்து கவலைதக்க வைத்தல், விவாகம் தொடர்பான இருபக்க பேச்சுவார்த்தைகளும் சுமுகமான முடிவினை கொண்டு வரல். |
| கடகம் | எதிர்பார்த்திருந்த பணவரவு கிடைக்காமையினால் நிகழ்ச்சியைப்பின் போடல், கவனமாக இருந்தமையினால் திருட்டுப் போகாது விடல். |
| சிம்மம் | சனீஸ்வரனின் கெடுபலன்களினின்றும் விமோசனம், அயலவரிடம் நிலவிக்கொண்டிருக்கம் பகையுணர்வு நீங்கி உறவுக்கு கைகொடுத்தல். |
| கன்னி | பங்குத் தொழிலில் சேரவந்தவரின் கடந்தகால சரித்திரம் நன்றாக இருக்காமை கண்டு விலக்கிவிடல், நீண்டகாலத்தின் பின்னர் குழந்தைப்பாக்கியம் தங்கிய நிலைகண்டு ஆனந்தமடைதல். |
| துலாம் | விவாகத்திற்கு தடையாக இருக்கம் தோஷங்களை நீக்க உரிய ஆலயங்களுக்கு செல்ல முற்படல், விட்டுக் கொடுப்பினால் முரண்பாடு நீங்கி சகஜ நிலை ஏற்படல். |
| விருச்சிகம் | மின்சாரப்பாவனை சீர்கெட்டதனால் வியாபாரம் எதிர்பார்த்த இலாபத்தைத்தராது விடல், பழைய பிரச்சினைக்கு முகங்கொடுக்க நேர்ந்ததால் ரகளை ஏற்படல். |
| தனுசு | வைத்தியரின் ஆலோசனையின்றி வில்லைகளைப் பாவித்ததால் தேகநலம் பாதிப்படைதல், கலைஞர்கள், விளையாட்டுத்துறையினர் கௌரவிக்கப்பட்டு பரிசில்கள் வழங்குதல். |
| மகரம் | நிறபேதம் காரணமாக நிச்சயிக்கப்பட்டிருந்த பெண்ணை வெளியூர் மணமகன் விரும்பாமை, கண் சம்பந்தப்பட்ட சத்திரசிகிச்சை மேற்கொள்ள கண்டிக்குப்போகும் உத்தேசம். |
| கும்பம் | பரீட்சை முடிவு சாதகமாக இருந்தமையினால் துணை வரை அடையும் நாளைக்கணக்கிட்டுக் கொண்டிருத்தல், மொழிப்பிரச்சினையால் உண்மை நிலையினை எடுத்துரைக்க முடியாது திண்டாட்டம் தக்க வைப்பு. |
| மீனம் | முகவரின் சமயோசித புத்தியினால் வெளியூர் பயணம் வெற்றியைத்தரல், வெளிநாட்டிலிருந்து எதிர்பாராது விஜயம் செய்தவர்களை உபசரிக்க கடன்படும் நிலை ஏற்படல். |

# மாந்தைகிழக்கு பிரதேசத்தில் 1345 புதிய வீடுகள் நிர்மாணம்

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவில் மொத்தமாக 1,345 புதிய வீடுகள் நிர்மாணித்து கொடுக்கப்பட்டுள்ளதுடன், 324 வீடுகள் பகுதியளவில் திருத்திக் கொடுக்கப்பட்டுள்ளதாகவும் பிரதேச செயலக தகவல்கள் தெரிவிக்கின்றன.

2009ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் முதல் மீள்குடியேற அனுமதிக்கப்பட்ட பின்னர், மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள 15 கிராம அலுவலர் பிரிவுகளிலும் 2,744 குடும்பங்கள் இன்றுவரை மீள்குடி யேறியுள்ளன.

இவர்களுக்கான வீட்டுத் திட்டங்கள் 2010ஆம் ஆண்டிலிருந்து படிப்படியாக முன்னெடுக்கப்பட்டு வந்தன. அந்த வகையில், இந்திய வீட்டுத் திட்டத்தில் 03 கட்டங்களாக 784 வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. "யு.என். கபிரெட" நிறுவனத்தினூடாக 316 வீடுகளும் -நேப் திட்டத்தின் கீழ் 178 வீடுகளும் சர்வோதயத்தினூடாக 17 வீடுகளும் இந்திய அரசின் மாதிரி வீடமைப்பு திட்டத்தின் கீழ் 50 வீடுகளும் புதிதாக நிர்மாணித்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

மேலும், யு.என். கபிரெட் நிறுவனத்தினூடாக 324 வீடுகள் பகுதியளவில் திருத்திக் கொடுக்கப்பட்டுள்ளதாக அத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# குடிநீர் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். சுன்னாகம் மின்சார நிலையம் அமைந்துள்ள பிரதேசத்தில் வசிக்கும் மக்களுக்கு குடிநீர் விநியோகிக்கும் நடவடிக்கை எதிர்வரும் வாரம் முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக வலி. தெற்கு (உடுவில்) பிரதேச சபைத் தவிசாளர் தியாகராசா பிரகாஷ் தெரிவித்தார்.

மின்சார நிலையம் அமைந்துள்ள பகுதியினைச் சூழவுள்ள கிணறுகளிலுள்ள நீரில் கழிவு எண்ணை கலந்து, அந்நீர் குடிநீராக பாவிக்க முடியாத நிலையில் காணப்படுகின்றது.

# தனிநாயகம் நினைவுமுற்றம் அங்குரார்ப்பணம் செய்ய ஏற்பாடு

யாழ். நகரில் உள்ள மடத்தடி அரச மரத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள தனிநாயகம் அடிகள் நினைவு முற்றம் அடிகளாரின் பிறந்த தினமாகிய எதிர்வரும் 2ஆம்திகதி சனிக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கமும் யாழ். மறை மாவட்டமும் இணைந்து முன்னெடுக்கும் இந்நிகழ்வில் யாழ். மறை மாவட்ட ஆயர் அதி வண. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையும் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகளும் இணைந்து தனிநாயகம் அடிகளாரின் திருவுருவச் சிலையைத் திறந்து வைப்பர்.

இந்நிகழ்வில் தமிழ்த்தெய்வ வணக்கத்தை யாழ். தமிழ்ச்சங்க ஆட்சிக்குழு உறுப்பினர் கு.பாலஷண்முகனும் தொடக்கவுரையை தனிநாயகம் அடிகள் நூற்றாண்டுவிழாக்குழு இணைச் செயலர் அருட்பணி அ.பி.ஜெயசேகரமும் வழங்குவர்.

சிலை திறப்பு விழாவைத் தொடர்ந்து திருமறைக் கலாமன்ற கலைத்தூது அழகியற் கல்லூரி மண்டபத்தில் தனிநாயகம் அடிகள் நினைவு நிகழ்வுகள் இடம்பெறும். இதில் தமிழ்ச்சங்க உப தலைவர் பேராசிரியர் மா.சின்னத்தம்பி 'தனி நாயகம் அடிகளாரின் கல்வித்துறைசார் பங்க ளிப்பு' என்ற பொருளில் சிறப்புரையாற்றுவார். திருமறைக் கலாமன்றத்தினர் வழங்கும் "தமிழ்த் தாயின் புகழானாய்" என்ற நாட்டிய நிகழ்ச்சியும் இடம்பெறவுள்ளது. (63)

# சந்தைப்பகுதியிலுள்ள குப்பைகளை அகற்றுமாறு மக்கள் கோரிக்கை

நவாலி சந்தைப்பகுதியில் குவிந்து கிடக்கும் குப்பை கூழங்களால் சந்தைக்கு பொருட்கள் கொள்வனவு செய்யச் செல்லும் பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர்.

சந்தையின் முன்புறமாக வீதி ஓரத்தில் மரக்கறிகள் விற்பனை செய்யப்படும் பகுதியில் இவ்வாறு கழிவு குப்பைகள் குவிந்திருப்பதால் இலையான்களின் தாக்கம் அப்பகுதியில் அதிகமாக காணப்படுவதுடன் ஏனைய கிருமித் தொற்றுக்களும் ஏற்படலாம் என பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

வலி.தென்மேற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட நவாலி சந்தையின் இந்நிலையினை சீராக்கி குப்பை கூழங்களை உடனடியாக அகற்றுவதற்கு உரிய அதிகாரிகள் ஆவனசெய்ய வேண்டுமென மக்களால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது (66)

# மஹோற்சவம்

கொடிகாமம் ஸ்ரீ மஹா லாவண்யா காளி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் நாளை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 13 தினங்கள் திருவிழாக்கள் இடம்பெறவுள்ளன.

மஹோற்சவ பிரதமகுரு சிவபூஜா துரந்தரர் சிவஸ்ரீ.இ.வீரசிங்கக்குருக்கள் தலைமையில் நடைபெறும்.இத்திருவிழாக்களில் எதிர்வரும் 9ஆம் திகதி சப்பறத்திருவிழாவும் 10ஆம் திகதி சனிக்கிழமை தேர்த்திருவிழாவும் 11ஆம் திகதி பூங்காவனத் திருவிழாவும் நடைபெறும் என ஆலய பரிபாலனசபையினர் அறிவித்துள்ளனர் (85)

# "குறிஞ்சிசாரல்" நாடகநிகழ்வு



தமிழச்சங்கத்தின் ஏற்பாட்டில் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் குறிஞ்சிசாரல் கலை, கலாசார நாடக நிகழ்வு கடந்த ஞாயிற்றுக் கிழமை யாழ்.வீரசிங்கம் மணடபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்விற்கு பிரதம அதிதிகளாக பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பிரதி துணை வேந்தர் டி.எஸ்.சேனநாயக்கா, யாழ். பல்கலைக்கழக துணை வேந்தர் வசந்தி அரசரட்ணம் ஆகியோர் கலந்து கொண்டு குறிஞ்சிசாரல் கலை, கலாசார நாடக நிகழ்வை ஆரம்பித்து வைத்தனர்.

யாழ்.மாவட்டத்தில் முதற் தடவையாக ஏற்பாடுசெய்யப்பட்ட இந்நிகழ்வு இனங்களுக்கிடையில் நட்புறவையும் சமூகங்களுக்கிடையில் சமூக கட்டமைப்பையும் ஏற்படுத்தும் வகையில் இடம்பெற்றது. இதில் பேராதனைப்பல்கலைகழக மற்றும் யாழ்.பல்கலைக்கழக மாணவர்களின் நெறியாள்கையில் சமூகங்களில் எற்படும் மாற்றங்கள் எனும் தலைப்பிலான நாடகமும் அரங்கேற்றப்பட்டன.

மேலும் இந்த நிகழ்வில் பல்கலைக்கழக பேராசிரியர்கள்,விரிவுரையாளர்கள், மாணவர்கள்,பொதுமக்கள் என பலர் கலந்துகொண்டனர். (48)

# ஆயுர் வேதம்



## தவறான உணவால் ஏற்படும் தோல்வியாதிகள் !

தோல் உபாதையால் இன்று பெருமளவில் மனிதர்கள் பாதிக்கப்படுவதற்கான காரணங்களை கீழ்காணும் வகையில் சரகஸமஹிதை எனப்படும் ஆயுர்வேத நூல் பட்டியலிடுகிறது.

ஒன்றோடொன்று சேராத உணவுப் பொருட்களைச் சேர்த்துச் சாப்பிடுவது. உதாரணமாக முறுக்கு, மிக்ஸர், உப்பு பிஸ்கட், சாலட், சுண்டல், பீட்ஸா, பர்கர், போண்டா, பஜ்ஜி, பக்கோடா, தயிர்வடை போன்றவற்றைச் சாப்பிட்டு அதன் மேல் சூடாக தேநீர் அல்லது கோப்பி வகையறாக்களைப் பருகுவது.

நீர்ப்பொருட்கள், எண்ணெய் வகையறாக்கள், புதிதாக அறுவடை செய்யப்பட்ட அரிசி, தயிர், மீன், அதிக உப்பு, புளிப்பு, உளுந்து, முள்ளங்கி, மாப் பண்டங்கள், எள்ளு, பால், வெல்லம், எளிதில் செரிக்காத உணவு வகைகளை அதிக அளவில் உட்கொள்ளுதல்.

வாந்தி, வயிற்றிலுள்ள வாயு, மலம், சிறுநீர் ஆகியவற்றை வலுக்கட்டாயமாக அடக்குதல்.

உணவை உண்ட பிறகு அதிக உடல் உழைப்பு, மன உளைச்சலுக்காளாகுதல், குளிர்ச்சியான பதார்த்தங்களை உண்ட பிறகு, உடனே சூடான பொருட்களைச் சாப்பிடுவது.

அதிக நேரம் பட்டினி கிடந்து, பிறகு வயிறு முட்டச் சாப்பிடுவது.

அதிக வெயிலில் அலைந்து திரிந்து வந்தவுடனும், உடல் உழைப்பினால் உடற்சூடு ஏறிய நிலையிலும், திடீரென்று ஏற்பட்ட பயத்தின்போதும் குளிர்ந்த நீரை குடிப்பதும், குளிர்ந்த நீரில் குளிப்பதும்.

உண்ட உணவு ஜீரணமாகாத நிலையில் மேலும் உணவை ஏற்பது.

பகலுறக்கம் கொள்ளுதல் ஆகியவையாகும்.

மேற்குறிப்பிட்ட காரணங்களால் உடலில் ஏற்படும் மாற்றங்கள்தான் என்னவென்பதையும் ஆயுர்வேதம் விளக்கிக் கூறுகிறது. மூன்று வகையான தோஷங்களாகிய வாத, பித்த, கபங்கள் கேடடைந்து, நான்கு வகையான தாதுக்களாகிய தோல், இரத்தம், சதை, நிணநீர் ஆகியவற்றைக் கெடுக்கின்றன. அதனால், இந்த ஏழும் கெட்டுப் போவதின் விளைவாக ஏழுவகையான பெரிய தோல் உபாதைகளும், பதினொரு வகையான சிறுதோல் உபாதைகளும் ஏற்படுவதாக ஆயுர்வேதம் கண்டறிந்துள்ளது.

நீரிழிவு உபாதையினால் முன்குறிப்பிட்ட தோஷங்களும், தாதுக்களும் கேடுற்ற நிலையில் தோல் உபாதையால் பாதிக்கப்பட நேரும். அரிப்பும், மருக்களும் உடலில் ஏற்படுவதற்கு இவற்றின் சேர்க்கை இல்லாமல் ஒரு பொழுதும் ஏற்படாது என்பதால், மேற்குறிப்பிட்ட காரணங்களைத் தவிர்த்து தோஷ தாதுக்களில் ஏற்பட்டுள்ள விஷச் சேர்க்கையை முறித்து, அவற்றை வெளியேற்றி உடல் நலம் பெறுவதே ஒரே வழியாகும்.

சிறந்த தோல் நிவாரண ஆயுர்வேத மருந்துகளாகிய மஞ்சிஷ்டாதி கஷாயம், வில்வாதி குளிகை, ஆரக்வதாதி கஷாயம், சிலாசத்து, மாணிபத்ரம் லேஹ்யம், கந்தக ரஸாயனம், தினேசவல்யாதி தைலம், நால்பாமராதி தைலம், தூர்வாதி தைலம், திக்தகம் க்ருதம், மஹாதிக்தகம் க்ருதம் முதலியவற்றை ஓர் ஆயுர்வேத மருத்துவரின் ஆலோசனைப்படி பயன்படுத்தினால் நீரிழிவுத் தாக்கத்தைக் குறைத்துக் கொள்வதோடு, தோல் உபாதைகளுக்கான ஒரு தீர்வாகவும் இம்மருந்துகள் பயன்படலாம்.

சரக்கொன்றைப்பட்டை, வேப்பம்பட்டை, கருங்காலிக் கட்டை, ஏழிலைப்பாலைப் பட்டை, புங்கம்பட்டை, அரசம்பட்டை ஆகியவற்றை வகைக்கு ஐந்து கிராம் வீதம் பெருந்தூளாக இடித்து சுமார் இரண்டு லீற்றர் தண்ணீரில் கொதிக்கவிட்டு ஒரு லீற்றர் ஆகும் வரை குறுக்கி வடிகட்டி ஒரு நாளில் பலதடவை சிறிது சிறிதாக பருகி வர குடல் உட்புறச் சுத்தத்தை ஏற்படுத்தித் தரும். இதன்மூலமாக இரத்தம் சுத்தமடைவதுடன் தோல் உபாதைகளும் மறையக்கூடும்.

### பலன்தரும் பப்பாசி

◆பப்பாசிப் பழத்தை அடிக்கடி குழந்தைகளுக்குக் கொடுத்து வர அவர்களது உடல் வளர்ச்சி துரிதமாகும். எலும்பு வளர்ச்சி உறு திப்படும்.

◆ மூட்டு வலி உள்ளவர்களுக்கும், உடல் எடையைக் குறைக்க விரும்புபவர்களுக்கும், கண் பார்வையை அதிகரிக்க விரும்புபவர்களுக்கும் பப்பாசி நல்லதொரு மருந்துபோல செயற்படும்.

◆பப்பாசியை அழகு தரும் பொருளாகவும் பயன்படுத்தலாம். பழுத்த பப்பாசிப் பழத்துண்டில் ஒன்றை எடுத்து முகம், கழுத்து பகுதிகளில் தேய்த்து பயற்றம் மா அல்லது கடலை மா கொண்டு கழு வினால் வறண்ட தோல் மினுமினுக்கும்.

◆ பப்பாசி சருமத்தில் சுருக்கம் வராமல் மேனி எழிலைப் பாது காக்கும்.

◆ பப்பாசிப் பழத்தை தேனில் தோய்த்து உண்டுவர நரம்புத்தளர்ச்சி குறையும்.

# தமிழ் பேசும் பெண் பொலிஸாரை முல்லையில் அதிகரிக்க நடவடிக்கை

முல்லைத்தீவு மாவட்டத்தின் தமிழ் பேசும் பெண் பொலிஸ் உத்தியோகஸ்தர்களை அதிகரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக முல்லைத்தீவு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சம்பிக்க சிறிவர்தன நேற்று முன்தினம் திங்கட்கிழமை தெரிவித்தார்.

இதுபற்றி அவர் மேலும் தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு மாவட்டத்தில் 17 பெண் பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் கடமையாற்றி வருகின்றனர். இவர்களில், முல்லைத்தீவில் மூவரும், புதுக்குடியிருப்பில் ஒருவருமாக நான்கு தமிழ் பேசும் பெண் பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் கடமையாற்றுகின்றனர்.

மேலும் முள்ளியவளை, ஒட்டுசுட்டான், வெலியோயா ஆகிய பொலிஸ் நிலையங்களுக்கு தமிழ் பேசும் பெண் பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்பட வேண்டிய தேவை உள்ளது.

எனவே, முல்லைத்தீவு மாவட்டத்தில் தற்போது தமிழ் பேசும் பெண் பொலிஸார் குறைவாக இருப்பதால், பொதுமக்கள், குறிப்பாக பெண்கள் தமது முறைப்பாடுகளை பதிவு செய்வதற்கு பல சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் என முறையிட்டுள்ளனர்.

ஆகவே, மக்களின் சிரமங்களை கவனத்திற்கொண்டு முல்லைத்தீவு மாவட்டத்தில் தமிழ் பேசும் பெண் பொலிஸ் உத்தியோகஸ்தர்களை அதிகரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்கிறோம் என்றார்.

# தமிழர்களின் அதிகாரங்கள் குறைவதற்கு போலித்தன அரசியல் வியூகமே காரணம்

## யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளர் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

கடந்த காலத்தில் அரசியல் ரீதியான தீர்வை பெற முடியாமைக்கான காரணம் மக்களது கருத்துக்களையும் அவர்களது எதிர்பார்ப்புகளையும் புறம் தள்ளிவிட்டு ஒரு தலைப்பட்சமாக தமிழ தேசியவாத தலைவர்கள் மேற்கொண்டு வந்த போலித்தனமான அரசியல் வியூகங்கள் தான் தமிழர்களது அதிகாரங்கள் குறைந்து செல்வதற்கு காரணமாகின என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கே.வி. குகேந்திரன் தெரிவித்தார்.

வரணி குடமியன் பகுதி மக்களது வாழ்வாதார விடயங்கள் தொடர்பாக ஆராய்வதற்காக அப்பகுதி மக்களால் ஒழுங்கு செய்யப்பட்ட மக்கள் சந்திப்பு குடமியன் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றிய ஒருங்கிணைப்பாளர் வி.கே. ஜெகன் மேலும் கூறுகையில்,

ஈ.பி.டி.பி ஒரு ஜனநாயக அமைப்பு. நாங்கள் இணக்க அரசியலையே விரும்புகின்றோம். இதன் மூலம் தான் இலங்கை வரலாற்றில் தமிழர்களது உரிமைகளையும் வாழ்வாதாரத்தையும் நிலைநிறுத்த முடியும். அதற்காகத்தான் அரசியல் பலம் குறைந்தவராக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இருந்தாலும் மக்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்த போராடிக் கொண்டிருக்கின்றார் என்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

ஈ.பி.டி.பி கட்சியின் வரலாற்றில் கட்சி ஆரம்பிக்கப்பட்ட காலம் தொடக்கம் இன்று வரை நாங்கள் மக்களது காவலர்களாகவே இருந்து வருகின்றோம். இதைப் பொறுக்க முடியாத தேசியவாதிகள் ஒவ்வொரு நாளும் எமது செயற்பாடுகளை விமர்சித்து மக்களது வாழ்வியலை மேம்பட விடாத வகையில் ஊடகங்கள் வாயிலாக தவறான செய்திகளை மக்களுக்கு தெரியப்படுத்தி வருகின்றனர். அபிவிருத்திகளும் வேலை வாய்ப்பிற்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைத் தேடி வரும் மக்கள் எதற்காக அவருக்கு அரசியல் பலத்தைக் கொடுக்க தயங்குகின்றீர்கள்.

மக்களுக்கான அனைத்துத் தேவைகளையும் பெற்றுக் கொடுக்கக்கூடிய சக்தியாக இருக்கும் வடமாகாண சபையை தேசியம் பேசுபவர்கள் அதன் அதிகாரங்களைக் கொண்டு மக்களுக்கு கிடைக்க வேண்டியவற்றைத் தடுத்து நிறுத்துவதற்கே பயன்படுகின்றனர் என்ற உண்மையை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

இச் சந்திப்பில் சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் திருகுமரன், மெடிஸ்கோ, செந்தூரன், சமுர்த்தி உத்தியோகத்தர்களான உஷா, சிலோசினி, கிராம உத்தியோகத்தர்களான பிரதீபன், இராஜகுமார், பாடசாலை அதிபர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# கூட்டெருவுக்கு நடுவில் காட்டு மரக்குற்றிகள் கடத்தல்



சிறிய ரக வாகனம் ஒன்றில் வன்னியிலிருந்து கோப்பாய்ப் பகுதிக்கு காட்டு மரக்குற்றிகளைக் கடத்தி வந்த வாகனச் சாரதி யொருவரை கடந்த சனிக்கிழமை கைதுசெய்ததாக கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஸ்ரீநிக சஞ்சீவ ஜெயக்கொடி தெரிவித்தார்.

கூட்டெருக்களுக்கு நடுவில் மறைத்து வைத்தே இவர் மரக்குற்றிகளை கடத்தி வந்துள்ளார்.

கோப்பாய்ப் பகுதியிலுள்ள தோட்டம் ஒன்றில் கூட்டெருக்களை கொட்டிவிட்டு மரக்குற்றிகளைக் கொண்டு செல்ல எத்தனித்த தருணத்திலே பொலிஸ். இவரைக் கைதுசெய்துள்ளனர்.

மேற்படி சந்தேகநபர் ஏற்கனவே இவ்வாறு மூன்று தடவைகள் கடத்தலில் ஈடுபட்டுள்ளமை விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

அத்துடன், பிடிக்கப்பட்ட வாகனத்தின் உரிமையாளரைக் கைதுசெய்வது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகப் ஜெயக்கொடி மேலும் தெரிவித்தார்.

# சிற்றுண்டிச்சாலைகளில் நேற்று முதல் சோதனை

(கொழும்பு)

நாடுபூராகவுமுள்ள சிற்றுண்டிச்சாலைகளை பரிசோதனை செய்ய நுகர்வோர் சேவைகள் அதிகாரசபை தீர்மானித்துள்ளது. நேற்று முதல் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

சிற்றுண்டிச்சாலைகள் தொடர்பில் நுகர்வோரிடம் இருந்து கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளை அடுத்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# ஏழாலையில் வீட்டில் கொள்ளை இரு சந்தேக நபர்கள் கைது

யாழ். ஏழாலை மேற்கிலுள்ள ஆசிரியர் ஒருவரின் வீட்டில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் அடிப்படையில் ஏழாலை வடக்கைச் சேர்ந்த இருவரை நேற்று முன்தினம் மாலை கைதுசெய்ததாக சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.



மேற்படி வீட்டிலுள்ளவர்கள் நேற்று முன்தினம் பகல் வெளியில் சென்றிருந்தபோது இக் கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வீட்டின் பின் கதவுகளை உடைத்துக்கொண்டு உள்நுழைந்தவர்கள் 24 இலட்சத்து 55 ஆயிரம் ரூபாய் பெறுமதியான தங்கநகைகளையும் 45,000 ரூபாய் பணத்தையும் கொள்ளையடித்துச் சென்றதாக சுன்னாகம் பொலிஸார் தெரிவித்துள்ளார்.

இக்கொள்ளைச் சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் வீட்டு உரிமையாளர் முறைப்பாடு செய்துள்ளார்.

இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையைத் தொடர்ந்து இச்சந்தேக நபர்களை கைதுசெய்ததாகவும் பொலிஸார் கூறினர்.

# ஆடிப்பூர நன்னாளில் அம்பிகையைத் தொழுவோம்



இன்று ஆடிப்பூரம் இது ஒரு சிறப்பான புனிதம் நிறைந்த பொன்னாளாகும். அம்பிகைக்குரிய இந்த ஆடிப்பூரம் சைவ சமயிகளுக்கு மிகச்சிறந்த புண்ணியத் திருநாள். உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற ஆதிபராசக்தியாம் அம்பிகைக்கு ருதுசோபன விழா நடாத்துகின்ற இந்த ஆடிப்பூரம் அம்பாள் ஆலயங்களில் மிகவும் விசேடமாகக் கொண்டாடப்படுகின்றது.

ஆடி மாதம் பிறந்து விட்டால் கூடவே விரதங்களும் விழாக்களும் வந்து சேர்ந்து விடும். ஆடிப் பிறப்பு முதலில் வரும். அதைத் தொடர்ந்து ஆடிச்செவ்வாய், ஆடி அமாவாசை, ஆடிப்பூரம், ஆடிக்கிருத்திகை என்று நல்ல நாள்கள் வந்து கொண்டே இருக்கும்.

அந்த வகையில்,

இன்றைய ஆடிப்பூரம் அம்பிகையின் ருது சாந்தி விழா நடைபெறுகின்ற ஒரு தனித்துவமான விசேட நன்னாளாகும். இப்பரந்த நிலவுலகுக்கெல்லாம் தாயாக விளங்குகின்ற லோகமாதா வாகிய அன்னை ஆதிபராசக்தி தன்னுடைய பேரருட்பிரவாகத்தின் வெளிப்பாடாக அகிலமெங்கும் அற்புத இன்னருள் சுரக்கும் பொன்னான நாள் இன்றைய ஆடிப்பூரம்.

"சக்தி இல்லையேல் சிவமில்லை" என்பது முதுமொழி "சக்தி இருந்தால் செய்! இல்லையேல் சிவனே என்று இரு என்பது முதுமொழியாகும். ஆகவே சக்தி இருந்தால் தான் சிவபெருமானாலும் இயங்கமுடியும். அந்தச் சக்திக்குரிய விசேட தினம் தான் இன்றைய ஆடிப்பூரம் .

நமது முதாதையர்கள் எல்லாவற்றையும் பொண்ணாகவே உருவகித்து வணங்கும் வழக்கமுடையவர்கள். கல்விக்கு அதிபதி கலைமகள் சரஸ்வதி செல்வத்துக்கு அதிபதி இலட்சுமி அலைமகள் வீரத்துக்கு அதிபதி துர்க்கை மலைமகள் நிலத்துக்குக் கூடப்பூமாதேவி என்று தான் பெயர்-ஏன்? நித்திரைக்குக் கூட நித்திராதேவி என்றே பெயர் வைத்துள்ளார்கள். நதிகள் கூட காவிரி, சிந்து, நர்மதா, கங்கை என்று பெண்களின் பெயர்களில் தான் அழைக்கப்படுகிறது.

இவ்வாறு பெண்களாவே வர்ணிக்கப்பட்ட பல விடயங்கள் நமது தமிழர் வாழ்வில் பின்னிப் பிணைந்துள்ளன. இன்று கொண்டாடப்படும் ஆடிப்பூரம் அம்பிகையின் ருது சாந்தியை மையமாகக் கொண்டு விழா வாகக் கொண்டாடப்படுகின்றது.

ஆதலால்-

ஆதிபராசக்தியின் அருட்திறத்தை வெளிப்படுத்தி நிற்கும் இன்றைய ஆடிப்பூரத்தை விரமாக அனுஷ்டித்து அம்பாளுடைய திருவருட் பிரசாதத்தைப் பெற்று வாழ்க்கையில் சகல சௌபாக்கியங்களும் கை வரப்பெற்று உய்வோமாக.

* * * *

"தெய்வத் தமிழ்ச்சுடர்"
இராசையா ஸ்ரீதரன்

# தேவி மஹோற்சவம்

ஆவரங்கால் பர்வதவர்த்தனி அம்பாள் சமேத நடராஜா இராமலிங்கேஸ்வரர் தேவஸ்தானத்தில் தேவி மஹோற்சவம் 10 நாடகள் நடைபெற்று வருகிறது.

இந்த மாதம் 21 ஆம் திகதிகொடியேற்றத்துடன் ஆரம்பமாகி இவ்வுற்சவம் நடைபெற்று வருகிறது.

நேற்று தேர்த்திருவிழா இடம்பெற்று இன்று ஆடிப்பூரத்தன்று தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது.

# க.பொ.த (சா/த) மாணவர்களுக்கான பயிற்சி பரீட்சை வினா விடைகள்

தமிழ்மொழியும் இலக்கியமும்

01) கல்வியே அழியாச் செல்வம் என்ற கட்டுரையை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

அ) அழியாச் செல்வமாகிய கல்வி ஏனைய செல்வங்களைவிட சிறப்பானது என்பதை ஆராய்க?

- வெள்ளத்தினால் அழியாது, நெருப்பால் வேகாது கள்வர்களுக்காக அஞ்சவேண்டியதில்லை.
- கொடுக்கக்கொடுக்கக் குறையாது பெருகும்
- நமது அறிவினுள்ளே இருப்பதனால் பாதுகாப்பது எளிது
- கல்வி நமது உயிரைப்பற்றி உள்ளே இருக்கும் நுண்பொருள்
- நம் உடம்பு அழிந்தாலும் தான் அழியாமல் தமது உயிரோடு சேர்ந்து எல்லாப் பிறப்புக்களிலும் நம்மைத் தொடர்ந்து வரும்.
- அறியாமையை நீக்கி அறிவைக் கொடுக்கும்.
- அறிவை வளர்க்கும் நூல்களைக் கற்பதால் மக்கள் விலங்குகளிலும் உயர்ந்ததாக எண்ணப்படல்.
- கேடில்விழுச்செல்வம் கல்வி ஒருவருக்கு மாடல்ல மற்றுப்பிற - வள்ளுவர் கூற்று.
- மன்னனும் மாசறக்கற்றோனும் சீர் தூக்கின் மன்னனிற் கற்றோன் சிறப்புடையவன்.
- மன்னனுக்கு தன் தேசத்தில்தான் சிறப்பு கற்றவருக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு.

ஆ) கல்வியைப்பயன்படுத்தும் முறைபற்றி கட்டுரையாசிரியர் கூறும் கருத்தை விளக்குக.

- உயர்ந்த நூல்களைக் கற்று அந்நூல்களில் சொல்லப்பட்ட நல்லொழுக்கத்துடன் பழகுதல் வேண்டும்.
- கற்றறிந்தவர் கண்ட அடக்கம் அறியாதார் பொச்சாந்தும் தம்மைப் புகழ்ந்துரைப்பார் என்பதற்கேற்ப பெருமை பாராட்டாமலும் செருக்கு அடையாமலும் பணிந்த சொல்லும் பணிந்த செயலும் உடையோராய் இருத்தல் வேண்டும்.
- எல்லா உயிர்களிடத்தும் அன்பும் இரக்கமும் இருத்தல் வேண்டும்.
- நல்லொழுக்கத்தில் வழுவாது இருத்தல் வேண்டும்.
- எல்லாம் வல்ல இறைவனை மனமொழி மெய்களால் நினைத்து வாழ்த்தியும், வணங்குதல் வேண்டும்.
- உலக வாழ்க்கையை இனிது நடாத்தி நாமும் பயன்பெற்று பிற உயிர்களையும் பயன்பெற செய்ய வேண்டும்.

இ. கல்விச் செல்வம் குறித்து திருவள்ளுவர் உரைப்பவை யாவை?

- ஒருவனுக்கு அழிவில்லாத சீரிய செல்வமானது கல்விச்செல்வமாகும். மற்றயவை யாவும் அழியக்கூடியன என்பது அவர்தம் கருத்தாகும்.
- கற்றவர் மக்களையும் கல்லாதவர் விலங்குகளையும் ஒப்பர் என்பது வள்ளுவர் கருத்தாகும்.
- "கல்லாதான் ஒப்பங்கழிய நன்று ஆயினும் கொள்ளார் அறிவுடையார்" என்னும் குறளில் கல்லாதவனுடைய அறிவுடைமை ஒரு வகையில மிக நன்றாக இருந்தாலும் கற்றோர் அதை அறிவுடைமையாக ஏற்றுக் கொள்ளமாட்டார் என்கிறார்.
- கண்ணைப் பெற்றிருந்தும் கல்வியறிவு இல்லாதவர்கள் கண்ணில்லா தவர்கள் ஆவார் என்பது அவருடைய கருத்தாகும்.

02) கல்வியே அழியாச் செல்வம் எனும் கட்டுரை மூலம் மறைமலை அடிகளார் வலியுறுத்துபவை யாவை?

1. அழியாச் செல்வம் கல்வியே ஆகும்.
2. ஏனைய செல்வம் அழிந்துவிடும்.
3. செல்வம் பிறர்க்கு கொடுக்கும் தோறும் முடியும்.
4. கல்வி பிறர்க்கு கொடுக்கும் தோறும் கூடும்.
5. பொருட் செல்வத்தால் பயமும், கவர்தலாற் அழிவும் ஏற்படும்.
6. கல்வி உடையாரே கண்ணுடையோர்
7. கல்வியே உண்மை அழகு தரும்.

03) "கண்ணிற் சிறந்த உறுப்பில்லை கொண்டானின் துன்னிய கேளிர் பிறரில்லை"

துன்னிய கேளீர் என்பதன் ஒத்த பதம் என்ன?

நெருங்கிய உறவினர்.

04) "வெட்டெனவே மெத்தனவே" என்ற பாடலில் இன்சொற்களின் சிறப்பு எடுத்துக்காட்டப்படும் விதத்தை எழுதுக?

வன்சொற்கள் இனிய சொற்களை வெல்லமாட்டாது.

05) "கற்றறிந்தார் கண்ட அடக்கம் அறியாதார்" என்ற நீதிப்பாடலுக்கு இணையான பழமொழி ஒன்று எழுதுக?

"நிறைகுடம் தழம்பாது குறைகுடம் தழம்பும்"

06) மானங்குலங் கல்வி... என்ற பாடலில் பசிவந்ததும் பறந்து போகும் பத்தும் எவை?

மானம், குலம், கல்வி, வண்மை, அறிவுடமை, கொடை, தவம், உயர்ச்சி, தொழில்முயற்சி, பெண்கள் மேற்கொண்ட அன்பு என பத்துமாம்.

07) ஔவையார் எழுதிய நீதி நூல்கள் இரண்டின் பெயர் எழுதுக?

வாக்குண்டாம், நல்வழி

08) "வேயின் திரண்டதோள் வேற்கண்ணாய்" என்பதில் விளி வேற்றுமை ஏற்றுள்ள சொல் யாது?

கண்ணாய்

09) கொடுங்கோன்மை எனும் அதிகாரத்தில் மன்னனுக்கு கூறும் அறிவுரை யாது?

தீமைகளை ஆராய்ந்து அதற்கேற்ற வகையில் விழி செய்ய வேண்டும்.

10) நாட்டார் பாடல் என்றால் என்ன?

நாட்டுப்புற மக்கள் தமது உள்ளத்தில் எழுந்த உணர்ச்சி வெளிப்பாடுகளை உணர்த்தும் பாடல்.

11) நாட்டார் பாடல்களை வேறு எவ்வாறு அழைப்பர்?

வாய்மொழி இலக்கியம், எழுதாக்கவி என அழைப்பர்.

12) நாட்டார் பாடலில் உயிர் நாடியாக விளங்குவது எது?

இசையே நாட்டார் பாடலின் உயிர் நாடியாகும்.

13) "குத்துக்கட்டை மேலேறி" என்ற பாடலில் தலைவி தலைவனை எவ்வாறெல்லாம் அழைக்கின்றாள்?

வெள்ளைச்சாவல், பாண்டிமன்னன், என்சாமி

14) "முள்ளுமூணும் மண்ணுக்குள்ளே முகரெண்டும் என்மேல்" இத்தொடர் உணர்த்தும் உணர்வு யாது?

காதல் உணர்வு, சிருங்காரம்.

15) "கவ்வாத்து" என்பது எப்பிரதேச பேச்சுமொழி வழக்கு?

மலையகப் பிரதேசம்

16) கவடியடித்தல் என்ற பாடலில் நோய் தீர்க்கப் பயன்படுத்தப்படும் மூலிகைகள் நான்கு தருக?

தென்னப்பட்டை, மருதம்பட்டை, பூம்பட்டை, புளியம்பட்டை என்பனவாகும்.

17) கிராமிய விளையாட்டுக்கள் நான்கு தருக?

பம்பரம், கிளித்தட்டு, பல்லாங்கு, கிட்டிப்புள், காளை அடக்கல், கவடியடித்தல்.

18) கடலில் பிடிக்கும் மீன் வகை நான்கு தருக?

சுறா, உழுவை, பாரை, சூரை, சூடை, திருக்கை

### ஒரு பதிவிரதையின் சரித்திரம்

19) ஒரு பதிவிரதையின் சரித்திரம் என்னும் கவிதையினை எழுதியவர் யார்? அட்டாவதானம் வீரசாமி செட்டியார்.

20) இக்கட்டுரை எந்தநூலில் இடம்பெற்றுள்ளது?

விநோதரச மஞ்சரி என்ற நூலில் முதலாம் பாகத்தில் இடம்பெற்றுள்ளது.

21) இக்கதையில் வரும் முக்கிய பாத்திரங்கள் எவை?

சந்நியாசி, பதிவிரதை, கசாப்புக்காரன்

22) ஒரு பதிவிரதையின் சரிதம் என்னும் கதை மூலம் உணர்த்தப்படும் படிப்பினைகள் மூன்றினை எழுதுக?

1. நான் என்ற அகந்தையை நீக்குதல்.
2. கற்புடைய பெண்ணின் உயர்வு.
3. செய்யும் தொழிலே தெய்வம்.

23) இக்கதையில் கையாளப்பட்டுள்ள வடசொற்கள் இரண்டினை தருக?

ஜீவாலை, குஷிபாதை

24) இக்கதையில் வரும் பதிவிரதையின் குணப்பண்புகள் மூன்று தருக?

1. எப்போதும் தனது கடமையைச் சரியாகச் செய்பவள்
2. கற்பு நெறியாள்
3. சகலதையும் அறியும் ஆற்றல் கொண்டவள்.

25) "இவனைப் பார்த்தால் பூதமே மனித ரூபம் எடுத்து வந்தது போல இருக்கிறதே" இதில் வந்துள்ள அணியை விளக்குக?

உவமை அணி

உவமானம் - பூதம்

உவமேயம் - கசாப்பு கடைக்காரனின் தோற்றம்

பொதுத்தன்மை - உடல் அமைப்பு

26) பின்வரும் வடசொற்களின் தமிழாக்கத்தைத் தருக?

1. பஷி - பட்சி
2. கிருகஸ்தன் - இல்லறத்தான்

27) "அம்மணி கொஞ்சம் அன்னம் தா" இது எவ்வகைத் தொடர் வகையைச் சார்ந்தது?

விளித்தொடர்

### முத்தொள்ளாயிரம்

28) "பெருஞ்செல்வர் இல்லத்து நல்கூர்ந்தார் போல" என்ற தொடரின் அணிச் சிறப்பைத் தருக.

உவமையணி கையாளப்பட்டுள்ளது. செல்வந்தரின் மனநிலைக்கு ஒப்பிடப்படுகிறது.

உவமானம் - நல்கூர்ந்தார் மனநிலை

உவமேயம் - பெண்ணின் மனநிலை

பொதுத்தன்மை - நாணம்

உருபு - போல

29) சோழ மன்னனின் யானையானது எங்கெங்கு கால்வைப்பதாக புலவர் கூறுகிறார்?

காஞ்சி, தஞ்சை, ஈழம் (கச்சி, தஞ்சை, ஈழம்)

30) "மருப்பூசியாக" என்ற சொல்லில் கையாளப்பட்டுள்ள அணி யாது?

உருவக அணி

31) பாண்டிய மன்னனின் யானை எதிரிகளுடைய மார்பில் எதனைப் பட்டயமாக எழுதியது?

திருத்தக்க செல்வங்கள் என்று கொள்ளப்படுகின்ற செல்வம் மிக்க நாடுகளை தமது அரசனான பாண்டிய மன்னனுக்கே சொந்தம் என பட்டயம் எழுதியது.

### நல்ல மரமும் நச்சு மரமும்

33) "நச்சுப்படாதவன் செல்வம் நடுவூருள் நச்சுமரம் பழுத்தற்று" என்பதன் கருத்தைக் குறிப்பிடுக?

வறியவர்களுக்கு அண்மையில் இருந்தும் அவர்களுக்கு ஒன்றும் கொடாது அவர்களால் விரும்பப்படாதவனுடைய செல்வமானது ஊர் நடுவே நச்சமரம் பழுத்தது போலாகும்.

34) இக்குறளில் காணப்படும் அணியை விளக்குக?

உவமை அணி

35) நச்சு மரத்தை எதற்கு ஒப்பிட்டுள்ளார்?

1. கற்பகதரு
2. மருந்தாக உதவிய மரத்தின் பட்டை
3. பயனுள்ள மரம்

36) இக்கட்டுரையில் பிரதான கருத்தை விளக்குவதற்கு ஆசிரியர் கையாண்ட உத்திகளை உதாரணத்துடன் குறிப்பிடுக?

1. பொய்கையில் இலங்கிய அழகிய மலர்கள் முகம் மலர்ந்து இருவரையும் அருகே அழைப்பதுபோல அமைந்ததாகக் கூறுகினறார்.
2. பொய்கையைக் கண்டவுடன் தாய் முகம் கண்ட சேய் போல மனங்களித்து நீரைப்பருகியதாகக் கூறுகிறது.
3. அடுக்கடுக்காக அலைகள் வந்து தாகத்தை தணித்ததாகக் கூறுகிறாா.
4. இளவரசனும், தோழனும் வேட்டையாடச் சென்று அலைந்து திரிந்து களைப்புற்றதால் மெய்சோர்ந்து நாவரண்டு நடப்பதற்கு வலியற்ற வரான போது தென்றற் காற்றும் நன்னீரப் பொய்கையும் மனத்தையும் மெய்யையும் குளிர்ச்செய்தன.

### நளவெண்பா

37) நளவெண்பா என்ற பாடல்பகுதியை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

அ. நளனை இனம்காண முடியாது தடுமாறிய தமயந்தியின் நிலையினை விளக்குக.

- இந்திரன், வருணன், அக்கினி, யமன் ஆகிய தேவர்கள் நளன் உருவில் சுயம்வர மண்டபத்திற்கு வந்திருந்தனர்.
- தன்னை வந்து சூழ்ந்து கொண்டுள்ள ஊழ்வினையின் வலிமையினால் தடுமாறினாள்.
- நளனை மனதில் இருத்தி அன்னப்பறவை கூறிய நளனுக்கே மணமாலையைச் சூட்ட அருள் செய்யும்படி வேண்டினாள்.
- வீமனுடைய அளவில்லாத குலத்தில் உதித்தவளாயும் கற்பு முதலியவற்றில் சிறந்த கன்னியாயும் இருப்பின் நளனை இனம்காண உதவுமாறு இறைவனை வேண்டினாள்.

ஆ) தமயந்தியின் சுயம்பரம் மாலையைப் பெற்ற நளன் தமயந்தியுடன் ஊர்வலமாகச் செல்லும் காட்சி புகழேந்திப்புலவரால் சித்தரிக்கப்படும் ஆற்றினை விளக்குக?

தமயந்தியை இளமையான பசுவாகவும் அதனுடன் இணைந்து செல்கின்ற காளையாக நளனையும் உவமித்துள்ளார்.

மலர்மாலையை அணிந்து வேற்படையைத் தாங்கி இருப்பவன் நளன் என்றும் வருணிக்கின்றார்.

தமயந்தி நளனை தொடர்ந்து பின்பற்றி வர சுயம்வர மாலையை அணிந்து தோற்றப் பொலிவுடன் நளன் ஊர்வலமாகச் சென்றான் எனக் கூறுகின்றார்.

இ) நளனை தமயந்தி கண்டறிந்த முறையினை விளக்கு.

- தமயந்தியின் நுண்ணறிவும் அவளது வேண்டுதலும் இவ்விடத்தில் பலித்துள்ளமையை அறிய முடிகிறது.
- தேவர்களுக்கு தனித்துவமான சில இயல்புகள் உள்ளன அவையாவன
  - கண்ணிமைக்காமை
  - கால்கள் நிலத்தில் பதியாமை
  - அவர்கள் சூடியுள்ள மலர்மாலை வாடாமை
- இத்தகைய இயல்புகள் மனிதருக்கு இல்லை எனவே உருவில் அங்கிருந்தோரில் நளன் ஒருவனிடமே கண்ணிமைத்தல், கால் நிலத்தில் பதிதல், சூடியிருந்த, மலர்மாலை வாடுதல் ஆகிய நன்மைகள் காணப் பட்டன. இவற்றை நன்குணர்ந்த தமயந்தி நளனை அடையாளம் கண்டு கொண்டு அவனுக்கே மாலை சூடினாள்.

ஈ) பூணுக்கு அழகளிக்கும் பொற்கொடி இக்கூற்றினை விளக்குக.

பெண்கள் தம்மை அழகுபடுத்த ஆபரணங்களை அணிவர். ஆனால் தமயந்தியைப் பொறுத்தவரையில் அவள் அணிந்திருந்தமையாலேயே அவளது ஆபரணங்கள் அழகு பெற்றனவாம். அழகுக்கு அழகளித்தவள் தமயந்தி எனவே தான் புலவர் தமயந்தி ஆபரணங்களை அணிந்தமையால் அந்த ஆபரணங்கள் அழகு பெற்றுத் திகழ்ந்தன என்று கூறினார் இதனையே மேற்போர்ந்த அடி விளக்குகின்றது.

உ) தமயந்தி சுயம்வர மண்டபத்தே ஊசலாடுவதற்குக் காரணம் என்ன?

சுயம்வர மண்டபத்திலே தோழியானவள் மன்னர்களை தமயந்திக்கு காட்டிச் செல்ல அவள் அவர்களைப் பார்த்தவண்ணம் செல்லுதல் தேவர்கள் நால்வர் நளனுருவினை எடுத்து அவனுக்கருகில் வீற்றிருத்தல்.

தன் மனத்தில் நளனையே நினைத்தவண்ணம் வந்திருந்தமை இதனால் யார் நளன் என்று தெரியாது ஊசலாடுதல்.

38) "செந்தாமரை முகம் போய் வெண்டாமரையாய் வெளுத்ததுவே" இவ்வடியில் அணிசிறப்பை விளக்குக?

சுயம்வர மண்டபத்துக்குள்ளே வந்திருந்த அரசர்கள் செந்தாமரை போல் வீற்றிருந்தனர். தமயந்தி நளனுக்கு மலர்மாலை சூட்டிய பின்பு, வெண்டாமரையாய் ஏமாற்றத்தினால் வெளிறிப் போய்விட்டன. இங்கு செந்தாமரை மகிழ்ச்சியான முகத்துக்கு உரியது. வெண்டாமரை சோபையிழந்து கவலை தோய்ந்த முகத்திற்குரியது. இதில் சொல் முரணும், பொருள் முரணும் காணப்படுவதால் முரண் அணிக்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

39) "காவலரை தன்சேடி காணக் காண்டருவர்..." என்ற பாடலிலுள்ள அணியினை குறிப்பிடுக? அதனை விளக்குக?

(உவமையணி)

உவமானம் :- ஊசலாடுதல்

உவமேயம் :- தமயந்தியினது உள்ளம்

பொதுத்தன்மை :- தடுமாறும் தன்மை

### தனிப்பாடல்

40)

அ) மோட்டெருமை என்ற பாடலைப் பாடியவர் யார்?

கம்பரால் பாடப்பட்டது.

ஆ) இப்பாடல் யாரைப் பற்றிப் புகழ்ந்து பாடப்பட்டுள்ளது?

கம்பரை ஆதரித்த சடையப்ப வள்ளலைப் புகழ்ந்து பாடப்பட்டுள்ளது.

இ) திருவெண்ணெய் நல்லூரின் சிறப்பு பாடலில் எவ்வாறு கூறப்பட்டுள்ளது?

எப்போதும் அடையாத பெரிய வாசலையுடையதும், யாசகனைப் பார்த்து பயப்படாதே என்று கூறும் இனிய வாழ்வுடையதுமான வளமான கருணை உடைய ஊர்.

ஈ) "காரென்று பேர் படைத்தாய்" என்ற பாடலைப் பாடியவர் யார்?

காளமேகப்புலவர்

உ) இப்பாடலில் கூறப்பட்ட விடயம் என்ன?

மோரில் நீர் கலந்திருப்பது கேலியாக, கிண்டலாக கூறப்பட்டுள்ளது.

ஊ) இப்பாடலில் பயன்படுத்தப்பட்டுள்ள அணி எது?

வஞ்சப்புகழ்ச்சி அணி

எ) "அழிவாய்ச் சத்தம் அடங்காதோ" என்ற பாடலைப் பாடியவர் யார்?

ஒப்பிலாமணிப்புலவர்






யாழ்ப்பாண ரயில் நிலைய நிர்மாணப்பணிகள் முடிவுறும் தறுவாயை எட்டியுள்ளன. தற்போது சமிக்ஞை விளக்குகள் ஒளிரவிடப்பட்டு சோதனை நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. (85,51)

# தொண்டர் சேவை

நல்லூர் திருவிழாக்காலத்தில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்.கிளையானது தொண்டர் சேவையையும், அம்புலன்ஸ் சேவையையும் நடாத்தவுள்ளதாக அதன் தலைவர் கு.பாலகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

எனவே இவ்வாறான சேவையை மேற்கொள்வதற்கு நல்லூர் ஆலய சூழலில் இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளைக்கென யாழ்.மாநகர சபை இடம் ஒன்றை ஒதுக்கீடு செய்து தரவேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

நல்லூர் உற்சவம் நாளை மறுதினம் முதல் தொடர்ந்து 25 நாட்கள் நடைபெறவுள்ள நிலையில் ஆலயத்திற்கு வருகின்ற அடியவர்களின் நன்மை கருதி வருடா வருடம் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளையானது தொண்டர் சேவையையும், அவசர முதலுதவி சேவையையும் வழங்குவதுடன் அம்புலன்ஸ் மூலம் நல்லூருக்கும் யாழ்.போதனா வைத்திய சாலைக்கும் இடையில் இலவச அம்புலன்ஸ் சேவையையும் வழங்கி வருகின்றமை தெரிந்ததே. (பா)

# கால்நடை சிகிச்சை முகாம்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் ஆனைவிழுந்தான் கிராமத்திலுள்ள கால்நடைகளுக்கு வறட்சியால் ஏற்பட்ட நோய்த் தாக்கத்துக்கு சிகிச்சையளிக்கும் முகமாக நடமாடும் கால்நடை சிகிச்சை முகாமை எதிர்வரும் வாரம் நடத்தவுள்ளதாக மாவட்ட கால்நடை வைத்திய அதிகாரி திணைக்களம் தெரிவித்துள்ளது.

தற்போது நிலவுகின்ற வறட்சியால் ஆனைவிழுந்தான் கிராமத்திலுள்ள கால்நடைகளுக்கும் குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால், கால்நடைகளின் வாய்களில் புண்கள் ஏற்பட்டுள்ளன.

இது தொடர்பில் மாவட்ட கமக்கார அமைப்பு தனது கவனத்துக்கு கொண்டுவந்தது. இந்த நிலையில், கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கவுள்ளதாகவும் அத்திணைக்களம் தெரிவித்தது.

# தருமபுரம் மத்திய கல்லூரியில் தொழில்நுட்ப பாடப்பிரிவு

## சந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு






(கிளிநொச்சி)

கிளிநொச்சி தருமபுரம் மத்திய கல்லூரியில் விரைவில் ஆறு கோடி ரூபா செலவில் தொழில் நுட்ப பாடப்பிரிவு ஆரம்பிக்கப்ப டவுள்ளது.

இதன் மூலம் இந்த பாடசாலை இந்த பிரதேசத்தில் ஒரு சிறந்த பாடசாலையாக மாற்றம் பெறுவதோடு கிளிநொச்சி மத்திய கல்லூரிக்கு அடுத்ததாக மாவட்டத்தில் இந்த பாடசாலையே 1ஏ சுப்பர் பாடசாலையாக தரம் உயர்கின்றது என ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி தருமபுரம் மத்திய கல்லூரியில் நேற்று முன்தினம் கொரிய அரசின் உதவியுடன் கொய்கா திட்டத்தின் கீழ் 450 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட வகுப்பறை கட்டடத் தொகுதியினை திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிளிநொச்சி மாவட்டத்தில் கிளிநொச்சி மத்திய கல்லூரி, கிளிநொச்சி இந்துக் கல்லூரி ஆகியவற்றுக்கு கிடைத்த தொழில்நுட்ப பாடப்பிரிவு தற்போது தருமபுரம் பாடசாலைக்கும விசேடமாக கிடைக்கவுள்ளது. கடந்த மாதம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஒரு நிகழ்வில் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன அவர்களிடமும், அமைச்சின் செயலாளர் அவர்களிடமும் நாம் இதனை வலியுறுத்தியிருந்தோம், அதன்படி இந்த பாடசாலையில் தொழிநுட்பப் பாடபிரிவு ஆரம்பிக்கப்படவுள்ளது.

இது இந்த பிரதேச ஏழை மாணவர்களுக்கு, கடந்த காலங்களில் பல்வேறு புறக் கணிப்புக்குள் உள்ளாக்கப்பட்ட இந்த பிரதேச பெற்றோர்களின் பிள்ளைகளுக்கு சிறந்த கல்வியை பெறும் வாய்ப்பாகவே அமையும். இதன் மூலம் கண்டாவளை பிரதேசத்தில் தர்மபுரம் மத்திய கல்லூரி ஒரு தலைசிறந்து பாடசாலையாக மாற்றம் பெறும்.

ஏற்றத்தாழ்வுகள் அற்ற கல்விச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு நாம் எல்லா நடவடிக்கைளையும் மேற்கொண்டு வருகின்றோம். அதற்கு அனைவரினதும் பூரண ஒத்துழைப்பு அவசியம். குறிப்பாக தற்போது அதிகாரத்தில் உள்ளவர்கள் அந்த மனநிலையில் இருந்து செயற்பட வேண்டும் அது மிகவும் முக்கியமானது. ஒவ்வொரு பெற்றோருக்கும் தங்கள பிள்ளைகளுக்கு பாரபட்சமற்ற கல்வி கிடைக்கிறதா என்பதனை தட்டிக்கேட்கும் உரிமை இருக்கிறது அதில் விழிப்பாக இருக்க வேண்டும் என்றார்.

தருமபுரம் மத்திய கல்லூரியின் அதிபர் பூலோகராசா தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன, பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வட மாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி, கொரிய தூதுவர் லூங் வூன் சங், அமைச்சின் மேலதிக செயலாளர் சித்திராநந்த, ஆயிரம் பாடசாலைகள் திட்டப்பணிப்பாளர் பியசேன, வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சத்தியசீலன் மற்றும் வலயக்கல்விப்பணிப்பாளர் முருகவேல் ஏனைய பாடசாலைகளின் அதிபர்கள் ஆசியர்கள் மாணவர்கள் பெற்றோர்கள் என பலர் கலந்துகொண்டனர்

# உயர்கல்வி கற்பதற்கு மாணவர்களுக்கு உதவி





(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தின் சமூக மேம்பாட்டுத் திட்டத்தின், கல்வி வளர்ச்சிக்கான உதவியின் கீழ் உயர்கல்வி கற்கும் வறுமைக்கோட்டிற்குட்பட்ட க.ஜோன் என்ற மாணவனுக்கு 30 ஆயிரம் ரூபா நிதி உதவி நேற்று முன் தினம் வழங்கப்பட்டது.

இதேபோல், மேற்படி திட்டத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை அராலி சரஸ்வதி மகா" வித்தியாலயத்தில் உயர்தரத்தில் பயிலும் வி.குணலட்சுமி என்ற மாணவிக்கு துவிச்சக்கர வண்டியொன்றும் வழங்கப்பட்டுள்ளது.

இந்து வாலிபர் சங்கத்தின் அங்கத்தவரும் சுழிபுரம் விக்டோறியாக் கல்லூரியின் ஆசிரியருமான வி.மதிதரன் துவிச்சக்கர வண்டியினைக் கையளித்தார்.

வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கம், அப்பிரதேசத்தினைச் சேர்ந்த மற்றும் யாழ்.மாவட்டத்தின் பிற இடங்களிலுள்ள வறுமைக்கோட்டிற்கு கீழுள்ள மாணவர்களுக்கு பல உதவிகளைச் செய்து வருகின்றது.

மேலும், கிளிநொச்சி மாவட்டத்திலும் வாழ்வாதார உதவிகளையும் இச்சங்கம் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது

# கத்தி முனையில் கொள்ளை



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், கோண்டாவில் கிழக்கு பகுதியிலுள்ள வீடொன்றில் கத்திமுனையில் 9 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பணம் மற்றும் நகைகள் கொள்ளையிடப்பட்டுள்ளன.

குறித்த வீட்டுக்குள் நேற்று அதிகாலை 1 மணிக்கு நுழைந்துள்ள கொள்ளையர்கள் வீட்டிலுள்ளவர்களை கத்தியைக் காட்டி அச்சுறுத்தியே கொள்ளையில் ஈடபட்டுள்ளனர் என கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி வீட்டிலிருந்த பெண், அதிகாலை மலசலகூடத்திற்கு செல்வதற்காக வீட்டிற்கு வெளியில் வந்திருந்த வேளை, அங்கு முகத்தைத் துணியினால் கட்டிய நிலையில் நின்றிருந்த இருவர் அந்தப் பெண்ணை கத்தி முனையில் பிடித்துக்கொண்டு வீட்டிற்குள் சென்றுள்ளனர்.

வீட்டிற்குள் உறங்கிக் கொண்டிருந்த பெண்ணின் கணவன் மற்றும் மகன் ஆகியோரை சத்தம் போட வேண்டாம் என வும் சத்தம் போட்டால் பெண்ணைக் கத்தியால் குத்துவோம் என்றும் மிரட்டியுள்ளனர்.

தொடர்ந்து, வீட்டின் அலுமாரியில் வைக்கப்பட்டிருந்த 15 பவுண் நகை (6 இலட்சத்து 30 ஆயிரம்) மற்றும் 3 இலட்சத்து 20 ஆயிரம் ரூபா பணம் ஆகியவற்றினைக் கொள்ளையடித்துக் கொண்டு வீட்டிற்கு வெளியில் நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றுள்ளனர்.

இதனையடுத்து, குறித்த வீட்டுக்காரர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்தனர். அந்த முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ..............................

முகவரி :- ..............................

பிறந்த ஆண்டு :- ..............................

கூப்பன் ஐந்தும், புகைப்படமும்

..............................

பெற்றோர் கையொப்பம்

# விமானத்தை சுட்டு வீழ்த்தியமை போர்க் குற்றத்துக்கு சமம்

## ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் கண்டனம்

கிழக்கு உக்ரைனில் மலேசிய விமானம சுட்டு வீழ்த்தப்பட்டமை போர்க் குற்றதுக்கு சமமானது என்று ஐ.நா. சபை தெரிவித்துள்ளது. இதுகுறித்து ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுத் தலைவர் நவிபிள்ளை வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

மலேசிய பயணிகள் விமானம் நடுவானில் சுட்டு வீழ்த்தப்பட்டமை கண்டனத்துக்குரியது. இதுகுறித்து முழுமையான, சுதந்திரமான விசாரணை நடாத்தப்பட வேண்டும். இந்தச் சம்பவத்தில் சர்வதேச விதிகள் மீறப்பட்டுள்ளன. விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டமை போர்க் குற்றத்துக்கு இணையானது. சம்பவத்துக்கு காரணமானவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் நீதியின் முன்பு நிறுத்தப்பட வேண்டும்.

டோன்ஸ்க், லூகான்ஸ்க் பகுதிகளில் உள்நாட்டுப் போர் தீவிரம் அடைந்துள்ளது. இதனால் உயிரிழப்பு அதிகரித்து வருகிறது. இருதரப்பிலும் அப்பாவி பொது மக்கள் அதிகம் பலியாகி வருகின்றனர்.

இதுவரை 1129 பேர் உயிரிழந்துள்ளனர். 3442 பேர் பலத்த காய மடைந்துள்ளனர். எனவே உள்நாட்டுப் போர் உடனடியாக தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கடந்த 17 ஆம் திகதி கிழக்கு உக்ரைன் பகுதியில் பறந்த மலேசிய விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது. இதில் 298 பேர் உயிரிழந்தனர்.

அந்த விமானத்தை கிளர்ச்சியாளர்கள் தான் சுட்டு வீழ்த்தினர் என்று உக்ரைன் அரசும் ஐரோப்பிய நாடுகளும் குற்றம் சாட்டியுள்ளன. இதனைக் கிளர்ச்சிப் படை மறுத்து வருகிறது என்றார்.

# மலேசிய விமான சேவை பெயரை மாற்றத் திட்டம்



தொடர்ந்து விமான விபத்துக்களில் சிக்கி உயிரிழப்புக்களை ஏற்படுத்திவரும் மலேசிய ஏர்லைன்ஸ் விமான நிறுவனம் தனது பெயரை மாற்ற முடிவு செய்துள்ளதுடன் முதலீட்டாளர்கள் மற்றும் பயணிகளிடம் இழந்துள்ள நம்பிக்கையை மீண்டும் பெற அந்த நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

கடந்த மார்ச் மாதத்தில் கோலாலம் பூரில் இருந்து சீனாவின் பீஜிங்கிற்கு பயணித்த மலேசிய ஏர் லைன்ஸ் விமானத்தின் எம்.எச் 370 விமானம் நடுவானில் மாயமானது.

இந்நிலையில் இம் மாதம் ஆம்ஸ்டர்டாம் நகரில் இருந்து கோலாலம்பூர் சென்ற மலேசியன் ஏர் லைன்ஸ் விமானம் எம்.எச் 17 இ உக்ரைன் வான் பகுதி யில் சுட்டு வீழ்த்தப்பட்டது.

இந்த சம்பவத்தில் 298 பேர் பரி தாபமாக உயிரிழந்தனர் இதையடுத்து மலேசியன் ஏர்லைன்ஸ் விமான சேவைக்கு உலகளவில் மதிப்பு குறைவு ஏற்பட்டுள்ளதாகவும் அந்த பெயரை கேட்டாலே பயணிகள் அலறியடித்து ஓடுகிற நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே மலேசியன் ஏர் லைன்ஸ் தமது பெயரை மாற்றுவதன் மூலம் மீண்டும் ஸ்திரத்தன்மையை பெற முடிவு செய்துள்ளது.

# பிரணாப் முகர்ஜியின் மகள் அரசியலில் இறங்க தீர்மானம்





இந்திய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியின் மகள் ஷர்மிஸ்தா முகர்ஜி அரசியலில் பிரவேசிக்க தீர்மானித்துள்ளதாக இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதன் விளைவாக காங்கிரஸ் கட்சியின் முதன்மை உறுப்பினராக பதிவு செய்துள்ளார் என "த இந்து" செய்தி நிறுவனம் கடந்த ஞாயிற்றுக்கிழமை தெரிவித்துள்ளது.

பிரணாப் முகர்ஜியின் மகளின் அரசியல் பிரவேசம் டில்லி காங்கிரஸ் கட்சிக்கு மிகப் பெரிய வலுவாக அமையும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஷர்மிஸ்தா முகர்ஜி அவரது தந்தை மற்றும் சகோதரர் அபிஜித் முகர்ஜி ஆகியோரின் அடிச்சுவட்டை பின்பற்றி அரசியல் வளையத்தில் நுழைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

"நான் அரசியலில் சேர முடிவு செய்ததால், காங்கிரஸ் அடிப்படை உறுப்பினராக சேர்ந்தேன். இதற்கு பிறகு எனக்கு மிகப்பெரிய பொறுப்புக்கள் உள்ளன, நான் எந்த சவால்களை எதிர்கொள்ளவேண்டும்? எவ்வாறான தீர்மானங்களை முடிவு செய்ய எனக்கு அதிகாரமிருக்கிறது என்பன பற்றி அறியவேண்டும்" என தெரிவித்துள்ளார்.

# சகோதரத்துவம் வளரட்டும் மோடியின் ரமழான் வாழ்த்து

ரமழான் திருநாளில் அமைதியும், ஒற்றுமையும், சகோதரத்துவமும் தழைத்தோங்கி வளரட்டும் என பிரதமர் நரேந்திர மோடி தனது ரமழான் வாழ்த்துக்களை நாட்டு மக்களுக்கு தெரிவித்துள்ளார்.

இன்று உலக இஸ்லாமியர்கள் அனைவரும் ரமழான் திருநாளை கொண்டாடி வருகின்றனர்.

இது தொடர்பாக பிரதமர் நரேந்திர மோடி வெளியிட்டுள்ள ரமழான் வாழ்த்துச் செய்தியில், "ரமழான் திருநாள் கொண்டாடும் வேளையில், நாட்டில் உள்ள அனைத்து மக்களும் அமைதி, ஒற்றுமை மற்றும் சகோதரத்துவத்துடன் வளர்ச்சி பெறவேண்டும்" என்று தெரிவித்துள்ளார்.

# இ தொய்பா தலைவர் சுபான் டில்லியில் கைது



லஷ்கர் இ தொய்பா தீவிரவாத இயக்கத்தின் முக்கிய தலைவரான அப்துல் சுபான் டில்லியில் கைது செய்யப்பட்டுள்ளார்.

முஸ்லிம் இளைஞர்களைத் தேடி கண்டுபிடித்து மூளைச் சலவை செய்து தீவிரவாத தாக்குதலுக்கு பயன்படுத்துவதில் கைதேர்ந்தவரான சுபான், இதற்கு முன்னர் குஜராத் மாநிலத்தில் பயங்கரமான ஆபத்தை விளைவிக்கக் கூடிய வெடி பொருட்கள் மற்றும் துப்பாக்கிகளை கடத்தி வந்த போது சி.பி.ஐ. பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கடந்த 2 ஆண்டுகளாக இந்தியாவின் ராஜஸ்தான் மற்றும் அரியானாவைச் சேர்ந்த ஒருவரின் கைபேசி எண்ணுடன் பாகிஸ்தானில் உள்ள லஷ்கர் தீவிரவாதிகள் அடிக்கடி தொடர்பு கொண்டு வந்ததை தீவிரமாக கண்காணித்து வந்த தேசிய புலனாய்வுப் படையினர் அந்த எண்ணுக்குச் சொந்தக்காரன் அரியானா மாநிலம், மேவாட் மாவட்டத்தை சேர்ந்த அப்துல் சுபான் (வயது 42) என்பதை உறுதி செய்தனர்.

பின்னர் இவரைப் பிடிப்பதற்காக நீண்ட காலமாக வலை விரித்து தேடி வந்த பொலிஸார், கடந்த வாரம் இவரை டில்லியில் கைது செய்ததாகவும், ராஜஸ்தான், அரியானா மற்றும் பீகார் மாவட்டத்தை சேர்ந்த முஸ்லிம் இளைஞர்களைத் தேடிக்கண்டுபிடித்து, மூளைச் சலவை செய்து, இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் தீவிரவாதத் தாக்குதல்களை நடாத்த இவர திட்டமிட்டு வந்தமை தெரியவந்துள்ளதாகவும் டில்லி பொலிஸார் தெரிவித்தனர்.

# ரஷ்ய பொருளாதார தடையை அதிகரிக்க ஜப்பான் தீர்மானம்



உக்ரைனின் கிழக்குப் பகுதியின் நிலைமை மோசமடைந்ததற்கும், கிரைமியாவை இணைத்துக் கொண்டதற்கும் காரணமானவர்களின் மீது தங்களது பொருளாதாரத் தடைகளை அதிகரிக்கவுள்ளதாக ஜப்பான் தெரிவித்துள்ளது.

பொருளாதார மேம்பாட்டிற்காக உகரைன், ஐரோப்பிய ஒன்றியத்துடன் இணைவது மறுக்கப்பட்ட போது ஏற்பட்ட நெருக்கடியை அடுத்து கிரைமியா ரஷ்யாவுடன் இணைந்தது. இதனால் அமெரிக்கா, ஜப்பான் உள்ளிட்ட உலக நாடுகள் பலவும் இதனை எதிர்த்து ரஷ்யா மீதான பொருளாதாரத் தடைகளை விதித்தன. இருந்தாலும் அங்கு தாக்குதல்கள இன்னும் தொடர்ந்த வண்ணமேயுள்ளன.

இந்த நிலையில் ஜப்பான் உக்ரைனின் கிழக்குப் பகுதியின் நிலைமை மோசமடைந்ததற்கும், கிரைமியாவை இணைத்துக் கொண்டதற்கும் காரணமானவர்களின் மீது தங்களது பொருளாதாரத் தடைகளை அதிகரிப்பதாக ஜப்பான் வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக் காட்டியுள்ளது.

சொத்துக்களை முடக்குவதும், நெருக்கடியினால் சீரகுலைந்துள்ள கிரைமியாவிலிருந்து இறக்குமதியைத் தடை செய்வதுமான இந்த நடவடிக்கை, 23 ரஷ்ய நாட்டவரின் விசாக்களை ஜப்பான் மறுத்தபோது இதற்கான விளைவை எதிர்கொள்ள நேரிடும் என்று ரஷ்யா எச்சரித்த இரண்டு மாதங்களுக்குப் பின்னர் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும் ரஷ்யாவின் வளர்ச்சித் திட்டங்களுக்கு புனரமைப்பு மற்றும் அபிவிருத்தித் திட்டங்களுக்கான ஐரோப்பிய வங்கி அளிக்கும் நிதி உதவிகளை முடக்கி வைப்பதில் ஜப்பானும் ஐரோப்பிய ஒன்றியத்துடன் ஒருங்கிணைந்து செயற்படும் என்று அந்நாட்டின் அமைச்சரவை தலைமை செயலாளரான யோஷிஹைட் சுகா தெரிவித்துளளார்.

# அணு ஆயுத தாக்குதல் நடாத்துவோம் அமெரிக்காவுக்கு வடகொரியா மிரட்டல்

அமெரிக்க அதிபர் மாளிகை மீதும், அந்நாட்டின் இராணுவத் தலைமையகமான பென்டகன் மீதும் அணு ஆயுதத் தாக்குதல் நடாத்துவோம் என்று வடகொரிய இராணுவத்தின் உயர் அதிகாரி ஒருவர் எச்சரித்துள்ளார்.

வடகொரிய தலைநகர் பியோங் யாங்கில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இராணுவ அணிவகுப்பு நிகழ்ச்சியில் பங்கேற்ற அந்நாட்டு இராணுவ துணைத்தளபதி "ஹவாங் பியோங் பேசியதாவது, சமீப காலமாக தென்கொரியாவும், அமெரிக்காவும் இணைந்து மேற்கொள்ளும் போர்ப் பயிற்சி நடவடிக்கைகள் இப்பகுதியில் பதற்றமான சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளன. அணு ஆயுதத் தாக்குதலுக்கு பயன்படுத்தும் போர் விமானங்களை அமெரிக்கா பயிற்சியில் ஈடுபடுத்தி வருகிறது.

# கிளிநொச்சி அறிவியல் நகரில் புதிய புகையிரத நிலையம்

## நேற்று முன்தினம் அடிக்கல் நாட்டுவிழா



கிளிநொச்சி அறிவியல் நகரில் புதிதாக புகையிரத நிலையம் ஒன்றினை நிர்மாணிக்கும் பணி நேற்று முன்தினம் ஆரம்பமானது. நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித்தலைவருமான மு.சந்திர குமார் அடிக்கல்லினை நாட்டி இப்பணியை ஆரம்பித்துவைத்தார்.

சுமார் 60 மில்லியன் ரூபா செலவில் அமையப்பெறவுள்ள இப்புகையிரத நிலையமானது யாழ். பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சி வளாகம் மற்றும் ஆடைத தொழிற்சாலை உட்பட ஏனைய தொழில் மையங்கள் மற்றும் நெருக்கமான மக்கள் குடியிருப்புக்கள் என்பன அமையப்பெற்றுள்ள பகுதியில் நிர்மாணிக்கப் படவுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் அறிவியல் நகர்ப்பகுதி எதிர் காலத்தில் கல்வி, பொருளாதார, வர்த்தக முதலீடுகளின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாக அமையப்பெறும் என எதிர் பார்க்கப்படுகின்ற நிலையில் இப் புகையிரதநிலையமும் அங்கு அமையப்பெறுகின்றமை முக்கியமானதொரு விடயமாகும்.

காலை 9.00 மணியளவில் நடைபெற்ற இந்நிகழ்வில் வடக்கு மாகாணசபை உறுப்பினர் வை.தவநாதன், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் றூபவதி கேதீஸ்வரன், கரைச்சி பிரதேச செயலர் நாகேஸ்வரன் மற்றும் யாழ். பல்கலைக்கழக பிரதிப்பதிவாளர் திருமதி அனுசா சிவனேஸ்வரன், விவசாய பீட பீடாதிபதி திருமதி சிவச்சந்திரன், பொறியியல்பீட பீடாதிபதி வைத்தியகலாநிதி அ.அற்புதராசா, பல் கலைக்கழக பொறியியலாளர் அ.அரவிந்தன் ஆகியோரும் புகையிர திணைக்களத்தின் பிரதிநிதிகளும், தொழில்மையங்களின் பிரதிநிதிகளும் கிராமமட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகளும் மற்றும் மக்களும் கலந்துகொண்டனர்.

# கலை மன்றம் அங்குரார்ப்பணம்



முகமாலை கிராமத்தில் நேற்று முன்தினம் இளந்தென்றல் கலை மன்றம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. காலை 11.00 மணிக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் செ.நாதன் தலைமையில் ஆரம்பிக்கப்பட்ட நிகழ்வில் .மங்கள விளக்கினை பிரதேச செயலகத்தின் கணக்காளர், பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர், பிரதேச செயலக விளையாட்டுத்துறை உத்தியோகத்தர், ப.நோ கூ.சங்கத்தின் கிளைக்குழு தலைவர் ஆகியோர் ஏற்றியதைத் தொடர்ந்து.

இளந்தென்றல் கலைமன்றத்தின் பெயர்ப் பலகையினை பிரதேச செயலக கணக்காளர் திரை நீக்கம் செய்து வைத்தார். கருத்துரைகளை கிராம அலுவலர், கலாசார உத்தியோகத்தர். கணக்காளர் ஆகியோர் நிகழ்த்தினர்.தொடர்ந்து கலைமன்றத்துக்கு கடிதத்தலைப்பும், ரபர்முத்திரையும்,வாசிப்பு பழக்கத்தை மேம்படுத்த 50வரையான நூல்களும் வழங்கப்பட்டதுடன் கலையினை வளர்த்துககொள்வதற்காக சுருதி வாத்தியக்கருவி ஒன்றும் வழங்கப்பட்டுள்ளது.

இக்கலைமன்றத்தில் பலதரப்பட்ட கலைஞர்கள் காணப்படுவதுடன் இவர்களின் கலை வெளிப்பாட்டுக்கு இன்நிகழ்வு உந்துசக்தியாக அமையும் என்று கலை மன்றத்தின் கலைஞர்கள் தெரிவித்தனர். (37)

# அவசரகால அழைப்பு எண்ணை துஷ்பிரயோகம் செய்தல் ஆகாது

## பொலிஸ் திணைக்களம் எச்சரிக்கை

119 என்ற அவசர அழைப்பு இலக்கம் மற்றும் பொலிஸ் நிலையங்களுக்கு போலியாக தொலைபேசி அழைப்பினை ஏற்படுத்தும் நபர்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுப்பதாக பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

அவ்வாறான அழைப்புக்களை ஏற்படுத்தி, பொலிஸாரை ஏமாற்றுவதற்கு சிலர் முயற்சிப்பதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹன கூறினார்.

தமது பெயரை பயன்படுத்தி, மிரிஹான பொலிஸ் நிலையத்திற்கு தொடர்பினை ஏற்படுத்தி, பொலிஸாரினால் கைப்பற்றப்பட்ட முச்சக்கர வண்டியொன்றை விடுவிப்பதற்கு முயற்சித்த ஒருவர் இவ்வாறு கைதுசெய்யப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

எதிர்வரும் காலங்களில் இந்த விடயம் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்படும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறினார்.

# குடிநீர் விநியோகம் விசுவமடுவில் ஏற்பாடு

முல்லைத்தீவு- புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் விசுவமடு விவசாயிகள் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத் தினூடாக முல்லைத்தீவு விசுவமடுப் பகுதியில் 10 நீர்த் தாங்கிகள் மூலம் கடந்த வாரம் முதல் குடிநீர் விநியோகிக்கப் பட்டு வருவதாக விவசாயிகள் பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் பொதுமுகாமையாளர் நேற்று தெரிவித்தார்.

தற்போது நிலவும் வறட்சி காரணமாக விசுவமடு பகுதியினைச் சேர்ந்த றெட்பானா, நாச்சிக்குடா உள்ளிட்ட சில கிராமங்களில் குடிநீருக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது.

இந்நிலையில், மேற்படி பகுதிக்கு குடிநீர் விநியோகிக்கும் நோக்கில் தலா 1,000 லீற்றர் கொள்ளளவுள்ள 10 நீர்த்தாங்கிகள் அந்தப் பிரதேசங்களில் வைக்கப் பட்டு, குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருவதாக முகாமையாளர் மேலும் தெரிவித்தார்.

### பாப்பாண்டவரின்...

வுள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டிருந்தது.

வத்திக்கான் வெளியிட்டுள்ள அறிக்கையில், பாப்பாண்டவர் இலங்கையில் 12ஆம் திகதி முதல் 15ஆம் திகதி வரை விஜயத்தில் ஈடுபடுவார் எனவும் அதன் பின்னர் பிலிப்பைன்ஸ் நோக்கிப் பயணிப்பார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### இறுதி...

இலங்கை அரசாங்கம் நிராகரித்திருந்தாலும், அதற்கு தக, வல்களை அளிக்க வேண்டும்.

படையினருக்கு எதிரான குற்றச்சாட்டுகள் சரியா, தவறா என்று எனக்குத் தெரியாது. என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

### பருத்தித்துறை...

மீனவர்களை கைது செய்த கடற்படையினர் அவர்களது படகுகளையும் காங்கேசன்துறைக்கு கொண்டு வந்து விசாரணைகளின்பின்னர் யாழ். மாவட்ட கடற்றொழில்நீரியல்வள திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

இதனையடுத்து நேற்று இரவு பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர்படுத்தியவேளை பதில் நீதவான் பொன்னம்பலம் குமாரசுவாமி இவர்களை எதிர் வரும் 12ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (25)

### முன்கூட்டிய...

பயணம் என்ற தலைப்பில் இந்த நிகழ்ச்சி இடம்பெற்றது. தாம் இலங்கைக்கு விஜயம் செய்த போது சந்தித்த சாட்சிகளின் தகவல்கள் அடிப் படையிலேயே தமது அறிக்கை தயாரிக்கப்பட்ட தாக நவநீதம்பிள்ளை இதன்போது குறிப்பிட்டார்.

### யாழ்...

ளர்கள் அழைக்கப்பட்டிருந்தனர்

இதன்படி ஓமந்தை பொலிஸ் நிலையம் சென்ற ஊடகவியலா ளர்களை பொலிஸார் 3 மணி நேரம் விசாரணைக்குட்படுத்தினர். இதன்பின்னர் எதிர்வரும் முதலாம் திகதி அவர்களை வவுனியா நீதிமன்றில முன்னிலையாகுமாறு தெரிவித்து விடுவித்துள்ளனர்.

இதேவேளை இந்த விசாரணை தொடர்பாக பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோகண. தெரிவிக்கையில், யாழ் ஊடகவியலாளர்களுக்கு ஓமந்தை சோதனைச்சாவடியில் நடைபெற்ற சம்பவம் தொடர்பாக முழு விபரங்களையும் உதவி பொலிஸ் அதிகாரி ஒருவர் விபரமாகக் கேட்டறிந்திருப்பதாகக் கூறினார். இந்த ஊடக வியலாளர்கள் விசாரணை செய்யப்படவில்லை. சாட்சிகளிடம் இருந்து விபரங்களைப் பெறுகின்ற வகையில் சம்பவம் குறித்து கேட்டறியப்பட்டிருக்கின்றது என்றார்.

### உள்நாட்டு...

மற்போனதாக அல்லது கடத்தப்பட்டதாக அல்லது கொல்லப்பட்டதாக கூறப்பட்ட பலர், பின்னர் பிற இடங்களில் வசிப்பது கண்டறியப்பட்டுள்ளது.

உதாரணத்துக்கு 2009ஆம் ஆண்டில் படையினரால் கடத்தப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டு கொல்லப்பட்டதாகக் கூறப்பட்ட, தயாபரராஜா என்பவர், கடந்த மே மாதம் தனுஸ்கோடியில் கைது செய்யப்பட்டுள்ளார்.

போரின் போது சர்வதேச மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றுள்ளதா என விசாரிக்கவுள்ள காணாமற் போனோர் தொடர்பாக விசாரிப்பதற்கான ஆணைக்குழுவின் விசாரணை செயற்பாடுகளில் சர்வதேச நிபுணர்கள் குழுவினர் ஒருபோதும் பங்கெடுக்கமாட்டார்கள். எமது விசாரணை ஆணைக்குழுவுக்கு தேவைப்படும்போது மூன்று சர்வதேச நிபுணர்களும் ஆலோசனை வழங்குவார்கள். அதுமட்டுமன்றி விசாரணை அம்ர்வுகளை பார்வையிடுவதற்கு அவர்களை நான் அழைக்கவுள்ளேன். மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரிப்பதற்கு எமக்கு ஆணை வழங்கப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

### வலி. வடக்கு...

உறுப்பினர்களும் குற்றஞ்சாட்டிவந்துள்ளனர்.

இக்குழப்பங்களுக்கு இடையே இம்மாதம் 28 ஆம் திகதி நடைபெற்ற சபையின் மாதாந்த கூட்டத்தில் தவிசாளரிடம் உறுப்பினர்கள் கேள்விகளைக் கேட்டுள்ளனர். தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகளின் ஆவணங்களை பார்வைக்கு சமர்ப்பிக்குமாறு உறுப்பினர்கள் கோரிக்கைவிடுத்தபோது, தவிசாளர் சோ.சுகிர்தன் ஆவணங்களை சபையில் தற்போது சமர்ப்பிக்க முடியாது என்றும் அடுத்த கூட்டத்தில் சமர்ப்பிப்பதாகவும் கூறியுள்ளார். இதனால் சபையில் அதிர்ப்தியான உறுப்பினர்கள் கூச்சல் குழப்பங்களை செய்துள்ளனர்.

அதைச்சமாளிப்பதற்காக சாரதிகளுக்கான நியமனம் தொடர்பான ஆவணங்களை சபைக்கு தவிசாளர் சமர்ப்பித்துள்ளார். அதில் தவிசாளர் சுகிர்தனின் தனிப்பட்ட உதவியாளரும் தனிப்பட்ட சாரதியுமாகவும் இருந்தவருக்கு சாரதி நியமனத்தை தவிசாளர் சுகிர்தன் வழங்கியிருப்பது தெரியவந்துள்ளது.

ஆனால் சுகிர்தனின் சாரதியாக இருப்பவருக்கு சாரதி நியமனம் வழங்கப்பட்டதில் முறைகேடு நடந்திருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்பதைக் கண்டுபிடித்த சபை உறுப்பினர்கள் தவிசாளரை நோக்கி கேள்விகளைத் தொடுத்தபோது சபையை அடுத்த கூட்டம்வரை ஒத்திவைப்பதாகக் கூறி கூட்டத்தை முடித்துள்ளார்.

ஏற்கனவே சுடலைக்காவலாளி நியமனத்திற்கு தவிசாளர் அவரது உறவினர் முறையான ஒருவருக்கு நியமனம் வழங்கி பணியில் அமர்த்தியிருப்பதாக ஆளும்கட்சி உறுப்பினர்களாலேயே விசனம் தெரிவிக்கப்பட்டுவருவது குறிப்பிடத்தக்கது.

### பொதுபலசேனா...

மோதல் முடிவுக்கு வந்த பின்னர், வடக்கில் தமிழர்களின் பிரதேசத்தில் படையினர் தொடர்ந்தும் பௌத்த வழிபாட்டு இடங்களை அமைத்து வருகின்றனர்.

இந்த இடங்கள் இந்துக்களின் வாழ்விடங்கள் அமைந்துள்ள பகுதியாகும்.

கிறிஸ்தவ, முஸ்லிம்கள் வாழும் பகுதிகளிலும் கூட இவ்வாறு பௌத்த வழிபாட்டு இடங்கள் அமைக்கப்படுகின்றன.

முன்னர் விடுதலைப் புலிகள் வசமிருந்த பகுதிகளில் அரச ஆதரவுடன் சிங்களக் குடியேற்றங்கள் இடம்பெறுவதாக தமிழ் அமைப்புகள் குற்றம்சாட்டி வந்தன.

வடக்கிலுள்ள, யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவடங்களில், கூட பௌத்த வழிபாட்டுத் தலங்கள் அதிகரித்துள்ளன.

மத சிறுபான்மையினர் மீதான, பௌத்த தேசியவாத அமைப்புகளின் வன்முறைகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு மனித உரிமை அமைப்புகள் விடுத்த கோரிக்கைகளை அரசாங்க அதிகாரிகள் கண்டுகொள்ளவில்லை.

முஸ்லிம்கள், கிறிஸ்தவர்களுக்கு எதிரான தாக்குதல்களில் ஈடுபட்ட பௌத்த பிக்குகளைக் கைது செய்து சட்ட நடவடிக்கை எடுக்க இலங்கை அரசாங்கம் தவறியுள்ளது.

பௌத்த பிக்குகள் அரசாங்கத்தினால் பாதுகாக்கப்படுகின்றனர். என்றும் இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

மேலும், இந்து, கிறிஸ்தவ, முஸ்லிம் மத வழிபாட்டுத்தலங்கள் மீதான தாக்குதல்கள் தொடர்பாகவும் இந்த அறிக்கையில் விரிவாக கூறப்பட்டுள்ளதுடன், அவற்றுக்கு எதிராக அரசாங்கம் நடவடிக்கை எடுக்கத் தவறியுள்ளதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது

# ஐ.நா. விசாரணைக்குழு முன் சாட்சியம் ஏகாதிபத்தியவாதிகள் சதிக்கு துணை

## விக்கியும் விலக்கல்ல என்கிறார் வாசு



ஐ.நா. சர்வதேச விசாரணைக் குழு முன் சாட்சியமளிப்பது இலங்கைக்கு எதிரான ஏகாதியபத்திவாதிகளின் சதித் திட்டத்துக்கு துணைபோகும் செயலாகும் என்று அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார். இது தொடர்பாக, அவர் மேலும் தெரிவிக்கையில்

இலங்கை மீது யுத்தக் குற்றச்சாட்டுக்களை சுமத்தி சர்வதேச ரீதியில் எமது நாட்டை தனிமைப்படுத்தி நெருக்கடியில் தள்ளிவிடுவதை இலக்காக வைத்தே ஐ.நா. சர்வதேச விசாரணைக் குழு நியமிக்கப்பட்டது. இது இலங்கைக்கு எதிரான சதித்திட்டம். எனவே, அரசாங்கம் அதனை நிராகரித்து விட்டது. எனவே, இவ்வாறானதொரு குழுவிற்கு இலங்கையர்கள் எவரும் சாட்சியம் வழங்கக் கூடாது.

அதற்கு வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் விதிவிலக்கானவர் அல்ல. எவரும் இக் குழுவிற்கு சாட்சியம் வழங்கக் கூடாது. அவ்வாறு சாட்சியம் வழங்குவோர் இலங்கைக்கு எதிரான ஏகாதிபத்தியவாதிகளின் சதித் திட்டத்திற்கு துணைபோகின்றவர்கள் என்றே கருதப்படுவார்கள். அப்பட்டியலிலேயே அவர்கள் இணைத்துக் கொள்ளப்படுவார்கள். இதனைக் கடுமையாக எதிர்க்கின்றேன்.

ஜனாதிபதியால் உள்ளூரில் விசாரணைகளுக்காக நியமிக்கப்பட்ட மக்ஸ்வெல் பரணகம தலைமையிலான விசாரணைக் குழுவிடம் சொல்ஹெய்ம் அல்ல எவரும் சாட்சியங்களை வழங்கலாம் இதனை எதிர்க்கவில்லை. ஏனென்றால் இக்குழு உண்மைகளைக் கண்டறிவதற்காக நியமிக்கப்பட்ட நியாயமான விசாரணைகளை நடத்தும் உள்ளூர்க் குழுவாகும். இதற்கு ஆலோசனைகளைப் பெறுவதற்கு வெளிநாட்டு நிபுணர்கள் நியமிக்கப்பட்டமையில் எவ்விதமான தப்பும் இல்லை. இதன் மூலம் உள்ளூர் விசாரணைக் குழுவிற்கு சர்வதேச ரீதியான அங்கீகாரம் மேலும் வலுப்பெறும். இந்நிலை உருவாகும் போது எம்மை நெருக்கடியில் தள்ளிவிடும் நோக்கில் நியமிக்கப்பட்டுள்ள சர்வதேச விசாரணைக் குழுவின் பலம் இழக்கப்படும் நிலைமை உருவாகும் என்றார்.

# அனைத்து தொண்டு நிறுவனங்களையும் ஒரே விதமாக நோக்கக்கூடாது

## லங்கா சமசமாஜக் கட்சி தெரிவிப்பு

(கொழும்பு)

அனைத்து தன்னார்வ தொண்டு நிறுவனங்களையும் அரசாங்கம் ஒரே விதமாக நோக்கக் கூடாது என லங்கா சமசமாஜக் கட்சி தெரிவித்துள்ளது.

சில தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் நடவடிக்கைகள் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல என்ற போதிலும், அனைத்து தன்னார்வத் தொண்டு நிறுவனங்களையும் ஒரே விதமாக நோக்குவது பொருத்தமானதாக அமையாது என அந்தக் கட்சி தெரிவித்துள்ளது.

வறுமை ஒழிப்பு உள்ளிட்ட பல்வேறு நலத்திட்டங்கள் என்ற போர்வையில் சில தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் நாட்டின் உள்விவகாரங்களில் தலையீடு செய்து வருவதாகத் தெரிவித்துள்ளது. எனினும், இந்த அளவு கோலைக் கொண்டு அனைத்து தன்னார்வத் தொண்டு நிறுவனங்களையும் அளவீடு செய்ய முடியாது எனச் சுட்டிக் காட்டியுள்ளது.

சட்டவிரோதமாக செயற்படும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களைத் தடை செய்வதில் தவறில்லை எனவும், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் பக்கச்சார்பற்ற அணுகுமுறைகள் பின்பற்ற வேண்டியது அவசியமானது எனவும் தெரிவித்துள்ளது.

# ஊவா தேர்தலில் தனித்துப் போட்டி

## விமல் அறிவிப்பு

ஊவா மாகாண சபைத் தேர்தலில் தனித்துப் போட்டியிடுவதற்கு தேசிய சுதந்திர முன்னணி தீர்மானித்துள்ளது.

நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் உரையாற்றிய முன்னணியின் தலைவரும், அமைச்சருமான விமல் வீரவன்ச இதனைத் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய பதுளை மற்றும் மொனராகலை மாவட்டங்களில் தேசிய சுதந்திர முன்னணி தனியாக வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்யவுள்ளது.

இதேவேளை, ஊவா மாகாண சபைக்கான வேட்புமனுக்களை ஏற்கும் நடவடிக்கை இன்று ஆரம்பமாகவுள்ளது.

# 157 ஆஸி. புகலிடதாரிகளும் நட்டஈடு கோரத்தீர்மானம்

## சட்டத்தரணிகள் தெரிவிப்பு



அவுஸ்ரேலியாவில் புகலிடம் கோரிச் சென்ற நிலையில், சுங்கத் திணைக்களத்தின் கப்பலொன்றில் பல வாரங்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்த 157 புகலிடக் கோரிக்கையாளர்கள் தாம் நடத்தப்பட்ட விதத்துக்காக நட்டஈடு கோருவர் என மேற்படி புகலிடக் கோரிக்கையாளர்களின் சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளனர்.

50 சிறார்கள் உட்பட 157 பேர் கடந்த மாதம் இந்தியாவின் புதுச்சேரியிலிருந்து படகில் சென்ற போது அவுஸ்ரேலிய படையினரால் இடைமறிக்கப்பட்டு அந்நாட்டு சுங்கக் கப்பலொன்றில் பல வாரங்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். கடந்த சனிக்கிழமையே அவர்கள் கொகோஸ் தீவுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

மேற்படி புகலிடக் கோரிக்கையாளர்கள் நடத்தப்பட்ட விதம் குறித்து மெல்பேர்ன் மேல் நீதிமன்றத்தில் 85 பேரின் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

புகலிடக் கோரிக்கையாளர்களின் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவில் நட்டஈட்டுக்கான கோரிக்கையையும் உள்ளடக்குவதற்கு நீதிமன்றம் அனுமதியளித்துள்ளதாக புகலிடக் கோரிக்கையாளர்களின் சார்பில் ஆஜராகும் சட்டத்தரணிகள் குழுவின் பேச்சாளர் ஒருவர் கூறியுள்ளார்.

மேற்படி புகலிடக் கோரிக்கையாளர்களை சுமார் ஒரு மாத காலம் கப்பலில் தடுத்துவைத்தமை சட்ட ரீதியா[illegible] என்பதையும் அது சட்டரீதி[illegible]னது அல்லவெனில், நட்ட[illegible] வழங்கப்பட வேண்டுமா என்ப[illegible]தையும் நீதிமன்றம் ஆராயும் என அப்பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

# அமெரிக்கா செல்ல முயன்ற இலங்கையர் உள்ளிட்ட குழு கைது

(கொழும்பு)

இலங்கையர்கள் உட்பட்ட சட்டவிரோத குடியேறிகள் குழு ஒன்று மெக்சிக்கோவில் இருந்து டெக்ஸாஸ் செல்லும் வழியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வார இறுதியில் இந்தக குழு அமெரிக்காவின் மாநிலமான டெக்ஸாஸிற்குள் பிரவேசிக்கும் நோக்கில் சென்று கொண்டிருந்தபோது கடந்த 26 ஆம் திகதி கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரியோ கிரான்டே ஊடாகவே இந்தக்குழு டெக்ஸாஸ்"க்குள் பிரவேசிக்க முற்பட்டுள்ளது.

இலங்கை, பங்களாதேஷ் மற்றும் நேபாளத்தைச் சேர்ந்தவர்கள் இந்தக்குழுவில் அடங்கியுள்ளனர். இவர்கள் அனைவருமே ஆண்களாவர்.

மெக்ஸிக்கோவின் ஊடாக டெக்ஸாஸ்"க்கு சட்டவி[illegible]மாக பிரவேசிப்போரில் [illegible]சிய நாட்டவரே அதிகமாக [illegible]தாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

# காஸா மீது இஸ்ரேல் தாக்குதல் கண்டித்து கிழக்கில் ஆர்ப்பாட்டம்

(மட்டக்களப்பு)

காசா மீதான இஸ்ரேலியத் தாக்குதல்களை கண்டித்து கிழக்கு மாகாண முஸ்லிம்கள் நேற்றைய தினம் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் காத்தான்குடி, அம்பாறை மாவட்டத்தில் பாலமுனை மற்றும் சின்னப்பாலமுனை ஆகிய இடங்களில் நடைபெற்ற இந்தக் கண்டன ஆர்ப்பாட்டங்களில் பெரும் எண்ணிக்கையிலான முஸ்லிம்கள் கலந்து கொண்டனர்.

பள்ளிவாசல்களிலும் பொது இடங்களிலும் நேற்றுக் காலை புனித ரமழான் தொழுகைக்காக ஒன்று கூடிய முஸ்லிம்கள் தொழுகையின் பின்னர் வீதிகளில் இறங்கி ஆர்ப்பாட்டங்களில். ஈடுபட்டனர்.

ஆர்பாட்டங்களில் கலந்து கொண்டவர்கள் குறிப்பாக பலஸ்தீன் காஸா மீதான தாக்குதல்களில் கொல்லப்பட்ட குழந்தைகளின் படங்கள் உட்பட அது தொடர்பான புகைப்படங்களையும் தமது கைகளில் ஏந்தியவாறு காணப்பட்டார்கள்.

அமெரிக்கா மற்றும் இஸ்ரேலுக்கு எதிராகவும், பாலஸ்தீனத்துக்கு ஆதரவாகவும் வாசக அட்டைகளை ஏந்தியவாறு கோஷங்களையும் எழுப்பிய முஸ்லிம்கள் யுத்தத்தை நிறுத்தி முஸ்லிம்களுக்கு உதவ உலக நாடுகள் முன் வர வேண்டும் என்றும் வலியுறுத்தி கேட்டுக் கொண்டனர்.

ஆர்ப்பாட்டங்களின் முடிவில் அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் ஆகிய நாடுகளின் தேசிய கொடிகளும் ஆர்பாட்டக்காரர்களினால் தீ வைத்து எரிக்கப்பட்டன

# வாய் மூலமான மொழிப்பரீட்சை

கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையில் இரண்டாம் மொழிகளில் சித்தி பெற்ற அரசாங்க அதிகாரிகளுக்கு, அரச கரும மொழிகள் திணைக்களம் நடத்தும் வாய்மூல சோதனைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

அந்த வகையில், குறித்த அலுவலர்கள் வாய்மூலப் பரீட்சையில் சித்தியடையும் பொருட்டு அதற்கான விண்ணப்பங்களை எதிர்வரும் ஆகஸ்ட் 25ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு அரச கரும மொழிகள் திணைக்களம் கோரியுள்ளது.

## வீதி விபத்தில் குடும்பஸ்தர் காயம்

(யாழ்ப்பாணம்)

வீதி விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் காயமடைந்துள்ளார்.

யாழ்.நகரில் மனோகராச் சந்திக்கு அருகாமையில் நேற்று மாலை இடம்பெற்ற வீதி விபத்து ஒன்றில் சு.லக்ஸ்மன் (வயது-56) என்பவர் காயமடைந்துள்ளார். இவர் சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார். (25)

# வீடு திரும்பினார் அநுர கைதான சாரதிக்கு பிணை

விபத்தொன்றில் காயமடைந்து கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வந்த மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் எம்.பி.யுமான அநுர குமார திஸாநாயக்க, சிகிச்சையை முடித்துக் கொண்டு நேற்று மாலை வீட்டுக்கு திரும்பிவிட்டார்.

இதேவேளை, விபத்துக்கு காரணமானவர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட அவரது சாரதியான சுஜீவ பிரிய சாந்தவை இரத்தினபுரி நீதிமன்ற நீதவான் கே.டி.எஸ் சமன் குமார 50 ஆயிரம் ரூபாய் பிணையில் விடுவித்தார்.

அத்துடன் இந்த விசாரணையை ஆகஸ்ட் 4 ஆம் திகதிக்கு நீதவான் ஒத்திவைத்தார்.

வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் சாரதி, பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார்.

# 2015 முத்திரை வெளியீடு முன்மொழிவுகள் கோரல்

2015ஆம் ஆண்டுக்கான ஞாபகார்த்த முத்திரைகளை வெளியிடுவதற்கான முன்மொழிவுகள் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளை தபால் திணைக்களம் முன்னெடுத்துள்ளது.

அதற்கமைய தேசிய மற்றும் சர்வதேச ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த சம்பவங்கள், ஆண்டு நிறைவு, மதிப்பிற்குரிய நபர்கள், இயற்கை காட்சிகள்-விளையாட்டு, தேசிய அபிமானத்தை வெளிக்கொண்டுவரும் விடயங்கள் மற்றும் கலாசாரம் ஆகிய தொனிப்பொருள்களில் முன்மொழிவுகள் கோரப்பட்டுள்ளன.

குறித்த முன்மொழிவுகளுடன் சுருக்கமான விபரங்களும் அனுப்பப்படவேண்டும். மேலும் ஆண்டு நிறைவு தொடர்பான முன்மொழிவுகளுடன் வருடத்தை உறுதிப்படுத்தும் தகவல்கள், எழுத்துமூலமான சாட்சிகள் என்பவற்றுடன் அனுப்புபவரின் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் முகவரி என்பவற்றை கையொப்பத்துடன் அனுப்பி வைத்தல் வேண்டும்.

குறித்த முன்மொழிவுகளை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்குமாறு பணிப்பாளர், முத்திரை காரியாலயம், தபால் தலைமையகம், இலக்கம் 310. டி.ஆர். விஜேவர்தன மாவத்த. கொழும்பு-10 என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 யூலை 30 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.